www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1-15 மார்ச்'90
5 — 8
விலை ரூ.2

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



## கிரிமினல் ராஜீவ் கும்பலை கைது செய் தண்டி!

படிப்பகம்

www.padippakam.com

# நிறவெறி விடுதலைப் போரைத் திசைதிருப்ப முயற்சி

27 ஆண்டுகால கொடிய - தனிமைச் சிறைக்குப் பிறகு வெற்றிப் புன்னகையோடும், உயர்த்திய முஷ்டியோடும் வெளியில் வந்திருக்கிறார், தென் ஆ∴பிரிக்கு விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா. கோடிக்கணக்கான தென் ஆ∴பிரிக்க மக்கள் மட்டுமல்ல, கறுப்பின மக்கள் மட்டுமல்ல உலகம் முழுவதும் வாழும் சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவத்தை நேசிக்கும் கோடானுகோடி மக்களும் நெல்சன் மண்டேலாவின் விடுதலையைக் கொண்டாடுகின்றனர்.

நெல்சன் மண்டேலா, தென் ஆ∴பிரிக்க தேசியக் காங்கிரசின் தலைவர், அதன் ஆயுதப்படைப் பிரிவின் பிரதமத் தளபதி; தென் ஆ∴பிரிக்க மக்களின் அன்புத் தலைவர். அவரது விடுதலை கால் நூற்றாண்டுக்கு மேலாக வெள்ளை நிற - இனவெறி அரசுக்கு எதிராக தென் ஆ∴பிரிக்கர்கள் நடத்திய வீரஞ்செறிந்த போராட்டத்தின் முதல்கட்ட வெற்றியாகும் என உலகமே போற்றுகிறது.

நிற - இன வெறிக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக ஒப்புக் கொண்டால் நெல்சன் மண்டேலாவை விடுவிப்பதாக பல ஆண்டுகளாக தென் ஆ∴பிரிக்க அரசு காட்டிவந்த ஆசை வார்த்தைகளை அவர் உறுதியாக நிராகரித்தார். தொடர்ந்து தென் ஆ∴பிரிக்க மக்கள் நடத்தி வந்த உறுதிமிகு போராட்டம்; நிற - இன வெறிக்கு எதிராக உலக மக்கள் குரல் கொடுத்து, தென் ஆ∴பிரிக்காவுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கும்படி ஏகா



27 ஆண்டுகளுக்கு பிறகு விடுதலையான மாண்டேலா; கையில் பேரக் குழந்தையுடன்.

திபத்தியங்களை நிர்ப்பந்தித்தது; ஆ∴பிரிக்கா முழுவதுமான கறுப்பின மக்கள் காட்டிய சகோதரத்துவ ஒருமைப்பாடு; குறிப்பாக வெள்ளை நிற - இன வெறிக்கு எதிரான ஆயுதப் போராட்டத்துக்கு அண்டை நாடுகள் கொடுத்த ஒத்துழைப்பு - ஆகியன காரணமாக நெல்சன் மண்டேலாவை விடுவிக்கும்படி நிற - இன வெறி அரசு நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவாக நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையடைந்த மண்டேலா, ''ஆயுதப் போராட்டம் தொடரும். அதைத் துவக்கியதற்கான காரணம் இன்னும் நீடிக்கிறது'' என்று தனது முதல் உரையிலேயே முழங்கியிருக்கிறார். ''தென் ஆ∴பிரிக்க வெள்ளை நிற - இன வெறி அரசின் மீது பல உலக நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடையைக் கைவிட வேண்டாம்'' என்றும் கோரியிருக்கிறார்.

மண்டேலாவின் விடுதலையைக் காரணங்காட்டி நிற - இன வெறி அரசுக்கு - அதன் அதிபர் டிகிளர்க்குக்கு ஜனநாயக மகுடம் சூட்டி ஆர்ப்பரித்த ஏகாதிபத்தியங்கள், மண்டேலாவின் முழக்கத்தைக் கேட்டு முகம் வெளிறிப் போயின. குறிப்பாக பிரிட்டனின் தாட்சரும், அமெரிக்காவின் புஷ்ஷும் மண்டேலாவின் பேச்சுக்கு வெளிப்படையாகவே தமது வெறுப்பைக் காட்டினார்.

''தென் ஆ∴ப்ரிக்க அரசுக்கு எதிராக இனிமேலும் பொருளாதாரத் தடை விதிப்பது அர்த்தமற்றது'' என்று தாட்சர் கூறிவிட்டார். அமெரிக்காவுக்கு வரும்படி மண்டேலாவுக்கு அழைப்பு விடுத்த, ஜார்ஜ் புஷ், ''பொருளாதாரத் தடைகள் பற்றி பேசுவதற்கு இது நேரமல்ல'' என்று சூசகமாகத் தனது எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

வெள்ளை நிற - இன வெறி அரசுக்கு எதிரான தென் ஆ∴பிரிக்க மக்களின் வீரமிக்க போராட்டம் 80 ஆம் ஆண்டுகளில் ஒரு உயர்ந்த கட்டத்தை எட்டியது. கறுப்பின சகோதரர்களுடன் வெள்ளையின மக்களும் நிறவெறிக்கெதிரான போராட்டத்தில் குதித்தனர். மண்டேலா தலைமையிலான ஆ∴பிரிக்க தேசிய காங்கிரசின் 'மிதவாத'ப் போக்கை நிராகரிக்கும் பல புதிய மக்கள் அமைப்புகள் தோன்றின.

தென் ஆ∴பிரிக்க மக்களின் தொழிற்சங்கக் காங்கிரசு, அனைத்து ஆ∴பிரிக்கன் காங்கிரசு, கறுப்புணர்வு இயக்கம், ஐக்கிய காங்கிரசு, அஜானிய மக்கள் இயக்கம், மக்கள் ஜனநாயக இயக்கம் ஆகியவை ஒன்றிணைந்து தலைமறைவு, ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றன. குழந்தைப் பருவத்தில் இருந்தபோதே அவர்களின் ஆயுதப் போராட்டத்தை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது, வெள்ளை நிற - இனவெறி அரசு. பல தலைவர்களையும் ஆயிரக்கணக்கான முன்னணிப் போராளிகளையும் கைது - சிறை - சித்ரவதை - கொலை என கொடுமைகள் புரிந்தது.

தீண்டாமை, தனிக்குடியிருப்பு; பள்ளி - கல்லூரி, பஸ் - ரயில் போக்குவரத்துகள், பூங்கா போன்ற இடங்களில் பாகுபாடு; ஒரே வேலைக்குக் குறைவான கூலி என ஏராளமான வகைகளில் நிற - இன வெறிக் கொள்கையைக் கடைப்பிடித்தது. பெரும்பான்மையினரான மக்களுக்கு அதிகாரம் இல்லாத தனி நாடாளுமன்றம், சிறுபான்மையினரான வெள்ளையருக்கு அதிகாரமுள்ள தனி நாடாளுமன்றம் போன்ற ஜனநாயக விரோதமான, அவசர கால ஆட்சி போன்ற காட்டுமிராண்டித்தனமான ஆட்சியைத் துப்பாக்கி முனையில் நடத்தியது. இப்போது தான் ஆ∴பிரிக்க தேசிய காங்கிரசுக்கு தடை, அவசர கால ஆட்சி நீக்கம், கலப்பு மண அங்கீகாரம், பொது இடங்களில் கறுப்பு - கலப்பின மக்களுக்க அனுமதி போன்ற சில சலுகைகள், மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மண்டேலா தலைமையிலான ஆ.தே.க., ''எல்லோருக்கும் (கறுப்பு, வெள்ளை நிற மக்கள்) சமமான ஜனநாயக - குடியுரிமைகள் வழங்குவது, நிறவெறியைக் கைவிட்டு பெரும்பான்மை மக்களது ஜனநாயக அரசு அமைப்பது ஆகிய கோரிக்கைகள் நிறைவேறாத வரை அமைதியான சூழ்நிலை ஏற்படாது'' என அறிவித்துள்ளது; இந்தக் கோரிக்கையை அடைய பேச்சுவார்த்தை, ஆயுதப் போராட்டம் இரண்டையும் பின்பற்றுவோம் என்கிறது.

ஏதாவத சில சலுகைகளைக் கொடுத்து பெரும்பான்மையினரது ஆட்சி என்கிற பெயரில் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய ஏகாதிபத்தியங்களுக்கு சார்பான தரகு அதிகார முதலாளிகளின் அடிவருடி அரசு ஒன்றை நிறுவிவிட முயலுகிறார்கள். மண்டேலா இதற்கு இசைவு தெரிவிப்பார் என்று ஏகாதிபத்தியங்கள் நம்புகின்றன. இனிமேலும் பழைய மாதிரியான 'நிற - இன வெறி ஆட்சி நீடிக்க முடியாது என்பதால் புதிய உத்திகளைக் கையாளுவதற்காகவே இப்படிச் செய்கின்றன.

மண்டேலாவின் குரல், விடுதலைக்குப் பிறகு மிதவாதத் திசையை நோக்கி மாறுகிறது என்பது உண்மைதான். அதோடு நிற வெறி எதிர்ப்பு, முதலாளித்துவ ஜனநாயகம் என்ற வரம்பை மீறி சுதந்திரமான, மக்கள் ஜனநாயகத்துக்கான விடுதலையை நோக்கி அவரது முழக்கங்கள் இல்லை. எனவேதான் மற்ற பிற இயக்கங்களுக்கு மாறாக, எதிராக மண்டேலாவுடன் சமரசம் செய்து கொள்ளுவதற்கு ஏகாதிபத்தியங்களும், நிற - இன வெறி அரசும் தயாராக உள்ளன. எவ்வாறாயினும் ஒரு குறைந்தபட்ச திட்டம் என்கிற முறையில் நிற - இன வெறிக்கு எதிராக நெல்சன் மண்டேலா தலைமையிலான விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டியது அனைத்து புரட்சிகர, ஜனநாயக சக்திகளின் கடமையாகும்.


படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

8

1-15 மார்ச்'90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா:US$

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# கொலை முயற்சி என்ற கூப்பாடு எதற்கு?

பாண்டிச்சேரி தேர்தல் பிரச்சாரத்திற்கு இடையே தனது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக இரவோடு இரவாகச் சென்னை திரும்பிய தமிழ்நாட்டின் பிரபல பொறுக்கி அரசியல் கதாநாயகி ஜெயலலிதா சென்னை அருகே கார் விபத்திலே சிக்கிக் காயமடைந்தார். இந்த விபத்துக் குறித்து ஜெயலலிதாவும், அவரது அரசியல் செல்வாக்கிலே அண்டிப் பிழைக்கும் கட்சித் தலைவர்களும், அவரது தயவால் நாற்காலி சுகம்காணும் காங்கிரசு வாழப்பாடி ராமமூர்த்தி, போலிக் கம்யூனிஸ்டு தா.பாண்டியன் போன்ற கூட்டணிக் கட்சித் தலைவர்களும் பரப்பி வரும் பிரச்சாரம் 'கருணாநிதியையும் அவரது கூட்டுக் கட்சிகளையும் மட்டுமல்ல, தமிழக மக்களையும் திடுக்கிடச் செய்துள்ளது.

''அரசியல் ரீதியில் தோற்றுப்போன கருணாநிதி, எம்.ஜி.ஆரைக் கொல்லப் பலமுறை முயன்றதைப் போலவே லாரியை விட்டு மோதி ஜெயலலிதாவைக் கொல்வதற்குச் செய்த திட்டமிட்ட சதி - கொலை வெறித்தாக்குதல் தானே தவிர, இது விபத்து அல்ல. சட்டமன்றத்திலே ஜெயலலிதாவை மானபங்கப்படுத்தித் தாக்கிய கருணாநிதி தான் இந்தக் கீழ்த்தரமான செயலை ஏவினார். கொலை முயற்சியில் ஈடுபட்ட குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும். இதற்காக கவர்னா மாளிகைக்குப் பேரணி போய்ப் போராடுவோம்'' - என்று ஜெயலலிதாவும் அவரது கட்சி மற்றும் கூட்டணியினரும் கூச்சல் போடுகின்றனர்.

கொலை முயற்சி குறித்து சந்தேகப்படத் தக்கது என்பதாகக் கூட அல்ல; திட்டமிட்ட சதி என்று உறுதிபடப் புகார் கூறுகிறார்கள். ஜெயலலிதாவின் சொகுசுக் கார் மீது மோதிய லாரியில் தி.மு.க.வின் கொடியும் சின்னமும் பொறிக்கப்பட்டிருந்தது; லாரி அந்தக் கட்சிக்காரருக்கச் சொந்தமானது என்பதுதான் அவர்கள் கூறும் ஆதாரம். கருணாநிதி அரசியல் கொலைகள் செய்யக் கூடியவர் அல்ல என்று நாம் கருதவில்லை. ஆனால் இந்த விபத்து அவரது திட்டமிட்ட சதி என்று நீருபிப்பதற்கான ஆதாரம் முயலுவது சட்டமன்ற ஆபாச -ரௌடித்தனங்களுக்குப் பிறகு ஏற்பட்டதைப் போன்ற எதிர்விளைவுகளும், ஜெயலலிதாவுக்கு அனுதாபமும் தேடித் தருவதாகவே முடியும்; அதுவும் தி.மு.க. கொடியும் சின்னமும் பொறித்த தி.மு.க. காரனின் லாரியை ஏவி விடுவது அரசியல் தற்கொலைக்கு ஒப்பாகும் - இதையெல்லாம் அறியாத அளவு கருணாநிதி அரசியல் முட்டாள் அல்ல.

எப்போது தேர்தல்கள் நடந்தாலும் ஜெயலலிதா ராஜீவ் கூட்டணி தான் வெல்லும் என்கிற அரசியல் நிலைமையே தமிழ் நாட்டில் நிலவுகிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல்களும், கருத்துக் கணிப்புகளும் அதையே காட்டுகின்றன. அது உறுதியாகிவிட்டதும் ஜெயலலிதா கும்பலுக்கு இருந்த பதவிப் பேராசை - பதவி மோகம் என்பது அதிகார வெறியாகவும் பதவிப் பித்துமாக வளர்ந்து விட்டது. எனவே தான் சட்டமன்ற ரௌடித்தனங்கள் - ஆபாசக் கூத்துகள், அரசியல் விலகல் நாடகங்கள், கொலை முயற்சி-சதி கூச்சல்கள் போட்டு சாத்தியமான விரைவில் பதவியைப் பிடிக்கத் துடிக்கிறார்கள். ஜெயலலிதாவின் செல்வாக்கு மங்கிவிடாமல் காப்பதற்கு இந்த அரசியல் செப்படு வித்தைகள் அவசியமெனக் கருதுகிறார்கள்.


ஜெயலலிதாவின் செப்படுவித்தைகளை ஆதரித்தோ, அவற்றோடு போட்டியிட்டோ தான் அரசியல் நடத்த முடியும் என்கிற அளவுக்கு அனைத்து ஓட்டுக் கட்சிகளும் சீரழிந்து போயுள்ளன. கருணாநிதி, ஜெயலலிதா கும்பலைப் போன்று கீழ்த்தரமானவரல்ல, தேர்ந்த திறமையும், நாகரிகமும் அனுபவமும் வாய்ந்த அரசியல்வாதி என்று அவரது கட்சியினரும் கூட்டணியினரும் கூறிவருகின்றனர். ஆனால் கருணாநிதியையும் அவரது கட்சியையும் கடந்த 40 ஆண்டுகாலமாக கவனிக்கும் போது அப்படிக் கருத முடியாது. கருணாநிதி கும்பலோடு மாறுபட்டு வெளியேறும் கட்சித் தலைவர்களைத் தாக்கியும் பொது இடங்களிலேயே செருப்பால் அடித்து அவமானப்படுத்தியும் வந்திருக்கிறார்கள். 1984 இல் ராஜீவ் கும்பல் செய்ததே, இந்திரா பிணத்தைக் காட்டி அனுதாப அரசியல் நடத்தி ஓட்டு வேட்டையாடும் உத்தி அதற்கு முன்னோடியாக 1967 இல் தனிப்பட்ட விவகாரத்தில் கட்டுக்காயமடைந்த எம்.ஜி.ஆரின் படத்தை காட்டி அனுதாப அலையை உருவாக்கினார்கள். தேர்தல் காலங்களில் தொண்டர்களின் பிணம் விழுந்தால் போதும் எடுத்து வைத்துக் கொண்டு அரசியல் ஒப்பாரி வைக்கத் தவறியதில்லை.

1984 தேர்தல்களின் போது எம்.ஜி.ஆர் உடல் நிலையை அரசியலாக்கி ஆதாயம் தேட கருணாநிதி கட்சி கேவலமான முறையில் பயன்படுத்த முயன்றது; ஆனால் அதுவே எதிர்விளைவை ஏற்படுத்தியது. கருணாநிதியே தேர்தல் சமயங்களில் தன்னைக் கொல்ல சதி-முயற்சி என்ற கூச்சல் போட்டு அனுதாபம் தேடத் தவறியதில்லை. 1967-ல் சைதை தொகுதியில் கருணாநிதி காரை மறித்து கொல்ல சிலர் தாக்கியதாகவும், ஒரு குடிசையில் இரவு தஞ்சம் புகுந்து தப்பியதாகவும் சரடு திரித்தார். 1988 தேர்தல்களின் போது ஒன்னரை அங்குல பேனாக் கத்தியுடன் 'அறிவாலயத்துக்கு வந்த கருணாநிதியின் 'உடன் பிறப்பை'யே பிடித்து கொல்ல வந்ததாக போலீசிடம் ஒப்படைத்து பிரச்சாரம் செய்தார். கருணாநிதி உருவாக்கிய கவர்ச்சிவாத பொறுக்கி - பிழைப்புவாத அரசியல் பாரம்பரியத்திலே வளர்ந்து அவரையும் விஞ்சி விட்டவர்கள் தாம் எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும்.

ஆக்கபூர்வமான கொள்கையோ, இலட்சியமோ; திட்டமோ இல்லாது, இலவச - கவர்ச்சிவாத அடிப்படையில் நடிகர்-நடிகைகள், கிரிமினல்-பொறுக்கி அரசியல்வாதிகளைக் கொண்ட பிழைப்புவாத அமைப்புகளே நாடாளுமன்ற அரசியலில் ஆதிக்கம் பெறுமளவு சீரழிவு நிலவகிறது. தொண்டர்களையும் மக்களையும் ஏய்த்தும் அவர்களை மோத விட்டு ரத்தம் குடித்தும் பிழைப்பு நடத்தும் இந்த ஓட்டுக்கட்சிகளோடு, இதற்கு அடிப்படையான நாடாளுமன்ற அரசியல் அமைப்பையும் அம்பலப்படுத்தித் தூக்கி ஏறிவோம்.

படிப்பகம்

www.padippakam.com





ராஜீவ்,



வின்சதா,



இந்துஜா,



அஜிதாப்

# கைது செய்! பகிரங்கமாக விசாரி! தண்டனை கொடு!

வேறுபல விவகாரங்களில் எப்படிப் போனாலும், ராஜீவ் கும்பலின் கிரிமினல் குற்றங்களைத் தோண்டித் துருவி வெளிக்கொண்டு வந்து நிருபிப்பதில் வி.பி.சிங் அரசு மிகுந்த அக்கறை காட்டுகிறது. அதிலே விரைவான, சுலபமான வெற்றிகளையும் ஈட்டிவருகிறது. ராஜீவ்கும்பலின் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளுக்கு உடந்தையாக இருந்து, மூடி மறைப்பதற்காக செயல்பட்டுவந்த அரசு உயர் அதிகாரிகளை முதல் காரியமாக களையெடுத்தது. தமக்கு நம்பகமான போலீசு - துப்பறியும் நிபுணர்கள், அதிகார வர்க்கத்தினர், சட்ட வல்லுநர்களைக். கொண்ட ஒரு பெரிய குழுவை அதற்காக வி.பி.சிங் உருவாக்கியுள்ளார். ஏறக்குறைய அதன் முழு நேரப் பணியாக ராஜீவ் கும்பலின் குற்றங்களை நிருபிப்பதற்கான ஆதாரங்களைத் தோண்டி எடுத்து நடவடிக்கை எடுப்பதையே ஒதுக்கியுள்ளது.

1977-79 ஜனதா ஆட்சி செய்த முந்தைய தவறுகளைச் செய்து, அவசரகோலத்தில் நடவடிக்கைகள் எடுத்து ராஜீவுக்கு அனுதாபத்தைத் தேடிக் கொடுத்துவிடக் கூடாது; அதற்காக திட்டமிட்டு, கவனத்துடன் அடியெடுத்து வைக்கிறது. அதேசமயம் மிகவும் இரகசியமாக, தந்திரமாக பத்திரிக்கைகளுக்குத் தகவல்களைக் கசியச் செய்து ராஜீவ் கும்பலுக்கு எதிரான பொதுக் கருத்து - பொதுத் தாக்குதல்களையும் தொடுத்து வருகிறது, வி.பி.சிங் அரசு.

போஃபார்ஸ் பீரங்கி பேர லஞ்ச ஊழல் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக ஜனவரி மாத இறுதியில் டெல்லி கோர்ட்டில் சி.பி.ஐ. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து, கிரிமினல் வழக்குத் தொடுத்தது. ஒரு சில நாட்களிலேயே, வி.பி.சிங் அரசே எதிர்பாராத வகையில் சுவிஸ் அரசு உதவி கிடைத்தது. போஃபார்ஸ் லஞ்சத் தொகையை இருப்பு வைத்திருந்த சுவிஸ் வங்கிக் கணக்குகள் ஐந்தும் முடக்கப்பட்டன. லஞ்சத் தொகையை மாற்றிப் போட்டிருந்த ராஜீவின் பினாமியும், அமிதாப்பச்சனின் தம்பியுமான அஜிதாப்பச்சனுக்குத் தொடர்புடைய ஆறாவது கணக்கு ஆச்சரியமான முறையில் திடீரென்று தெரியவந்து அதுவும் முடக்கப்பட்டது. ராஜீவ் கும்பலுக்கு அதிர்ச்சியூட்டும் இந்த முதல் நடவடிக்கையே வெற்றிபெற்றுவிட்டது.

போஃபார்ஸ் நிறுவனத்தின் முன்னாள் சேர்மன் மார்டின் ஆர்டுபோ மற்றும் பிற அதிகாரிகள், ஆயுதத் தரகர்களான வின்சத்தா, கோபிச் சந்த் இந்துஜா போன்ற 14 வகையினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதிகாரிகள் மற்றும் மந்திரிகளையும் பிறகு சேர்த்துக் கொள்ளும் வகையில் "இந்திய அரசு ஊழியர்கள்" என்கிற பொதுவகை 14வதாக உள்ளது.

மோசடி, நம்பிக்கைத் துரோகம், லஞ்ச ஊழல், கையாடல், அதிகார முறைகேடு, போலி ஆவணத் தயாரிப்பு போன்ற பல கிரிமினல் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. இவை இந்தியா, சுவீடன், சுவிஸ், பனாமா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நடந்துள்ளன. "இப்போதுதான் புலனாய்வு முயற்சி நடக்கிறது; முந்தைய அரசு குற்றங்களை மூடிமறைக்கவே முயன்றது" என்று அப்பட்டமாகவே சுவிஸ், சுவீடன் நாடுகளின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

போஃபார்ஸ் பீரங்கிபேர லஞ்ச ஊழல் கிரிமினல் வழக்கில், வங்கி இரகசிய முறையை ஒதுக்கி வைத்துவிட்டு அனைத்து விவரங்களையும் சேகரித்துத் தரும்படி சுவிஸ் அரசிடம் கோரும் மனு ஒன்றை டெல்லி வழக்குமன்றத்திடம் இருந்து சி.பி.ஐ. பெற்றுவிட்டது. அதை எடுத்துக் கொண்டு வழக்குப் புலன் விசாரணைக்குழு சுவிஸ் போயுள்ளது. மனுவை ஏற்றுக் கொண்டு சுவிஸ் அரசு விசாரணையைத் துவங்கிவிட்டதால் இன்னும் சில வாரங்களில் லஞ்சத் தொகை பெற்றவர்களின் பெயர் விவரங்களை அறிந்துவிட முடியும் என்று வி.பி.சிங் அரசு நம்புகிறது. ஆனால் ஆவணங்களைப் பெறக்கூடிய கட்டத்தில் குற்றவாளிகள் சட்டபூர்வத் தடைகளுக்கு எதிரிகள் முயலவும் கூடும்.

அதே சமயம், சுவீடனுக்கும் அந்த குழு போயுள்ளது. இதுவரை போஃபார்ஸ் லஞ்ச ஊழலை மூடி மறைப்பதில் ராஜீவ் அரசுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்திருந்த சுவீடனின் சமூக ஜனநாயக அரசும் கவிழ்ந்துவிட்டது. பெரும் அரசியல், பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சுவீடனுக்கு போஃபார்ஸ் நிறுவனத்தின் லஞ்ச ஊழல், ஆயுதக் கடத்தல் ஆகியன மேலும் தலைவலியாகிவிட்டது. எனவே அந்நாட்டு அரசியல் நிர்ணய சட்டக் கமிட்டி மீண்டும் போஃபார்ஸ் விசாரனையைத் தொடங்குவதோடு, வி.பி.சிங் அரசுக்கும் இந்த விவகாரத்தில் முழு ஒத்துழைப்பு தர முன்வந்துள்ளது. சுவீடனின் 'ஆளும்' சமூக ஜனநாயகக் கட்சியே போஃபார்ஸிடம் இருந்து லஞ்சம் பெற்றதும்; அதை ஒட்டிய தகராறு காரணமாகத் தான் ராஜீவின் கூட்டாளியும் சுவீடனின் பிரதமருமான ஒலஃப் பாமே சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலை விசாரணையை முடக்க முயன்றது; இந்தியா போஃபார்ஸ் லஞ்ச ஊழல் விவகாரத்தில் புகுந்தியது ஆகிய குற்றச்சாட்டுகள் கவிழ்ந்து போன பிரதமர் கார்ல்சன் மீதே சுமத்தப்படுகிறது.

சி.பி.ஐ. முன்பு ஆஜராகும்படி சம்மன் அனுப்பப்பட்ட வின்சத்தாவும், இந்துஜாவும் அதைத் தட்டிக் கழிக்க முயன்றனர். கைது உத்திரவு பிறப்பிப்பதோடு, சொத்துக்களைப் பறிமுதல் செய்வதாக மிரட்டிய பிறகு சம்மனை ஏற்றுக் கொண்டனர்.

போஃபார்ஸ் லஞ்ச ஊழல் விவகாரத்தில் அடைந்த வெற்றியின் காரணமாக, ஜெர்மன் எச்.டி.டபிள்யூ நீர்மூழ்கிக் கப்பல்கள் பேரத்தில் 30 கோடி ரூபாய் லஞ்சம் வாங்கியதன் பேரிலும் அதே போன்று நடவடிக்கைகள் எடுக்கவும் வி.பி.சிங் அரசு முடிவு செய்துள்ளது. ராஜீவ் கும்பலின் பினாமியான லலித் சூரியின் ஜப்பான் - சுமிட்டோமா, எண்ணெய்க் குழாய் பேரத்தில் 9 கோடி ரூபாய் வாங்கியது; லலித் சூரியின் ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் கட்டுவதற்காக அதிகார முறைகேடுகள் செய்து சலுகைகள், லைசென்சுகள், கடன்கள் வழங்



படிப்பகம்

www.padippakam.com

கியது: முன்னாள் சபாநாயகர் தீவன இயந்திர இறக்குமதியில் செய்த 4 கோடி ரூபாய் சுங்கத் தீர்வை மோசடி செய்தது; ராஜீவின் நெருங்கிய தரகு அதிகார முதலாளி திருபாய் அம்பானி பல்வேறு தொழில் - நிதி - கடத்தல் மோசடிகளில் ஈடுபட்டது - ஆகிய பலவற்றையும் குடையத் துவங்கி விட்டது, வி.பி.சிங் அரசு.

சமீபத்தில் நடந்த வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டர் மற்றும் ஏர்பஸ் விமான விபத்துகள் காரணமாக அவற்றை வாங்கிய விவகாரங்களிலும் ராஜீவ் கும்பல் லஞ்ச ஊழல் செய்ததாக மேலும் குற்றச்சாட்டுகள் குவிகின்றன.

போஃபார்ஸ் லஞ்ச ஊழல் விவகாரத்தைப் போலவே வி.பி.சிங்கின் விசுவாச ஊழியர்கள் ஆத்திரம் - அக்கறையோடு கவனம் செலுத்தும் இன்னொரு விவகாரம், வி.பி.சிங்கும் அவரது மூத்தமகன் அஜாய் சிங்கும் செயிண்ட் கிட்ஸ் தீவுகளில் 35 கோடி ரூபாய்க்கு கள்ளக்கணக்கு வைத்திருப்பதாக போலி ஆவணத் தயாரிப்புகள் (ஃபோர்ஜரிகள்) செய்து, தேர்தலுக்கு முன்பு இங்கே அவதூறுப் பிரச்சாரம் செய்தது. சர்வதேச ஆயுத - போதைமருந்து கடத்தல் மோசடி - மஃபியா கும்பலுடன் ராஜீவ் கும்பலுக்குள்ள இரகசியத் தொடர்புகளை இந்த விவகாரம் வெளிப்படுத்துகிறது.

''ராஜீவ் அரசு மீது லஞ்ச ஊழல் புகார்களைக் கூறும் வி.பி.சிங்கே, பல்வேறு லஞ்ச ஊழல், முறைகேடுகள் செய்து அவரது மகன் அஜாய் சிங் மூலமாக மத்திய அமெரிக்காவிலுள்ள செயிண்ட் கிட்ஸ் தீவுகளில் 35 கோடி ரூபாய் அளவு கள்ளக்கணக்கு வைத்திருப்பதற்கான ஆதாரங்கள் சிக்கியுள்ளன'' என்று நாடாளுமன்றத் தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு குவைத் மற்றும் துருக்கிப் பத்திரிக்கைகள் முதற்பக்க முழுச் செய்திகள் வெளியிட்டன. உடனே இந்தியாவில் ராஜீவுக்கு நெருக்கமான பிர்லாவின் இந்துஸ்தான் டைம்ஸ், காங்கிரசு எம்.பி.யின் தி டெலிகிராப் ஆகிய நாளேடுகள் பக்கம்பக்கமாக பல ஆவணங்களுடன் கூடிய கட்டுரைகள், பேட்டிகள் வெளியிட்டன. ஆவணங்களில் இருந்த கணக்குத் தவறுகள், முத்திரைகள், பயன்படுத்தப்பட்ட எழுத்துப் பொறிகள், தேதிகள், கையொப்பங்கள் போன்ற பல மோசடிகளை வி.பி.சிங்கும் அவரது ஆதரவுப் பத்திரிக்கைகளும் விளக்கின.

ஹார்டுபோ - சந்திராசாமி



இருந்தபோதும் போதைமருந்து கடத்தலில் சிக்கியுள்ள, மூடப்பட்ட அந்த வங்கி நிர்வாகிகள் ராஜீவ் கும்பலுக்கு சாதகமான முறையில் பல பொய்யான சாட்சியங்கள் கூறினர். ''வி.பி.சிங்கின் கள்ளக் கணக்கு ஆவணங்களை சரிபார்த்து அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் உறுதிச் சான்றுகள் வழங்கியுள்ளனர்; ஆகவே அவை உண்மையானவைதான்'' என்று ராஜீவ் அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்தியது. போலி ஆவணங்களின் அடிப்படையிலேயே அஜாய் சிங் மீது அந்நியச் செலாவணி மீறல் குற்ற விசாரணைகளை நடத்தியது. ஆனால் வடமாநில மக்களிடையே இந்த அவதூறுகள் எடுபடாமல் போகவே ராஜீவ் கும்பல் தூக்கி எறியப்பட்டது.

வி.பி.சிங் ஆட்சிக்கு வந்ததும் மேற்படி போலி ஆவணத் தயாரிப்பு, அவதூறுகளுக்குக் காரணமானவர்கள் மீது விசாரணை துவங்கி பல திடுக்கிடும் தகவல்களைக் கண்டுபிடித்துள்ளது. சர்வதேச ஆயுத - போதைமருந்து கடத்தல் மோசடி சாமியார் சந்திராசாமி, அவனது சகா மாமாஜி என்ற கைலாஷ் அகர்வால், வெளிநாடுகளில் உள்ள லாரி கோலப் போன்ற அவனது கூட்டாளிகள், ராஜீவ் கும்பலைச் சேர்ந்த ஆர்.கே.தவான், எஸ்.கே.சிங், டி.என்.சேஷன் போன்ற அதிகாரிகள் அந்த ஆவணங்களைப் போலியாகத் தயாரித்தனர். நான்டே என்ற நிதி அமைச்சக அதிகாரி அவற்றை எடுத்துக் கொண்டுபோய் தென் அமெரிக்கத் தீவுகளுக்கான இந்தியத் தூதர் சிவகுமார், அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதர் ஆர்.கே. ராய் ஆகியோரிடம் உறுதிச் சான்றிதழ் பெற முயன்றார். அவர்கள் மறுக்கவே அப்போதைய வெளிவிவகார மந்திரியும், சந்திரசாமியின் சீடருமான நரசிம்மராவ் மிரட்டி, வாய் வழி உத்தரவு போட்டு உறுதிச் சான்றிதழ் பெற்றார்.

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி, மேற்படி போலி ஆவணங்கள் தயாரிப்பு மற்றும் அந்நியச் செலாவணி குற்றங்களுக்காக சந்திராசாமி, மாமாஜி வீடுகளில் சி.பி.ஐ. சோதனைகள் நடத்தியுள்ளது. இதே சந்திராசாமி, மாமாஜி அவர்களின் எஜமானனும் சர்வதேச ஆயுதக் கடத்தல் மன்னனுமான ஆதனான் கஷோகி ஆகிய கும்பல்தான் போஃபார்ஸ் விவகாரம் பற்றிய ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக வி.பி.சிங் ஆதரவு இந்தியன் எக்ஸ்பிரஸ் கோயங்கா, அருண்சோரி, ராம்ஜெத்மலானி ஆகியோருடன் கூடிக் குலாவினர். சந்திராசாமி கும்பலைப் பிடித்து சி.பி.ஐ. மிரட்டியபோது அவர்கள் ராஜீவ் கும்பலுக்கு சாதகமாக கட்சி மாறி மேற்படி மோசடிகளைச் செய்தனர்.

ஆக, கடந்த மூன்றாண்டுகளில் வெளிவந்த பல்வேறு கிரிமினல் குற்றங்கள் பற்றிய தகவல்கள் படுபயங்கரமான உண்மைகளைச் சொல்லுகின்றன. முக்கியமாக, ✱ 1984 நவம்பர் டில்லி சீக்கிய மக்கள் படுகொலைகள் முதல் 1989 ஆகஸ்டு செயிண்ட் கிட்ஸ் தீவுகள் போலி ஆவணத் தயாரிப்புவரை அடுக்கடுக்கான கொடிய - மரண தண்டனைக்குரிய - கிரிமினல் குற்றங்களை பாசிச ராஜீவ் கும்பல் செய்திருக்கிறது. ✱ சர்வதேசிய ரீதியில் ஆயுத - போதை மருந்துக் கடத்தல், விபச்சார - நிதி மோசடிகளில் ஈடுபடும் கிரிமினல் - மஃபியா கும்பலுடன் நெருங்கிய கூட்டு - சதியில் ராஜீவ் கும்பல் சம்பந்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றங்களுக்காக பாசிச ராஜீவ் கும்பலைத் தண்டிப்பதற்குப் பதில் அரசியல் ஆதாயம் பெறும் அளவுக்கு மட்டும் அம்பலப்படுத்துவது என்கிற நோக்கில் வி.பி.சிங் அரசு செயல்படுகிறது. இந்தக் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்ததோடு, அம்பலப்பட்டுப் போன பிறகு அவற்றை மூடிமறைக்க முயன்ற அதிகாரிகளிடம் தயவுகாட்டுகிறது. நடவடிக்கையெடுப்பது, அரசியல் பழிவாங்கும் நோக்கமுடையதென்று கூறி ராஜீவ் கும்பல் அனுதாபம் தேட வாய்ப்பாகிவிடும் என்று அஞ்சுகிறது. அரசியல்வாதிகளுக்கிடையே பரஸ்பரம் சமரசம் - விட்டுக் கொடுப்பு என்கிற முறையில் தயக்கம் காட்டுகிறது.

இன்னொரு காரணம், அதே சர்வதேச ஆயுத - போதை மருந்துக் கடத்தல் கும்பலுடன், குறிப்பாக சந்திராசாமியுடன் ஜனதாதளத் தலைவர்களான தேவிலால், சந்திரசேகர், அரிஃப்முகமது கான் ஆகியோர் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளனர். இப்போதைய மந்திரி அருண்நேரு போன்ற சிலர் ராஜீவ் கும்பலில் இருந்தவரை அதன் குற்றங்களில் பங்கெடுத்துள்ளனர்.

பாசிச இந்திரா - ராஜீவ் கும்பல் கடந்த 20 ஆண்டுகளில் பல புதிய புதிய கருப்புச் சட்டங்களை இயற்றி, பயங்கரவாத - அதிகாரவர்க்க அரசு எந்திரத்தை கட்டி வளர்த்துள்ளது. அவை இன்றி மேற்படி கிரிமினல் குற்றங்களை அது செய்ய முடிந்திருக்காது. எனவே,

● பாசிச ராஜீவ் கும்பலைக் கைது செய்து அதன் கிரிமினல் குற்றங்களுக்காக பகிரங்கமாக விசாரித்துத் தண்டிக்க வேண்டும்.

● பாசிச இந்திரா - ராஜீவ் கும்பல் உருவாக்கிய கருப்புச் சட்ட - பயங்கரவாத அரசு அமைப்பை கலைக்க வேண்டும்.

● தகவல் அறியும் உரிமை, அரசு உயர் தலைமையினர் அனைவர் மீதும் வழக்குத் தொடுக்கும் உரிமை உட்பட ஜனநாயக, குடியுரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் வி.பி.சிங் அரசு இவற்றுக்கு மாறாக அரசியல் அம்பலப்படுத்துதல்கள், விசாரணைக் கமிஷன்கள் என்று கண் துடைப்பு வேலைகளில் ஈடுபடுகிறது.

— கரீம்

படிப்பகம்

www.padippakam.com

# திருப்பு முனை மாய்மாலம்

## தி.மு.க. பிழைப்பு வாதம்





"பெரியார் காலத்தில் தொடங்கப்பட்ட சமுதாய சீர்திருத்தக் கொள்கையை தி.மு.க. கடைபிடிக்காமல் பாதை தவறிவிட்டது. அதை இம்மாநாட்டின் மூலம் சரியான பாதை நோக்கி திருப்பிவிடுவதால் (சமுதாய சீர்திருத்தத்தை கழகம் தொடர்ந்து கடைபிடிக்கப் போவதால்) 'திருச்சியிலே ஒரு திருப்புமுனை' என்றேன்" என்று பல நாட்களாக சஸ்பென்சாக வைத்து, பரபரப்பை ஏற்படுத்திய கருணாநிதி திருச்சி 6வது மாநில மாநாட்டில் சஸ்பென்சை அவிழ்த்துவிட்டார்.

அரசியல் 'ஸ்டண்ட்' அடித்து பரபரப்பை ஏற்படுத்துவது, கவர்ச்சிகர இலவசத் திட்டங்களை அறிவிப்பது, தனி நபர் வழிபாட்டை - மோகத்தை வளர்ப்பது இவைகள்தான் பிழைப்புவாதக் கட்சிகளின் (திராவிடக் கட்சிகளின்) உயிர்நாடியே. இருந்தாலும் தற்பொழுது பதினைந்து வருட காலமாக கூட்டப்படாத மாநில மாநாடு திடீரென உதித்ததற்கு சில துணை காரணங்களும் இருக்கின்றன.

சென்ற பாராளுமன்றத் தேர்தலிலே தி.மு.க. மண்ணை கவ்வியதால் மக்கள் மத்தியில், கட்சித் தொண்டர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அவநம்பிக்கை; ஜெயலலிதா, சட்டமன்றத் தேர்தலிலே எதிர்க்கட்சியாக வந்து இன்றுவரை பல அரசியல் 'ஸ்டண்டுகள்' அடித்து தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டு வளர்ந்து வருவது; வை.கோபால்சாமி போன்றோர் இலங்கைப் பிரச்சினையில் தீவிரம் காட்டுவதாக செய்யும் பித்தலாட்டங்கள், இளைஞர்கள் மத்தியில் வரவேற்பை பெற்று தி.மு.க. தலைமையை கேள்விக்குள்ளாக்கி நிற்பது; தி.மு.க.வில் கோஷ்டிப் பூசல்கள் வலுப்பெறுவதைக் கண்டு எங்கே தனக்குப் பின் தலைவர் பதவிக்கு தனது வாரிசான ஸ்டாலினை உருவாக்கும் முயற்சி தோல்வியடைந்துவிடுமோ என்கிற பயம் - இவைகளெல்லாம் கருணாநிதியை ஒரு பரபரப்பை ஏற்படுத்த நிர்பந்தித்தன. இதனால் விளைந்ததே தி.மு.க 6வது மாநில மாநாட்டு திரும்புமுனை.

தி.மு.க.வில் கருணாநிதிக்கு அடுத்தப் புள்ளியாக வளங்கும் அன்பழகனைவிட மாநாட்டுத் திடலிலும் நகரிலும் ஸ்டாலினுக்கு கட்-அவுட்டுகள், போஸ்டர்கள், ஊர்வலத்திலே முழக்கங்கள் என பலவாறு விளம்பரப்படுத்தியும்; இளைஞர்கள் மாநாடு என ஒருநாள் ஒதுக்கி ஸ்டாலினின் புகழ்பாட வாய்ப்பு ஏற்படுத்தியும் கருணாநிதி தனது மகனை அடுத்த அரசியல் வாரிசாக்க இம்மாநாட்டை பயன்படுத்தியிருக்கிறார் என அவர்கள் கட்சிக காரர்களே பேசிக் கொண்டார்கள்.

மாநாட்டிற்கு வந்த கூட்டம் மொத்தம் சுமார் 6 லட்சம் பேர்தான் இருப்பார்கள். ஆனால், தனது ஆதரவுப் பத்திரிக்கைகள் மூலம் 25 லட்சம் பேர் என எழுதியும், குறைவாக எழுதிய பத்திரிக்கைகளை ஆளுங்கட்சி என்கிற திமிரில் திட்டியும் எச்சரித்தும், பாராளுமன்றத் தேர்தலில் தோற்றாலும் மக்கள் தி.மு.க. வைத்தான் ஆதரிக்கிறார்கள் என்ற மாயையை ஏற்படுத்தி தூங்கிக் கொண்டிருக்கும் தொண்டர்களை எழுப்புவதற்குத் தான் இம்மாநாடு.

சுயமரியாதை, பகுத்தறிவு, மூடநம்பிக்கை ஒழிப்பு, தமிழுணர்வு, தமிழ் பண்பாடு பற்றியெல்லாம் பேசி சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளாக அறிவித்தாலும், இம்மாநாட்டின் மூலமே அவைகளுக்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமில்லையென்று நிருபித்துக் கொண்டார்கள்.

மாநாட்டு மேடையில் அமர்ந்திருந்த கருணாநிதி, சிறுநீர் கழிப்பதற்காக எழுந்து போனால், போய்விட்டு திரும்பி வந்தால் மேடையிலமர்ந்திருக்கும் மற்ற தலைவர்கள் எழுந்து நிற்கிறார்கள். மாநாட்டிலே தலைவர்களின் புகைப்படங்களைத் திறந்து வைத்து பேச வாய்ப்பு கிடைத்ததை, கருணாநிதி பிச்சைப் போட்டதாகப் புகழ்ந்து தள்ளினார்கள். சுயமரியாதையும், பகுத்தறிவுச் சிந்தனையும் உருப்பெறாத நில பிரபுத்துவக் காலத்தில் மன்னரிடம், மன்னரது பரிவாரங்கள் நடந்துகொண்டதைப் போன்ற நடைமுறையை வைத்துக் கொண்டு திருச்சி சிவா கர்ஜிக்கிறார், "தன்மானத்தையும், தனித்தன்மையையும் இழக்காத நாங்கள் சுயமரியாதைச் சிங்கங்கள்" என்று. மாநாட்டிலே கருணாநிதியின் பட்டங்களை பச்சைக் குத்திக் கொண்டும் அலகு குத்திக் கொண்டும் அலைந்த தொண்டர்களை காண முடிந்தது. மாநாட்டு மேடையின் முன் வரிசையில் 2 நாள் மதுரை ஆதீனத்தைக் காண முடிந்தது. மாநாட்டைச் சுற்றிலும் கள்ளச் சாராயம் விற்கப்பட்டு, மாநாட்டுத் திடலில் நுழைந்ததும் சாராய பாட்டில்கள், போதைத் தகராறுகள் பரவலாகக் காணப்பட்டன. நன்னிலம் நடராசன் போன்றோர் பேச்சுக்களில் ஒரே ஆபாசம் - சகிக்க முடியாதவை. - இதுதான் தி.மு.க.வின் பகுத்தறிவு கலாச்சாரம்.

மாநாட்டிலே கருணாநிதி பேசும்பொழுது ஆற்காடு வீராசாமி ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுத்ததை நாகரிகமற்ற முறையில் மரியாதைக்குக் கூட வாங்கி வைத்துக் கொள்ளாமல் ஆணவமாக தூக்கி எறிந்தார் கருணாநிதி. இளைஞரணியைச் சேர்ந்த அன்பழகன் நேரம் முடிந்தும் பேசுகிறார் என்றால் கடிதம் மூலம் நேரமாகிவிட்டதை வலியுறுத்துவது தானே நாகரீகம், ஆனால் ஆற்காட்டு வீராச்சாமி "எவ்வளவு நேரம் பேசுவது சீக்கிரம் முடி" என மைக் அருகே வந்து கத்தினார் - இதுதான் தி.மு.க.வின் பண்பாடு.

மாநாட்டு மேடையிலே முன் வரிசையில் அமர்ந்து மன்னை நாராயணசாமி தூங்கினார். கோடிக்கணக்கில் மாநாட்டிற்கு செலவாகியிருக்கும் என கட்சிக்காரர்களே கணிக்கும் பொழுது, 19 லட்சம் என ஜோடித்தார் கருணாநிதி. இளைஞரணியை சேர்ந்தவர்கள் 50,100 கி.மீ. என ஓடிவந்து மேடையிலே கருணாநிதியிடம் ஏந்தி வந்த தீப்பந்தத்தை ஒப்படைக்கும் பொழுது அரை நிமிடம் கூட அனுமதிக்காமல் நாயைப்போல விரட்டி கீழிறக்கினார்கள். தொண்டர்கள், கருணாநிதியைப் பார்க்க முந்தியடித்துக் கொண்டு மேடை நோக்கி வந்து முன்னே அமர்ந்திருக்கும் முக்கியப் புள்ளிகளுக்கு இடையூறாகும்பொழுது கட்டுப்படுத்த தொண்டர் படையை ஏவிவிட, அவர்கள் அடித்து - இழுத்து - 'அலாக்காக' வெளியே தூக்கி கொண்டு போனார்கள். இவைகள் தான் தி.மு.க.வின் நேர்மை - பொறுப்புணர்வு - உடன்பிறப்புக்களின் மீதுள்ள உயிர்ப்பாசம்.

- இப்படி பிழைப்புவாதிகள், பித்தலாட்டக்காரர்கள், பதவி வெறியர்கள், பிற்போக்குவாதிகள் என்றெல்லாம் தங்களுக்குத் தாங்களே மாநாட்டின் மூலம் முத்திரை குத்திக் கொண்டார்கள். மேலும், மார்க்ஸ், லெனின், மாவோ, பகத்சிங் போன்றவர்களது போராட்டப் பாரம்பரியத்திலே வந்ததாக காட்டிக் கொள்ள முயன்று அவர்களது சித்தாந்தங்களை தமது பிழைப்புவாதத்திற்காக திரித்து கொச்சைப்படுத்தி தம்மை கம்யூனிச விரோதிகள் என நிரூபித்துக் கொண்டார்கள்.

இனியும் இவர்களை நம்பி, இருப்பதையும் இழந்துவிட்டுத் தான் நிற்கப் போகிறோமா அல்லது புரட்சிகர சக்திகளாக மாறி, ஒளிமயமான எதிர்காலத்தைப் படைக்க ஆயத்தமாகப் போகிறோமா? என்று தி.மு.க. இளைஞர்கள் சிந்திக்க வேண்டும்.

— மான்



படிப்பகம்

www.padippakam.com

# சாதிய எதிர்ப்பும் ஓட்டுக்கட்சிகளின் யோக்கியதையும்

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சாதிக் கலவரத்தால் ரணகளமாகிய தேவாரம் இன்னமும் அமைதி நிலைக்குத் திரும்பாமல் நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது. கலவரத்தில் பாதிக்கப்பட்ட சாதியினரிடையே உள்ள கசப்புணர்வும், ஆத்திரமும் இன்னமும் மாறிவிடவில்லை. சாதியப் பகைமை காரணமாக சிறு சலசலப்பு ஏற்பட்டால் கூட அது மீண்டும் கலவரமாக உருவெடுக்கும் அபாயம் உள்ளது. எனவே, உழைக்கும் மக்களிடையே நிலவும் சாதியப் பகைமைக் கண்ணோட்டத்தைப் போக்கவும், மீண்டும் கலவரம் நிகழாமல் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் சர்வ கட்சியினரைக் கூட்டி இயக்கம் எடுக்கலாம் என விவசாயிகள் விடுதலை முன்னணி தீர்மானித்தது.

அதனடிப்படையில், விண்ணப்பங்கள் தயாரித்து அனைத்துக் கட்சிப் பொறுப்பாளர்களிடம் கொடுத்தோம். அதிலே, சாதி வெறிக்கு மக்கள் பலியாவதைத் தடுக்க வேண்டும்; சாதி - மத அமைப்புகளைப் புறக்கணித்து ஜனநாயக அமைப்புகளில் உழைக்கும் மக்கள் திரள வேண்டும்; இதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தோம். இது குறித்து ஒவ்வொருவரிடமும் கருத்து கேட்டிருந்தோம். வலது கம்யூனிஸ்ட் கட்சி என்றழைக்கப்படும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, திரு.பாண்டியன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி, தி.மு.க. அ.தி.மு.க. ஆகியோர் சம்மதம் தெரிவித்தனர். காங்கிரசுக் கட்சிப் பிரமுகர்களைச் சந்திக்கவே முடியவில்லை. 'மார்க்சிஸ்ட்' கட்சியினர் நீங்களும் நாங்களும் எங்குமே கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதால் மேல் கமிட்டியைக் கேட்டுச் சொல்கிறோம் என்றனர். அதன் பிறகு, எங்களுக்கு வேலை அதிகமாக இருந்ததால் தலைமையிடம் இதுபற்றி கேட்கவில்லை என்றனர். பின்னர், மீண்டும் அணுகிய போது எங்கள் தாலுகா செயலாளரை நீங்களே போய் சந்தியுங்கள் என்று ஒதுங்கிக் கொண்டனர்.

நாம் எடுத்துவரும் முயற்சியை மோப்பம் பிடித்த போலீசார், ஒவ்வொரு கட்சிப் பிரமுகர்களையும் தனித்தனியே சந்தித்து தங்கள் 'கடமையை' நிறைவேற்றினர்.

நாம் ஒரு தேதியைக் குறிப்பிட்டு, ஒரு பள்ளியை கூட்டத்திற்காக ஏற்பாடு செய்து, அனைவரையும் அங்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தோம். முன் குறிப்பிட்ட இரண்டு 'கம்யூனிஸ்ட்' கட்சிப் பிரமுகர்களும் உரிய நேரத்திற்கு வந்து விட்டனர். பின்னர் வந்த தி.மு.க. பிரமுகர், "பகுதிச் செயலாளர்தான் இதற்குப் பொறுப்பு; என்னால் எதுவும் செய்ய முடியாது" என்று கூறி நழுவிக் கொண்டார். ஆனால் இக்கூட்டத்திற்கு சற்று முன்பு வரை நான் கட்டாயம் வந்து கலந்து கொள்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தார், அ.தி.மு.க. பிரமுகர்கள் • யாருமே வரவில்லை.

பிழைப்புவாத அரசியல் கட்சிகளுக்கு சாதி - மதப் பகையுணர்வுதான் ஓட்டுப் பொறுக்குவதற்கான முக்கியமான துருப்புச் சீட்டு. அதை இழந்துவிட அவர்கள் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள். கூட்டாகச் செய்ய வேண்டும் என்ற நமது கருத்தை எதிர்க்கத் திராணியின்றி ஆமோதித்து விட்டு பின்னர் நழுவிக் கொள்ளும் இப்பேடிகள் தான், சாதி ஒழிய வேண்டுமென வெட்கமின்றி மேடையேறிக் கூச்சலிடுகின்றனர். சாதியை ஒழிப்பது அல்ல; சாதிக் கலவரத்தில் மாளும் மக்களது பிணங்களின் மீதேறி பதவியைப் பிடிப்பது ஒன்றே இவர்களின் லட்சியம் என்பதை தெளிவாகவே உணர்த்தி விட்டார்கள். இதிலே இப்பகுதியைச் சேர்ந்த சேர்ந்த இரு 'கம்யூனிஸ்ட்' கட்சியினர் மட்டும் விதிவிலக்காக உள்ளனர். கூட்டு நடவடிக்கைக்கான எமது முயற்சி பலனளிக்காத நிலையில், தனித்து நின்று, சாதி எதிர்ப்புப் பிரச்சாரத்தினூடே மக்களிடையே நிலவும் சாதியைப் பகையுணர்வைப் போக்க கடுமையாக உழைப்பது என்று தீர்மானித்து உற்சாகத்துடன் நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

**— விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**உத்தமபாளையம் வட்டம்.**

# அதிகார வர்க்க போலீசு கும்பலின் கூட்டுச் சதி

உத்தம பாளையம் வட்டத்தில் தேவாரம் - போடி சாதிக் கலவரத்தின் போது சாதி வெறியாட்டத்தைக் கட்டுப்படுத்தவோ, கலவரத்துக்குக் காரணமான சாதி வெறியர்களைக் கைது செய்யவோ வக்கற்ற போலீசுத் துறை, தேவாரம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள பல அப்பாவி விவசாயிகளை குற்றப் பட்டியலில் சேர்த்துள்ளது. கலவரத்திற்கு இரு தரப்பினருக்கும் சமமான பங்கு உள்ளதென காட்டுவதற்காக, சாதி இந்துக்களில் 101 பேரையும், 'தாழ்த்தப்'பட்டோரில் 101 பேரையும் குற்றப் பட்டியலில் இணைத்து அனைவரையும் கோர்ட்டில் ஆஜராகும்படி உத்திரவு போட்டுள்ளனர்.

இதிலே டி.மீனாட்சிபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், விவசாயிகள் விடுதலை முன்னணியின் கிளை செயலர் தோழர் மகாலிங்கம் மற்றும் ராஜேந்திரன் ஆகியோரை குற்றப் பட்டியலில் இணைத்துள்ளனர். நாம் சாதி மத எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்தும் கூட, நம்மைப் பழிவாங்கத் துடிக்கும் போலீசின் சூழ்ச்சியை அம்பலப்படுத்தி தேவாரம் கடை வீதியில் தட்டி எழுதி வைத்தோம். அதோடு சுவரொட்டி இயக்கத்தையும் மேற்கொண்டோம்.

அதன் பிறகு, குறிப்பிட்ட நாளில் தோழர்கள் கோர்ட்டுக்குச் சென்றனர். குற்றப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த அனைவரும் தத்தமது சாதிக்கேற்ப சாதிய சங்கங்கள் மூலமாக வழக்கை நடத்த முயன்றனர் ஆனால் வி.வி.மு. தோழர்கள் இவை எதிலும் சேராமல் தனியாக நின்று, வழக்கறிஞர் மூலம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பின்னர், மாவட்ட ஆட்சியாளர், துணை ஆட்சியாளர், வட்டாட்சியர், போலீஸ் ஆய்வாளர் ஆகியோருக்கு எமது நிலைப்பாட்டினை எடுத்து விளக்கி, இது குறித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கடிதம் மூலம் கோரினோம். அதற்கு எந்தவித பதிலும் யாரிடமிருந்தும் வரவில்லை.

போலீசின் கண்மூடித்தனமான இந்தக் குற்றச்சாட்டுகளை எதிர்த்து எமது நிலையை விளக்கி ஒரு கண்டனப் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கோரினோம். அனுமதியும் மறுக்கப்பட்டது.

பின்னர், குறிப்பிட்ட நாளில் தோழர்களுக்கு வாய்தா வரவே அன்று நமது வழக்கறிஞருடன் சென்றோம். கோர்ட்டில் நமது வழக்கறிஞர் வி.வி.மு.வின் கொள்கைகள் எப்படிப்பட்டது; தோழர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை விளக்கி, புரட்சிகர அமைப்பான வி.வி.மு.வைப் பழிவாங்குவதற்குத்தான் போலீசார் இப்படிச் செய்துள்ளனர் என்று வாதிட்டு, அதிகார வர்க்க - போலீஸ் கும்பலின் முகத்திரையைக் கிழிக்கத் தொடங்கியதும், அன்று கோர்ட்டுக்கு வந்திருந்த மக்கள் அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்து நமக்கு ஆதரவளித்தனர். சாதி-மத வேறுபாட்டையும், ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடி வரும் நிரபராதிகளான வி.வி.மு. தோழர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யுங்கள் என்று நமது வழக்கறிஞர் மாவட்ட ஆட்சியாளரிடம் கோரினார். அவர் போலீஸ் துணை ஆணையாளரிடம் கேட்க, அவரோ தமக்கு எதுவும் தெரியாது என்று தனது மேலதிகாரியைக் காரணம் காட்டி நழுவிக் கொண்டார். ஆனாலும் இன்றுவரை யாரையும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கவில்லை.

அதிகார வர்க்க-போலீசு கும்பலின் சூழ்ச்சிகள் நாமறிந்தவைதான். இருந்தாலும் எவ்வித ஆதாரமும் இன்றி நம்மை இம்சைப்படுத்த திட்டமிட்டு செய்த சதி என்பதை பொதுமக்கள் மேலும் உணர்வதற்கு, எமது கோர்ட் நடவடிக்கை மிகவும் பயனுடையதாக இருந்தது. இதன் மூலம் நம்மீது எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதை எதிரிக்கு எதிராகவே திருப்பிவிட வேண்டும் என்ற படிப்பினையை நாங்கள் உணர்ந்து கொண்டோம்.

**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**உத்தம்பாளையம் வட்டம்.**

படிப்பகம்

www.padippakam.com

## 9 மாநிலங்களில் தேர்தல்:

# கிரிமினல்கள் சாதி - மத வெறியர்களின் காலடியில்...

உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று பீற்றிக் கொள்ளப்படும் இந்தியாவின் எட்டு மாநிலங்களிலும் (பீகார், ம.பி., ஒரிசா, மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், இமாசல பிரதேசம், அருணாசல பிரதேசம்) புதுவை யூனியன் பிரதேசத்திலும் பிப்.27 அன்று சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. வழக்கம் போலவே ஓட்டுக் கட்சிகளின் வெற்று வாக்குறுதி மழையும், பணமழையும் வெள்ளமாய் பாய்கிறது. எந்த வேட்பாளர் வெற்றி பெறுவார் என்பதைவிட, சாதி - மத வெறி ஆதிக்கமா, பண ஆதிக்கமா, கிரிமினல் - மாஃபியாக்களின் ஆதிக்கமா, எது வெல்லும் என்பதைத் தீர்மானிக்கும் தேர்தலாக நாடாளுமன்ற ஜனநாயகம் இழிந்த இறுதி நிலையை அடைந்து விட்டது.

### கவர்ச்சித் திட்ட மழை

கொள்கைகளைப் பேசி ஓட்டுப் பொறுக்குவது முட்டாள் தனம் என்று ஏற்கனவே முடிவு செய்து விட்ட ஓட்டுக் கட்சிகள் கவர்ச்சி வாதத்தை அவிழ்த்து விட்டு களத்தில் இறங்கின. அதிலும், இதுவரை ஆட்சியில் இருந்த காங்கிரசு மாநில முதல்வர்கள் கண்ணை மூடிக் கொண்டு கவர்ச்சித் திட்டங்களை வாரியிறைத்தனர். குஜராத்தில் காங்கிரசு முதல்வர் சோலங்கி, ஏழைகளுக்கு தினமும் ஒரு வேளை உணவு, விவசாயக் கடன்களை ரத்து செய்வது, பெண்களுக்கு சேலை, தாழ்த்தப் பட்டோருக்கு மேலும் 50% கூடுதல் சலுகை என்று அடுக்கடுக்கான திட்டங்களை அவிழ்த்து விட்டார். எதிர்க்கட்சியாக களத்தில் போட்டியிட்ட பாரதீய ஜனதா, மேலும் ஒருபடி முன்னேறி "குஜராத்தில் யாரும் பட்டினியோடு உறங்க அனுமதிக்க மாட்டோம்" என்று அறிவித்தது.

ராஜஸ்தானில் பாராளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு புதிதாக திணிக்கப்பட்ட காங்கிரசு முதல்வர் ஜோஷி, வேலைக்கான நேர்முகத் தேர்வுக்கு வரும் வேலையில்லா இளைஞர்களுக்கு இலவச பேருந்து பயணம் ஏற்பாடு செய்து தருவதாக வாக்களித்தார். பீகார் முதல்வரான ஜெகந்நாத் மிஸ்ரா, ரூ.15,000 வரை விவசாயக் கடன்கள் அனைத்தும் ரத்து, முதியோர் பென்ஷன் தொகையை இருமடங்கு உயர்த்துவது, விவசாய உபயோகத்துக்கு இலவச மின்சாரம் என்று கவர்ச்சித் திட்ட வாக்குறுதிகளால் மக்களை மூழ்கடித்தார்.

இத்திட்டங்களை உண்மையில் நிறைவேற்ற வேண்டுமானால் மத்திய அரசு அளவுக்கு பட்ஜெட் போட்டால் கூட பற்றாக்குறைதான் நிலவும் என்று முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே பரிகசிக்கின்றனர். வாரியிறைக்கப்படும் கவர்ச்சித் திட்டங்களால் அரசுக்கு நட்டம் ஏற்படும்; அதை ஈடுகட்ட மீண்டும் மக்கள் மீது வரியை சுமத்த வேண்டும் என்பதை அறிந்தும் கூட ஓட்டுப் பொறுக்கிகள் திட்டமிட்டே மக்களை ஏய்க்கின்றனர்.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்குவோம் என்று தமிழக ஓட்டுப் பொறுக்கிகள் வெற்றுச் சவடால் அடிக்கின்றனர். யதார்த்தத்தில் அது சாத்தியமில்லை; அந்த அளவுக்கு நிலப்பரப்போ, மக்கட் தொகையோ, வருவாயோ இல்லை என்ற அறிந்தும் கூட இத்தேர்தலில் கூசாமல் வெற்று வாக்குறுதிகளை அவிழ்த்து விடுகின்றனர்.

அதேசமயம் மக்களின் வாழ்வை அச்சுறுத்தும் பிரச்சினைகள் பற்றி ஓட்டுப் பொறுக்கிகள் வாயே திறக்கவில்லை. ஒரிசாவின் பாலியபால் அணு ஆயுத ஏவுகணைத் திட்ட விவகாரம் இதற்கு எடுப்பான சான்றாகும்.

பாசிச ராஜீவ் கும்பல் துவக்கி வைத்த இப்பேரழிவுத் திட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி - ஆர்ப்பாட்டங்களை நடத்தி கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது இதையே பிரச்சாரம் செய்து ஓட்டுப் பொறுக்கியது ஜனதா தளம். இந்த அணு ஆயுத ஏவுகணைத் திட்டத்தை தொடரப் போவதாக வி.பி.சிங் அரசு அறிவித்துள்ளது. கடைசியில் மக்களின் வாழ்வுக்கான பிரச்சினை ஓட்டுப் பொறுக்குவதற்குத்தான் பயன்பட்டதே தவிர, உருப்படியாக எந்த தீர்வும் நிகழவில்லை.

கவர்ச்சித் திட்ட - வெற்று வாக்குறுதி உத்திகளோடு கூடவே சினிமா, தொலைக்காட்சி நடிகர் - நடிகைகளைக் காட்டி ஓட்டுப் பொறுக்குவதில் எல்லா கட்சிகளுமே போட்டி போட்டன. ஜனதா தளத்தை ஆதரித்து இந்த சினிமா நடிகர்கள் சத்ருகன் சின்ஹா, ராஜ்பாபர் ஆகியோர் சூறாவளி பிரச்சாரம் செய்தனர். மதவெறியைத் தூண்டுவதால் மட்டுமே ஓட்டுக்களைக் குவிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட பாரதீய ஜனதா கட்சி, தொலைக்காட்சி ராமாயணத் தொடர் நடிகர்களைக் காட்டி ஓட்டுப் பொறுக்கியது. ராமாயணத்தில் ராமனாக நடித்த அருண்கோவில் அலகாபாத் இடைத் தேர்தலில் காங்கிரசுக்கு பிரச்சாரம் செய்ததைப் போல, ராவணனாக நடித்த அரவிந்த திரிவேதி இப்போது பாரதீய ஜனதாவுக்குப் பிரச்சாரம் செய்தார். இவரோடு கும்பகர்ணன், வாலி, சுக்ரீவன், மண்டோதரி மற்றும் வானரசேனைப் பட்டாளங்களாக நடித்தவர்களும் திரண்டு வந்து கவர்ச்சியாக இந்து வெறியூட்டி பாரதீய ஜனதாவுக்கு ஓட்டுப் பொறுக்கினர்.

### சாதிய ஆதிக்கம்

எந்த சாதிக்கு எவ்வளவு ஓட்டுக்கள் விழும் என்று கணக்கு பார்த்து வேட்பாளர்களை நிறுத்துவதென்பது ஓட்டுக் கட்சிகளின் வழக்கமான உத்தி. அதன்படியே பீகாரில் யாதவர்களும், மகாராஷ்டிராவில் மராத்தாக்களும் என சாதிய ஆதிக்கவாதிகளே வேட்பாளர்களாக நிறுத்தப் பட்டனர். மகாராஷ்டிராவில் பாரதீய ஜனதாவும் சிவ சேனாவும் கூட்டு சேர்ந்து இந்து வெறியைக் கக்கிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கின. தனது மண்ணின் மைந்தர்கள் என்ற பிராந்திய வெறிக் கொள்கையைக் கூட கிடப்பில் போட்டுவிட்டு, இப்போதைய ஓட்டு வேட்டைக்கு ஆதாயமானது என்று இந்து வெறியைக் கிளறி விட்டது சிவ சேனா.

சிவசேனையின் மராத்தா இந்து சாதி வெறிக்கு எதிராக தாழ்த்தப்பட்டவர்களை வேட்பாளர்களாக நிறுத்தவதென்பது






படிப்பகம்

www.padippakam.com

பாசிச இந்திரா கையாண்ட வந்த உத்தி. ஆனால் அதற்கும் வாய்ப்பில்லாமல் பெருகிவரும் வேலையின்மை, வறுமை, சாதிக் கலவரங்கள் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் காங்கிரசுக்கு அறவே செல்வாக்கில்லை. எனவே சாதி ஆதிக்கத்தை பண பலத்தைக் கொண்டு முறியடிக்கும் நோக்குடன், சர்க்கரை ஆலை அதிபர்களை வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளது காங்கிரசுக் கட்சி.

**கிரிமினல்களே வேட்பாளர்களாக...**

கவர்ச்சிவாதமும் சாதிய ஆதிக்கமும் ஓட்டு வேட்டைக்குப் பலனளிக்காத நிலையில் இப்போது ஆயுத பலத்தையே பிரதானமாக நம்பியுள்ளனர். அரசியலை வன்முறையாக்குவதை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று உபதேசித்துக் கொண்டே காங்கிரசும் ஜனதா தளமும் ஒருவரையொருவர் விஞ்சும் வண்ணம் கிரிமினல்களையே வேட்பாளர்களாக நிறுத்தினர். நாடாளுமன்ற ஜனநாயகம் கிரிமினல் - மாஃபியாக்களின் பிடியில் சிக்கிவிட்டது என்று முதலாளித்துவ அரசியல் பார்வையாளர்களே வெளிப்படையாக புலம்புமளவுக்கு கிரிமினல் அரசியலே செல்வாக்கு செலுத்தியது.

பீகாரில் பிப்ரவரி முதல் வாரத்தில் ஜனதாதள முதல் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட போது அதில் 181 வேட்பாளர்கள் பிரபல கிரிமினல் பேர்வழிகளாக அல்லது அவர்களின் பினாமிகளாக இருந்தனர். மொத்த வேட்பாளர்களில் 120 பேர் யாதவ சாதியினராக இருந்தனர். மற்றவர்கள் பழம் பெருச்சாளிகளின் வாரிசுகளாக இருந்தனர்.

கொள்கை பூர்வமான அரசியலை வளர்த்தெடுப்போம்; கிரிமினல் பின்னணி உள்ளவர்களுக்கு ஜனதா தளத்தில் இடமில்லை என்று வி.பி.சிங் சவடால் அடித்து இரண்டு மாதங்கள் கூட முடியவில்லை. அத்தனையும் காற்றோடு போனது. இப்போது பீகார் ஜனதாதள் வேட்பாளர்களில் கொள்கை பூர்வமான அரசியல் வாதிகளைப் பார்ப்பதே அரிது என்றாகி விட்டது.

முன்னாள் காங்கிரசு எம்.பி.யாக இருந்த பிரகாஷ் சந்திரா, 1985-ல் கல்கத்தா விபச்சார விடுதியில் கைது செய்யப்பட்ட 'பெருமை' மிக்கவர். இவருக்கு பீகார் சட்டமன்ற தேர்தலில் காங்கிரசு டிக்கெட் கிடைக்கவில்லை. எனவே கட்சி மாறி இப்போது ஜனதாதள வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

மேற்கு பாட்னாவில் ஜனதாதள வேட்பாளராக நிற்கும் ராமானந்த் யாதவ் மீது 10 கிரிமினல் வழக்கு உள்ளது. 1982-ல் ஒரு சிறுமியைக் கற்பழித்து பிரபலமான புள்ளி இவர்.

ஜனதாதள தலைவர் சந்திரசேகரின் வெற்றிக்கு பாராளுமன்றத் தேர்தலின் போது பாடுபட்ட அவரது நண்பர் பிரபுநாத் சிங் இப்போது பீகார் சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். இவர் மீது கொலை - கொள்ளையில் ஈடுபட்டதாக 7 கிரிமினல் வழக்குகள் உள்ளன.

1984-ல் 16 தாழ்த்தப்பட்ட மக்களைக் கொன்ற பிஜேந்திர கோபி, சுரேந்தர் சிங்,



ஜனதாதள வேட்பாளர் பிரபல கிரிமினல் சுரேந்தர் சிங்,

ரன்பிர் யாதவ் ஆகிய சாதி வெறிபிடித்த கொலைகாரர்கள் தான் இப்போது ஜனதா தளத்தின் புது முகங்களாக தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்கள் தவிர கல்லுயாதவ், பாப்பு யாதவ் முதலான பிரபல கொள்ளையர்களும் 40-க்கும் மேற்பட்ட கிரிமினல் - மாஃபியா குண்டர்களும் வேட்பாளர்களாக களத்தில் நிற்கின்றனர். இத்தகைய கிரிமினல்களைக் கொண்ட வேட்பாளர் தேர்வை எதிர்த்து பீகார் மாநில ஜனதா தள கட்சித் தலைவர் முறையிட்டும் கூட புதிய பரிசுத்தம் வி.பி.சிங் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை.

**கோஷ்டித் தகராறுகள் குடுமிபிடி சண்டைகள்**

வழக்கம் போலவே, இத்தேர்தலை ஒட்டி எல்லா ஓட்டுப் பொறுக்கி கட்சிகளுக்கும் கோஷ்டித் தகராறுகளும் குடுமிபிடி சண்டையும் கொடி கட்டிப் பறக்கிறது. கோஷ்டி சண்டைகளால் புழுத்து நாறும் காங்கிரசுக் கட்சிக்குள் வேட்பாளர் பட்டியலில் தமக்கு உரிய பங்கு தரப்படவில்லை ஒவ்வொரு கோஷ்டியும் கலகக் கொடியை உயர்த்தி அதிருப்தி வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. மத்தியப் பிரதேசத்தில் 125 முன்னாள் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களுக்கு மீண்டும் தேர்தல் டிக்கெட் தரப்படவில்லை என்ற ஆத்திரத்தில் மூத்த கட்சித் தலைவர்களையே நையப் புடைத்தனர். 100-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் அதிருப்தி வேட்பாளர்கள் முற்றுகையிட்டு காங்கிரசின் தோல்விக்கு கட்டியம் கூறுகின்றனர்.

இமாசலப் பிரதேசத்தில் காங்கிரசு முதல்வர் வீர்பத்ர சிங்கும், முன்னாள் மத்திய மந்திரி சுக்ராமும் ஆளுக்கொரு கோஷ்டியாக நின்று நாய் சண்டையில் இறங்கியுள்ளனர். ஒரிசாவில் முன்னாள் முதல்வர் ஜே.பி.பட்நாயக், இந்நாள் முதல்வர் பிஸ்வால், நந்தினி சத்பதி ஆகியோர் ஆளுக்கொரு கோஷ்டியாக பிரிந்து அதிருப்தி வேட்பாளர்களை நிறுத்தி தாங்களே காங்கிரசுக்கு சமாதி கட்டி வருகின்றனர். சிறிய யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரியில் கூட காங்கிரசுக்குள் பதவி வேட்டைக்கான நாய் சண்டை முற்றி 30 தொகுதிகளிலும் போட்டி வேட்பாளர்கள் நிற்கின்றனர்.

மகாராஷ்டிராவில் கோஷ்டி மோதல்கள் முற்றி அவிழ்த்து கொட்டப்பட்ட நெல்லிக்காய் மூட்டையாக காங்கிரசுக் கட்சி மாறிவிட்டது. கட்சித் தலைமைக்கு கோடி கணக்கில் (ரூ.180 கோடி என்பது அதிருப்தி கோஷ்டியினரின் கணிப்பு) கப்பம் கட்டிவிட்டு முதல்வர் சரத்பவார் தனது ஆட்களையே வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளார். இதனால் ஆதாயமடைந்த ராஜீவும் இதைக் கண்டு கொள்ளவில்லை என்று பழம் பெருச்சாளிகளான சவான், அந்துலே, வசந்த் சாத்தே கும்பல் ஒப்பாரி வைக்கிறது.

முன்னாள் முதல்வரான சவான் தமது பழைய நண்பரும் குடியரசுத் தலைவருமான வெங்கட்ராமனிடம் முறையிட்டு, ராஜீவிடம் கூறி பவாரை அடக்குமாறு வேண்டிக் கொண்டார். அதன்படி, 'கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட நாட்டின் முதல் குடிமகனான' வெங்கட்ராமனும் ராஜீவை காஷ்மீர் பிரச்சினையை விவாதிக்க அழைத்து, பவார் விவகாரத்தைப் பற்றி முறையிட்டார். அதன் பிறகு ராஜீவ் அதிருப்தி கோஷ்டிக்கு இன்னும் சில எலும்புத் துண்டுகளை வீசி சமரசப்படுத்த முயன்றார். ஆனாலும் அது பலனளிக்காமல் திருப்தே தலைமையிலான கோஷ்டி காங்கிரசுக்கு முழுக்கு போட்டுவிட்டு ஜனதாதளத்தில் போய் ஒட்டிக் கொண்டது.

காங்கிரசின் பாரம்பரிய கலாச்சாரமாக இருந்த கோஷ்டி சண்டைகள், இப்போது விதிவிலக்கின்றி எல்லா ஓட்டுக் கட்சிகளிலும் பரவி நாய்ச் சண்டையாகத் தீவிரமாகி விட்டது. கட்டுக் கோப்பான கட்சி என்று பீற்றிக் கொள்ளப்படும் பாரதீய ஜனதா கட்சிக்குள்ளேயே வேட்பாளர் தேர்வையொட்டி எதிர்ப்பும் கலகமும் தீவிரமாகியது. தமக்கு உரிய பங்கு தரப்படவில்லை என்று ராஜஸ்தான் பாரதீய ஜனதா தலைவர் மாத்தூர், கட்சியிலிருந்தே விலகினார். மகாராஷ்டிராவில் தமது கட்சியின் அதிருப்தி வேட்பாளர்களை தேர்தலில் வீழ்த்த காங்கிரசு கட்சியின் அதிருப்தி வேட்பாளர்களை பாரதீய ஜனதா ஆதரிக்கிறது. இதுதவிர, எப்படியாவது பதவியைப் பிடிக்க வேண்டும் என்ற பேராசையில் தமது கட்சியின் வேட்பாளர்களை விலக்கிக் கொண்டு, செல்வாக்குள்ள இரு காங்கிரசு அதிருப்தி வேட்பாளர்களை ஆதரிக்கிறது. சில காங்கிரசு அதிருப்தி வேட்பாளர்கள் அவசரமாக பாரதீய ஜனதாவிலும் சேர்ந்து, அதன் ஆதரவுடன் ஓட்டுப் பொறுக்குகின்றனர்.

முற்றி வரும் கோஷ்டித் தகராறுகளால் தேர்தலுக்குப் பின் எம்.எல்.ஏ.க்களை விலை பேசும் 'குதிரை வியாபாரம்' மேலும் தீவிரமாகும். சந்தர்ப்பவாதக் கூட்டணியும், கட்சித் தாவல்களும், கிரிமினல் அரசியலும் என சட்டமன்ற ரௌடித் தனங்களும் அராஜகமும் உச்ச நிலையை அடையும். இதோடு இந்து மதவெறி - பாசிச சக்திகளின் வளர்ச்சியும் செல்வாக்கும் சேர்ந்து பாசிச அபாயம் வேகமாகப் பரவுவதை மேலும் துரிதப்படுத்தவே செய்யும். எனவே, பெருகிவரும் இப்பேரபாயத்தை முறியடிக்க புரட்சியாளர்களின் தலைமையில் திரண்டு போராடுவது உடனடிக் கடமையாக உள்ளது.

● குணசேகரன்

படிப்பகம்

www.padippakam.com

# மானமிழந்த ஜோதிப்பிரகாசம்
# 'பு.ஜ'வுக்கு வக்கீல் நோட்டீசு!

1-28 பிப். 1990 - புதிய ஜனநாயகம் இதழில் திருவாளர் ஜோதிப் பிரகாசம் என்கிற எம்.சி.ஆர்.எ.ஜே. பிரகாசம் குறித்து படத்துடன் ஒரு பெட்டிச் செய்தி வெளியிட்டிருந்தோம். அதிலே, தமிழ்த் தேசிய அமைப்புகளுக்குள் புகுந்து, பிளவுபடுத்தி, மோதவிட்டு, ரத்தம் குடிக்கும் நோக்கத்தில் டிராட்ஸ்கியவாதிகளாலும், 'ரா'வாலும் ஜோதிப்பிரகாசம் தலைமையிலான ஒரு தமிழ் தேசிய இன விடுதலை அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்று எச்சரித்திருந்தோம்.



இதனால் ஏற்பட்ட மான இழப்பினை ஈடுசெய்யும் வகையில் பெயரளவுத் தொகையாக ரூ.1 லட்சத்தினை 15 நாட்களுக்குள் அனுப்பிட வேண்டும் என்று கோரி ஜோதிப்பிரகாசம் ஒரு வக்கீல் அறிக்கையை பிப்ரவரி 9 தேதியிட்டு அனுப்பியுள்ளார். அதுமட்டுமல்ல, *"லெனின் மற்றும் டிராட்ஸ்கி ஆகியோரின் கருத்துக்களில் தக்க ஈடுபாடு கொண்ட மார்க்சியரான"* ஜோதிப்பிரகாசத்தின் மீதும் அவரது தலைமையிலான தமிழர் கழகத்தின் மீதும் களங்கம் கற்பிப்பதாகவும் மனசாட்சிக்கே விரோதமான வீண்பழி சுமத்துவதாகவும் எழுதியுள்ளார். *"தமிழ்த் தேசியத்தில் ஆழமான ஈடுபாடும் சமுதாயப் பணிகளில் நேர்மையான ஆர்வமும் கொண்ட"* ஜோதிப் பிரகாசத்தின் *"நற்பெயரையும் நற்பணிகளையும் களங்கப்படுத்தி இழிவுசெய்து, மக்கள் மத்தியிலும் ஆதரவாளர்கள் மற்றும் நண்பர்கள் மத்தியிலும் அவரது நற்பெயரையும் மதிப்பையும் தரம் தாழ்த்துகின்ற நோக்கத்தில், வேண்டுமென்றே திட்டமிட்டு அவரது நற்பெயருக்கும் மதிப்பிற்கும் தீங்கு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்"* அந்தப் பெட்டிச் செய்தியினை வெளியிட்டிருந்தோம் என்கிறார். நாம் வெளியிட்ட *"செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று அறிவித்து, அதற்கான வருத்தமும் தெரிவித்து"* அதே போல புதிய ஜனநாயகம் பத்திரிக்கையில் வெளியிடுமாறு கோருகிறார். தவறினால் நம்மீது குற்றவியல், உரிமையியல் வழக்குகளைத் தொடுக்க நேரிடும் என்று மிரட்டுகிறார்.

ஒன்றைத் தெளிவாகக் கூறிவிட விரும்புகிறோம். ஜோதிப்பிரகாசம் குறித்து அந்தப் பெட்டிச் செய்தி வெளியிட்டதற்காக புதிய 'ஜனநாயகம் வருத்தமோ, மன்னிப்போ, மறுப்போ தெரிவிக்கப் போவதில்லை; அவரது மான இழப்புக்கு நட்ட ஈடும் தரப்போவதில்லை. ஏனெனில் புதிய ஜனநாயகம் வெளியிட்டிருக்கும் செய்தி அவருக்கு எதிரான அவதூறு அல்ல; உண்மைச் செய்தி! அதை வெளியிட்டுத் தமிழக மக்களை எச்சரிக்கும் பொறுப்பையும் கடமையையும், தான் நிறைவேற்றினோம்.

அரசியல் சமுதாய பணிகளில் ஈடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் ஜோதிப் பிரகாசம் மக்கள் மத்தியில் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுப்பதற்குப் பதில், 'புதிய ஜனநாயகத்துக்கு எதிராக வழக்குத் தொடுப்பேன்; ஒரு லட்சம் ரூபாய் நட்ட ஈடு கொடு' என்று கேட்டு மிரட்டுகிறார்! இதன்மூலம் லெனின் கருத்துக்களில் அவர் எப்படிப்பட்ட ஈடுபாடு கொண்ட மார்க்சியர் என்று தன்னை அம்பலப்படுத்திக் கொள்கிறார்.

*"டிராட்ஸ்கியின் கருத்துக்களில் தக்க ஈடுபாடு கொண்ட மார்க்சியரென"* மழுப்பலாக ஒப்புக் கொள்ளும் ஜோதிப்பிரகாசம் உண்மையில் ஒரு டிராட்ஸ்கியவாதி. அதற்கான ஆதாரங்களும் உள்ளன. "ஏக காலத்தில் சர்வதேச சோசலிச புரட்சி"யில் நம்பிக்கையுடைய ஒரு டிராட்ஸ்கியவாதி திடீரென்று அதற்கு நேரெதிரான நோக்கத்துடன் கூடிய 'தமிழ்த் தேசியத்தில் ஆழமான ஈடுபாடும்' கொண்டு தமிழர் கழகத்தைத் துவங்கி நடத்துகிறார். *"டீக்கடை நடத்தும் மலையாளிகள், தண்ணீரைக் கலக்கிக் கொடுத்து தமிழர்களை ஏய்த்துச் சுரண்டுகிறார்கள்; அவர்களை இங்கிருந்து விரட்டுவோம்"* என்று ஜோதிப்பிரகாசத்தின் தமிழர் கழகப் பிரசுரம் அழைப்பு விடுக்கிறது. லெனின், டிராட்ஸ்கியின் கருத்துக்களில் தக்க ஈடுபாடு கொண்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் ஜோதிப்பிரகாசம் மேற்கண்டவாறு உழைக்கும் மக்களிலேயே ஒரு பிரிவுக்கு எதிராக வெறியையும் வன்முறையையும் தூண்டுகிறார். அதன்மூலம் மக்கள் மன்றத்திலே அம்பலப்பட்டுப் போனார். இப்போது சட்டம் படித்துள்ள ஜோதிப்பிரகாசம் வழக்கு மன்றத்திலே வந்து அம்பலப்படத் துடிக்கிறார்.

இனவெறியையும் வன்முறையையும் தானே தூண்டிவிட்டு பிறகு நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடும் தமிழ்த் தேசிய அமைப்புகள் மீது பழிபோட்டு, 'தீவிரவாதிகள்' என முத்திரை குத்திப் பாய்வதற்கு 'ரா' செய்யும் சதியின் கைவண்ணம் ஜோதிப் பிரகாசத்தின் நடவடிக்கையிலே தெரிகிறது. அவரது 'ஐந்தாம் படை' வேலையை மேற்பார்வையிடும் வகையிலேதான், பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17, 1989 அன்று சென்னை, தியாகராய நகர் பனகல் பூங்கா அருகே கோபதி நாராயண செட்டி சாலை, வெங்கடேசுவரா திருமண மண்டபத்தில் நடந்த தமிழர் கழகத் துவக்க விழாவுக்கு ஒரு 'ரா' அதிகாரி நேரிலேயே வந்து பங்கேற்றார். ஒட்டுத் தாடி வைத்துக் கொண்டு, தன் அடையாளத்தை மறைத்துக் கொண்டு முதலில் பார்வையாளர் மத்தியில் அமர்ந்திருந்த அவர், பிறகு மேடையிலேயே போய் உட்கார்ந்திருந்து நிகழ்ச்சிகளைக் கவனித்தார். ஜோதிப்பிரகாசத்துக்காக வக்கீல் அறிக்கை அனுப்பியுள்ள திருவாளர் பி.வேணுகோபாலுக்கே இது தெரியும்.

திருவாளர் ஜோதிப்பிரகாசத்தின் பின்னணியில் டிராட்ஸ்கியவாதிகள், 'ரா'வோடு ஏகாதிபத்திய உளவாளிகளைக் கொண்ட தன்னார்வக் குழுக்களும் உள்ளனர் என்பதைக் குறிப்பிடத் தவறியதற்காக வருந்துகிறோம். 20 ஆண்டுகளுக்கு முன்பு பம்பாயில் டிராட்ஸ்கிய அரசியலில் ஞானோபதேசம் பெற்ற ஜோதிப் பிரகாசம், வடக்கில் இருந்து வந்திறங்கிய டிராட்ஸ்கியத் தலைவர்களான கீதா - சுப்பு மற்றும் 'வலது கம்யூனிஸ்ட்' கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அம்பலவாணன் ஆகியோர் அடங்கிய கும்பலில் சேர்ந்தார். இவர்கள் தமிழகத்திலுள்ள பல்வேறு தொழிலாளர் மற்றும் 'கம்யூனிச' அமைப்புகளுக்குள் ஊடுருவ முயன்று தோற்றுப் போய் தனியே சில அமைப்புகளை நிறுவிக் கொண்டனர். டிராட்ஸ்கிய மற்றும் தன்னார்வக் குழுக்கள் நடத்திய சமூக சேவை அமைப்புகளில் ஈடுபட்டதோடு சில காலம், ஒரு பத்திரிக்கையும், "மனத்தின் விடுதலை" "வாழ்க்கையின் கேள்விகள்" போன்ற வெளியீடுகளும் கொண்டு வந்தார், ஜோதிப்பிரகாசம்.

தன்னார்வக் குழுக்களின் தென்னகத் தலைமையகமான பெங்களூர் - ஓயிட் ஃபீல்டில் பயிற்சியும் பெற்றார். தன்னார்வக்குழுக்கள் மூலம் ஆஃபிரிக்கப் பயணமும் போய்வந்தார். இதற்கிடையே படித்து வக்கீலும் ஆகிவிட்டார். கடந்த 20 ஆண்டுகளில் வருமானத்திற்கென்று எந்தத் தொழிலும் உழைப்பிலும் ஈடுபடாத திருவாளர் ஜோதிப்பிரகாசம் தமது வாழ்வுக்கும் மேற்படி சமுதாய பணிகள் - நற்பணிகளுக்கும் எங்கிருந்து நிதி பெற்றார் என்பது வாசகர்கள் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதே!

இவையும், இவை போன்ற இன்னும் பல விவகாரங்களையும் மக்கள் மன்றத்தில் மட்டுமல்ல, தேவையானால் வழக்கு மன்றத்திலும் அலசுவதற்குத் தயாராக உள்ளோம். எவ்வாறாயினும் ஜோதிப்பிரகாசம் விவகாரங்கள் அவரைப் போன்றவர்களை அம்பலப்படுத்துவதோடு நேர்மையான தமிழ்த் தேசிய அமைப்புகளை விழிப்புறவும் செய்யும் என்பதில் மகிழ்ச்சியே அடைவோம். மற்றபடி அஞ்சிடவோ பின்வாங்கவோ மாட்டோம்.

— ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com



# ரஷ்யாவின் புதிய கொள்கை: இஸ்ரேலிய இனவெறிக்குப் பெருந்தீனி

'சீர்திருத்தச் செம்மல்' கோர்ப்பசேவின் கிளாஸ்நாஸ்ட், பெரஸ்த்ரோய்கா கொள்கைகளை முதலாளித்துவ உலகம் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறது. ஆனால் அக்கேடு கெட்ட கொள்கைகளின் விளைவாக யூத (ஜியோனிச) இனவெறி மேலும் வலுவடைந்து பாலஸ்தீனியர்களும் அரபு நாடுகளும் பீதியில் உறைந்து போயுள்ளனர்.

தனது முதலாளித்துவ மறுசீரமைப்பு - திறந்துவிடும் கொள்கைகளுக்கு ஏற்பட புதிய குடியேற்றக் கொள்கையை அண்மையில் ரஷ்யா வகுத்துள்ளது. அதன்படி ரஷியாவிலுள்ள யூத இனத்தைச் சேர்ந்தவர்கள் வேறு நாடுகளில் சென்று குடியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்திக் கொண்டு தினமும் ஆயிரக் கணக்கான யூத இன மக்கள் ரஷியாவிலிருந்து வெளியேறி யூத இன வெறி பிடித்த இஸ்ரேலுக்கு ஓடுகிறார்கள். இவர்களை வாழ்த்தி வரவேற்று, பாலஸ்தீனியர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் குடியமர்த்தி இனவெறியைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது இஸ்ரேலிய அரசு.

ரஷியாவிலிருந்து வெளியேறும் யூத இன மக்கள் ஏதோ யுத்தத்தால் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு தப்பியோடி வருபவர்கள் அல்ல. இனவெறி போதை தலைக்கேறி தங்கள் 'தாயக'மான இஸ்ரேலை நோக்கிப் பெருமளவில் படையெடுக்கிறார்கள். கடந்த ஜனவரியில் மட்டும் 5000 ரஷிய யூதர்கள் இஸ்ரேலுக்கு வந்துள்ளனர். இந்த ஆண்டுக்குள் மேலும் ஒரு லட்சம் பேரும், அடுத்த ஆண்டுக்குள் மேலும் 2.5 பேரும் வெளியேறுவர் என்றும் மூன்றாண்டுகளுக்குள் மொத்தம் 7 லட்சம் யூதர்கள் இஸ்ரேலுக்கு குடிபெயர்வார்கள் என்றும் மதிப்பிடப் படுகிறது.

"ரஷியாவில் கோர்ப்பசேவின் சுதந்திரக் கொள்கையால் இனவெறி தீவிரமாகி விட்டது. யூதர்களுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்து விட்டன. இனி எங்களால் அங்கு நிம்மதியாக வாழ முடியாது" என்கிறார், ரஷியாவிலிருந்து இஸ்ரேலுக்கு குடிபெயர்ந்துள்ள ஷாரான்ஸ்கி என்ற யூதர்.

"இது உண்மையல்ல; திட்டமிட்டே இஸ்ரேலிய இனவெறியர்கள் பரப்பும் வதந்தி" என்று மறுக்கிறது ரஷியா. இது உண்மையோ, பொய்யோ; ஆனால் ரஷியாவிலிருந்து வரும் யூத இன மக்களை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் குடியமர்த்தி, அப்பகுதிகளையும் சேர்த்து அகண்ட இஸ்ரேலை நிறுவுவோம் என்று தேசிய வெறியூட்டி வருகிறது இஸ்ரேலிய இனவெறி அரசு.

இப்புதிய குடியேற்றத்தால் இஸ்ரேலின் ஆதிக்கம் மேலும் அதிகமாகும்; பாலஸ்தீனியர்கள் மீது தாக்குதல்கள் பெருகி அவர்கள் ஜோர்டான் அல்லது இதர அரபு நாடுகளுக்குத் துரத்தப்படுவர்; மேற்காசிய சமாதான பேச்சுவார்த்தைகள் சிக்கலாகி போர் மேகங்கள் சூழும் என்று முதலாளித்துவ அரசியல் பார்வையாளர்களே அஞ்சுகின்றனர்.

மேற்காசியாவில் யுத்த தந்திர முக்கியத்துவம் கருதியும், எண்ணெய் வளமிக்க அரபு நாடுகளை அடிமைப்படுத்திக் கொள்ளையிடவும், தமக்கு அடியாளாகச் செயல்படவும் நாற்பதுகளில் தலை தூக்கிய ஜியோனிச (யூத மதவெறி)த்தை சாதகமாக்கிக் கொண்டு, உலகெங்கும் சிதறிக் கிடந்த யூதர்களைக் குடியேற்றி 1948-ல் இஸ்ரேலை ஏகாதிபத்தியங்கள் உருவாக்கின. பாலஸ்தீனியர்களை அவர்களது சொந்த மண்ணிலிருந்து விரட்டியடித்துவிட்டு 'யூதர்களது சொந்த நாடான' இஸ்ரேல் எனும் இனவெறி நாடு நிறுவப்பட்டது. பாலஸ்தீனியர்கள் நாடோடிகளாக நாடு நாடாக ஓட வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர். அன்றிலிருந்து தங்கள் தாயகத்தை மீட்க ஆயுதமேந்திப் போராடி வருகின்றனர்.

ஏகாதிபத்தியங்களின் மேற்காசிய பேட்டை ரெளடியாக உள்ள இஸ்ரேலிய இனவெறி அரசு, அராபியர்கள் அதிகமாக வாழும் ஜோர்டான் எல்லையிலுள்ள மேலைக் கரை பகுதியையும், எகிப்து எல்லையிலுள்ள காசா முனையையும் 20 ஆண்டுகளாக ஆக்கிரமித்துக் கொண்டு அரபு மக்களை அடக்கி ஒடுக்கி வெறியாட்டம் போடுகிறது. அப்பகுதியில் யூதர்களைக் கட்டாயமாக குடியமர்த்தி ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் இஸ்ரேலைச் சேர்ந்ததுதான் என்று கொக்கரிக்கிறது. இப்போது ரஷியாவிலிருந்து ஓடிவரும் யூதர்களை மீண்டும் இப்பகுதியில் குடியமர்த்தி இனவெறியைக் கட்டவிழ்த்துவிட்டு தனது ஆதிக்க சாம்ராஜ்ஜியத்தை நிலைநாட்ட எத்தனிக்கிறது.

ரஷியாவிலிருந்து யூதர்கள் வெளியேறி இஸ்ரேலுக்கு குடிபெயர்வதால் ஏற்படும் விளைவுகளைக் கண்டு பாலஸ்தீனிய விடுதலை அமைப்பும், அரபு நாடுகளும் தமது கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளன. ஐ.நா. தீர்மானத்தையும் 1949-ல் தான் கையெழுத்திட்ட ஜெனீவா ஒப்பந்தத்தையும் இஸ்ரேல் மீறுகிறது என குற்றம் சாட்டி பழி தன் மீது விழாமல் தப்பித்துக் கொள்கிறது ரஷியா. ஆனால் அதே சமயம் "யூதர்கள் குடிபெயர்வதை தடுக்க மாட்டோம்; சர்வதேச குடிபெயரும் சட்டத்தின்படி இது நியாயமானது; அரபு நாடுகள் எமது நிலையை உணர்வார்கள் என நம்புகிறோம்" என்று கபட நாடகமாடுகிறது. "ரஷியாவிலிருந்து அஜர்பெய்ஜான் கலவரத்தால் பல முஸ்லிம்கள் அகதிகளாக ஈரான், துருக்கி முதலான முஸ்லிம் நாடுகளுக்கு குடியேறியுள்ளனர். அதே போல யூதர்களும் இஸ்ரேலுக்கு வந்து குடியேறுவது தவறு அல்ல; சர்வதேச குடிபெயரும் சட்டப்படி இது நியாயமானது" என்று வாதிடுகிறது இஸ்ரேல். இதே நேரத்தில் அமெரிக்காவில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள யூதர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்து இனவெறியை மேலும் கிளறி விடுகிறது, இஸ்ரேலின் எஜமானனான அமெரிக்க ஏகாதிபத்தியம்.

"அமெரிக்க - ரஷிய கூட்டு பேரத்தால் ஜியோனிச இனவெறி தீவிரமாகி எமது மக்கள் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. இனி நாங்கள் மீண்டும் ஆயுதப் போராட்டத்தில் இறங்குவதைத் தவிர வேறுவழியில்லை" என்று உணர்ச்சி பொங்க கூறுகிறார் ஒரு பாலஸ்தீனிய இளைஞர். உண்மைதான்! இனவெறிக்கு அது ஒன்றுதான் தீர்வாக முடியும். இனவெறியர்களுக்கும் அவர்களது எஜமானர்களான ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான நியாயமான போராட்டத்தை துவக்கி சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஆதரவுடன் பாலஸ்தீனிய மக்கள் நிச்சயம் வெற்றியைச் சாதிப்பார்கள்

● குமார்.

படிப்பகம்

www.padippakam.com

பிப்ரவரி 20. ஐதராபாத் நகரை புரட்சி உணர்வலைகள் குலுக்கி எடுத்த நாள். ஜன நாட்டிய மண்டலியின் 18வது ஆண்டு நிறைவு விழா. வெளியூரிலிருந்து வந்த தோழர்கள் சிறுசிறு ஆறுகள் போல ஊர்வலங்களாக சிக்கட்பள்ளி அரங்கத்தில் வந்து சங்கமித்தார்கள். எங்கு திரும்பினாலும் நகரத்தில் அலைஅலையாக இளைய தலைமுறையின் கரைபுரண்ட உற்சாகம்.

புரட்சிகர உழைக்கும் மக்களுக்கு அன்று திருவிழா. ஜனநாட்டிய மண்டலியின் விழா. ஐந்தாண்டுகள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த ஜனநாட்டிய மண்டலிக் கலைஞர் கத்தர் (கத்தர் என்றால் புரட்சி என்று பொருள்) சக கலைஞர்களுடன் மேடையில் தோன்றுவார் என்ற செய்தி ஆந்திரமெங்கும் உள்ள புரட்சிகர விவசாயிகளுக்கு தேனான செய்தியாக இருந்தது.

அன்று காலை தொடக்க நிகழ்ச்சியாகக் கருத்தரங்கம் தொடங்கியது. தோழர் எம்.டி. கான் தலைமையில் முதல் உரையைத் தொடங்கினார் தோழர் ராஜ்கிஷோர் சிங். இவர் பீகார் புரட்சி அறிவு ஜீவிகள் சங்கத்தின் (KBS) செயலாளர். மக்கள் மத்தியில் புரட்சி வேலைகள் செய்யும்போது, அவர்களோடு ஐக்கியமாகும் போதுதான் மக்கள் கலையாய் மலர வைக்க முடியும் என்று அவர் அழுத்தம் திருத்தமாக விவரித்தார். 'புரட்சிக் கலாச்சாரமும் அதன் தேசீய வடிவங்களும்' என்ற தலைப்பில் பேசினார் ஆந்திரப் புரட்சி எழுத்தாளர் சங்கம் (RWA) மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் சலசானி பிரசாத். மக்களிடையே காலங்காலமாக இருந்துவரும் கிரா

ஆந்திர ஜனநாட்டிய மண்டலியின் 18-வது ஆண்டு விழாவிற்கு ம.க.இ.க. தோழர்கள் நேரில் சென்று வந்து அளிக்கும் அறிக்கை.

க



கத்தரின் மக்கள் நாட்டியம்
அந்தத்தாயின் மகனை அரசப்பூதம் கொன்றுவிட்டது!
அலைஅலையாய்த் திரண்டது மக்கள் வெள்ளம்!







படிப்பகம்

www.padippakam.com

# ரளுகிறது மக்கள் வெள்ளம்!
# எழுகிறது புரட்சி அலை!



மியக் கலை வடிவங்கள் வர்க்கப் போராட்டத்தின் ஊடாக எப்படி மக்கள் கலையாக் உருவெடுக்கிறது என்பதை விளக்கினார். தெலுங்கானா நாட்களிலிருந்து ஜனநாட்டிய மண்டலியின் இன்றைய வடிவங்கள் வரை வேகமாக ஒரு கண்ணோட்டம் விட்டார். விமரிசகர் தோழர் ஹரி 'கலாச்சாரத்தை வியாபாரமயமாக்கும் போக்குகள்' பற்றிப் பேசினார். புரட்சிப் போராட்டங்களுக்கு எதிராக அவை எப்படிப் பிரச்சாரம் செய்கின்றன என்று விளக்கினார். தோழர் வரவரராவ் ஜனநாட்டிய மண்டலி ஆரம்பித்த 1972 லிருந்து தொடங்கி வரலாற்றை விவரித்தார். அவரைத் தொடர்ந்து 'மக்கள் யுத்தத்தின் போர்க் கப்பல் கத்தர்' என்ற தலைப்பில் தோழர் காகராலா ஜனநாட்டிய மண்டலி, கத்தர் பற்றி சில பாடல்கள் பாடி விரிவாகப் பேசினார்.

மாலை 4 மணிக்கு 30,000 பேர் கலந்துகொண்ட பிரும்மாண்டமான ஊர்வலம் ('ஊரேகிம்பு') தொடங்கியது. ஜஜ்ஜனகு ஜஜ்ஜனகு என்று சோடிப் பறைகள் முழங்கின. பூம்பூமென்று கொம்பு முழங்கியது. தெலிங்கானா விவசாயிகள் பல்லாயிரக்கணக்கில் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்தில் புரட்சிக் கவிஞர்கள் சுப்பாராவ் பாணிக்கிராகி, செரபண்டராஜுவின் வரிகள் முழக்கங்களாக்கப்பட்டன. 'சிறையிலிட்டு வதைத்த போதும் மக்கள் சக்தி ஒடுங்காது, சூரியனைக் கைகள் கொண்டு மறைக்க என்றும் முடியாது' போன்ற முழக்கங்கள் வீதிகளின் இருபுறமும் குழுமியிருந்த மக்களிடம் சென்றன.

எட்டு கி.மீ. தொலைவு கடந்து நிஜாம் கல்லூரி மைதானத்துக்கு ஊர்வலம் செல்வதற்குள் 3 மணி நேரமாகிவிட்டது. நிகழ்ச்சி தொடங்கியது. காலோஜி நாராயணராவ் என்ற முதிர்ந்த எழுத்தாளர் தலைமை தாங்கினார். ராசிகொண்ட விஸ்வநாத சாஸ்திரி என்ற எழுத்தாளர், ஆந்தி மக்கள் உரிமைக் கழகத் தலைவர் கே.ஜி.கண்ணபிரான், செயலாளர் டாக்டர் பாலகோபால் ஆகியோர் பேசினார்.

மைதானம் முழுவதும் தலைகள் தலைகள் கடல் அலைகள் போல. 2 லட்சத்துக்கும் மேல் மக்கள். எல்லோரும் கத்தருக்காகக் காத்திருந்தார்கள்.

கத்தர் மேடைக்கு வந்தார். புகழ் மாலை, பூமாலை போட்டு யாரும் அங்கே அவரை வரவேற்கவில்லை. மிகமிக இயல்பாக ஒரு பாடலில் மற்ற தோழர்களோடு கலந்து கொண்டார். பிறகு அவர் பேசினார்; பாடினார்; ஆடினார்; சக தோழர்கள் சஞ்சீவி, பத்மா, திவாகம், ரமேஷ், வெங்கபண்டு பிரசாத் ஆகியோரோடு இசை நாட்டிய நாடகம் நடத்தினார். பழைய, புதிய பாடல்கள் வரிசை வரிசையாக வந்தன.

''போதிவீரோ ராமண்ணா'' (என்.டி. ஆர். தலை குப்புற விழுந்ததைப் பற்றிய கேலிப்பாடல்), ''அம்மோ பாபோய் சென்னாரெட்டி வச்சினாரு'' (சென்னாரெட்டி வருகை பற்றிய கேலிப்பாடல) இரு பாடல்களையும் மக்கள் ஆரவாரமாக வரவேற்றார்கள். ரத்தம் சிந்தி உயிர்கொடுத்த தியாகிகள் பற்றி கத்தர் உருக்கமாகப் பாடிய போது பார்வையாளர்கள் கண்ணில் நீர் ததும்ப கவனித்தார்கள். கொலைகார அரசால் படுகொலை செய்யப்பட்ட தோழர்களின் தாய்மார்களை கத்தர் அறிமுகம் செய்தபோது முழக்கங்கள் கொடுத்துக் குமுறினார்கள்.

கத்தர் அன்று மிகக் கவனமாகத் தனது ஐந்தாண்டு தலைமறைவு வாழ்க்கையை அணுஅணுவாக விவரித்தார். அடர்ந்து படர்ந்த காடு - இரவில் காட்டில் காயும் நிலா - எங்கெங்கோ சலசலத்து ஓடும் ஆறுகள் - பறவைகள், விலங்குகளின் ஓயாத இரைச்சல், முனகல், கூட்டங்கள் - ஆதிவாசிகளின் உழைப்பில் எழும் கூட்டோசைகள், அவர்களின் ஆடல்பாடல்கள் சடங்குகள், கொஞ்சும் குழந்தைகள் அத்தனையும் இழைஇழையாக பல வண்ணங்களில் நெய்து கொடுத்தார் கத்தர். எந்த சூழ்நிலையில் ஒவ்வொரு கணத்தையும் வாழும் ஒரு போராளியின், வாழ்க்கையை எடுத்துச் சொன்னார் கத்தர்.

புரட்சி அணிக்கு இவ்வளவு ஆதரவா? - சென்னாரெட்டி காங்கிரஸ் கூட்டம் நடு நடுங்கிப் பீதியடைந்துவிட்டது. மேடையில் கத்தர் கேள்விகள் எழுப்பினார். அதற்கு அடுத்த நாள் கத்தருக்கு சென்னாரெட்டி பதில் என்று டி.வியில் பதிலை ஒளிபரப்ப வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது. நீண்டகாலமாக வழக்கும் பதியப்படாமல் விடுதலை செய்யப்படாமல் சிறையில் வாழும் தோழர்களை விடுதலை செய்ய வேண்டும்; நக்சலைட்டுகளைச் சித்திரவதை செய்யும், கொலை செய்யும் போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; கிராமப்புறங்களில் போலீஸ் போஸ்ட்டுகளில் குவிந்திருப்பதை வாபஸ் பெற வேண்டும் - மூன்று கேள்விகளையும் சென்னாரெட்டி நிராகரித்து விட்டார்.

பல லட்சம் மக்கள் திரண்டது சென்னாரெட்டிக்கு மட்டுமல்ல, ஓட்டுக் கட்சிகள் அத்தனைக்கும் போலி கம்யூனிஸ்டுகளுக்கும் பீதியூட்டியிருக்கிறது. ஜனநாட்டிய மண்டலியும், கததரும் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மக்கள் மத்தியில் ஆங்காங்கே உள்ள மௌனத்தை உடைக்கும் பிரச்சார வேலைகளில் இறங்கியிருக்கிறார்கள். நாளைய புரட்சிக்காக இன்னொரு ஆயத்த வேலை செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com




**அன்பார்ந்த வாசகத் தோழர்களே!**

புதிய ஜனநாயகம் ஏட்டின் கேள்வி - பதில் பகுதிக்கு உற்சாகமளிக்கும் வகையில் நிறையவே கடிதங்கள் வந்துள்ளன. அனைத்துக் கேள்விகளுக்கும் உடனடியாகப் பதில் அளிப்பது இடமின்மையால் சாத்தியமில்லாமல் இருக்கிறது. அடுத்தடுத்த நாட்களில் பல கேள்விகளை எழுதியனுப்பிய "அன்பன் அறிவழகன்" என்பவர் ரஜினீஷ் பற்றிய ஒரு கேள்வியும் எழுதி, "தரமற்ற கேள்வி எனப் புறக்கணித்து உங்கள் ஒட்டாண்டித்தனத்தை மறைக்க முயற்சி செய்யாதீர்கள்!" என்று வேறு எச்சரித்துள்ளார். புதிய ஜனநாயகம் ஏட்டின் ஐந்தாம் ஆண்டுவிழாவின் போது எழுப்பப்பட்ட சில கேள்விகளுக்கு இன்னமும் பதில் வெளியிட வேண்டியுள்ளது. அவற்றோடு புதிதாக வரும் கேள்விகளுக்கும் தொடர்ந்து பதில் எழுதுவோம். எனவே உடனடியாகப் பதில்கள் வரவில்லை என்பதற்காக தமது கேள்விகளை அலட்சியப்படுத்தி விட்டதாக கருதவோ, புதிய கேள்விகள் எழுதத் தவறவோ வேண்டாம் என்று வாசகர்களைக் கோருகிறோம்.

சில தோழர்களுடைய கடிதங்கள் தமது கேள்விகளுக்கு பதில்கள் கோருபவையாக மட்டும் அமையவில்லை. ஏற்கனவே நாம் எழுதிய பதில்களுக்கு அவர்கள் சார்ந்துள்ள குழுக்களின் கண்ணோட்டத்தில் வியாக்கியானங்கள் செய்து அக்குழுக்களின் நிலைப்பாடுகளை விவரிப்பவையாக உள்ளன. நீண்ட அக்கடிதங்களை அப்படியே வெளியிட்டு விரிவான பதில்கள் எழுதுவதென்பது ஆழமானதொரு அரசியல் - சித்தாந்தப் போராட்டம், வாதப் பிரதிவாதங்கள் நடத்துவதாக அமையும். அவற்றை எதிர்கொள்வதில் நமக்கு அச்சமில்லை; ஆனால் அதற்கான அரங்கமாக கேள்வி - பதில் பகுதியை மாற்றி விட நாம் தயாரில்லை. அதே சமயம் சுருக்கமான, தேவையான கேள்விகளுக்கு தொடர்ந்து பதில் அளிப்போம். சாத்தியமற்றவைகளுக்கு வேறுவகையில் நேரடியாகவோ, கடிதங்கள் மூலமோ, தனிக்கட்டுரை அல்லது பிரசுரங்கள் மூலமாகவோ - பதிலளிக்க முயலுவோம். எவ்வாறாயினும் விமர்சனங்கள், கேள்விகள் அடங்கிய கடிதங்களை எப்போதும் வரவேற்கிறோம். கேள்வி - பதில் பகுதியில் இடம் பெற வேண்டுமானால் சுருக்கமாகவும், தெளிவாகவும், நேரடியாகவும் அமையும் கேள்விகளை எழுதி அனுப்புமாறு கோருகிறோம். கடிதத்தின் உள்ளே 'கேள்வி - பதில் பகுதி' என்று தலைப்பிடுவீர்களேயானால் நிர்வாகப் பணிக்கு வசதியாக இருக்கும்.

**— ஆசிரியர் குழு, புதிய ஜனநாயகம்.**

● *உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைய இயலாத, கரும்பு, புகையிலை போன்ற பணப்பயிர்களை ஏற்றுமதி செய்தும் உணவு தானியங்களை இறக்குமதி செய்தும் மட்டுமே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ள கியூபா இப்படிப்பட்ட பொருளாதாரத்திற்காகவும் மிக அருகில் உள்ள அமெரிக்க ஏகாதிபத்திய அபாயத்தை எதிர்க்கவும் வேண்டிய தேவையை ஒட்டி ரஷியாவைச் சார்ந்து இருப்பதால் மட்டுமே கியூபாவை ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் தொங்குசதை நாடென்று கூற இயலுமா?*

*கியூபாவின் ஃபிடல் காஸ்ட்ரோ, கோர்பச்சேவின் பெரஸ்த்ரோய்கா மற்றும் கிளாஸ்நோஸ்ட் புத்தகங்களுக்கு தடை விதித்திருப்பதாக அறிகிறோம். ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் தொங்குசதை நாடென்று கூறப்படும் கியூபா இப்படிச் செய்வதின் காரணமென்ன?*

*அங்கோலா மீதான கியூபாவின் படையெடுப்பு ஏன்? இந்தப் படையெடுப்பு காரணத்தால்தான் இதை ரசியாவின் தொங்குசதை நாடு என்று கூறுகிறீரா?.*

○ சுயசார்பு பொருளாதாரத்தை நிர்மாணித்துக் கொள்வதுதான் சோசலிச நாடுகள் மேற்கொள்ள வேண்டிய சரியான பாதை. கியூபா போன்ற சிறியதொரு தீவு நாட்டில் அது சாத்தியமில்லாமல் போகலாம். அதே சமயம் அமெரிக்கா மற்றும் பிற மேற்கு ஏகாதிபத்தியங்களையும், ருசிய சமூக ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து கியூபாவை விடச் சிறிதான அல்பேனியா தனது சுதந்திரத்தைக் காத்துக் கொள்ள முடிந்திருக்கிறது. முஸ்லீம் மத அடிப்படைவாத ஈரானால் முடிந்திருக்கிறது. அதற்காக எந்த ஒரு நாடும் தனது கதவுகளை இழுத்து மூடிக் கொண்டு தனிமை வாதத்தைப் பின்பற்றி, பர்மாவைப் போல, இருளில் மூழ்கிவிடவேண்டும் என்று கூறவில்லை. சர்வதேசப் பாட்டாளிவர்க்கப் புரட்சிகர இயக்கத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனிய எதிர்ப்பு சக்திகளையும் சார்ந்து நின்று மார்க்சிய - லெனினிய கண்ணோட்டத்துடன் சரியான அரசியல், பொருளாதார, அரசு தந்திர உறவுகளை மேற்கொள்ளுவதன் மூலம் ஏகாதிபத்திய அச்சுறுத்தல் - முற்றுகையை கியூபா முறியடித்திருக்க முடியும்.

அதற்குப் பதிலாக குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பல் வகுத்துக் கொண்ட 'சர்வதேச வேலைப் பிரிவினை மற்றும் கம்யூனிச நாடுகளின் பொதுப் பொருளாதாரம்' என்ற சங்கிலியில் கியூபா பிணைந்து கொண்டது. ருசிய சமூக ஏகாதிபத்திய, மேலாதிக்கப் போர்ச் சக்கரத்தில் இணைத்துக் கொண்டது. கென்னடியின் மிரட்டலுக்குப் பயந்து கொண்டு கியூபாவின் கரீபியன் கடற்பகுதியில் இருந்து போர்க்கப்பல்களை விலக்கிக் கொண்டு குருச்சேவ் சரணடைந்து, கியூபாவை நிர்க்கதியாக விட்ட போதும் இந்த நிலை தொடர்ந்தது. எனவே ஒன்று அல்லது இரண்டு பொருள் உற்பத்தி நாடாக கியூபா மாறி இராணுவ, பொருளாதாரத் துறைகளில் ருசியாவின் தொங்குசதை நாடானது.

கோர்பியின் பிரஸ்த்ரோய்கா, கிளாஸ்நோஸ்ட் புத்தகங்களையும் ருசியப் பத்திரிகைகள் சிலவற்றையும் தடை செய்ததோடு ருசியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடக்கும் மாற்றங்களையும் கியூபாவின் ஃபிடல் காஸ்ட்ரோ ஏற்கவில்லை. எதிர்க்கிறார் என்பது உண்மைதான். காஸ்ட்ரோ மட்டுமல்ல; ருமேனியா, கிழக்கு ஜெர்மனி, செக்கஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளிலும் சமீபத்தில் தூக்கியெறியப்பட்ட ஆட்சித் தலைவர்களும் இதையேதான் செய்தனர். சோசலிசத்தைக் காப்பதற்காகவோ, சோசலிசப் பாதைக்குத் திரும்புவதற்காகவோ இவர்கள் எவரும் இதைச் செய்யவில்லை. தமது அரசு ஏகபோக - அதிகார வர்க்க முதலாளித்துவ சர்வாதிகார ஆட்சியை வீழ்த்தி கோர்பி முன்வைக்கும் மரபுவழி - பூரண முதலாளித்துவம் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இவ்வாறு செய்கிறார்கள். ஆனால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் போலவே கியூபாவின் அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் கீழ் வறுமையும் வேலை இல்லாத் திண்டாட்டமும், பற்றாக்குறையும் பெருகியுள்ளது. அதோடு 'சர்வதேசப் புரட்சி' நடத்திவரும் கியூபாவின் ராணுவமும், ராணுவத் தளபதியும், இராணுவ மந்திரி — ஃபிடல் காஸ்ட்ரோவின் சகோதரர் ராகுல் காஸ்ட்ரோவும் போதை மருந்து கடத்துவதிலும் ஈடுபடுவதாக புகார் வந்தது. ஃபிடல் காஸ்ட்ரோ இதை மறுத்து வந்தார். சில மாதங்களுக்கு முன்பு குற்றம் நிரூபிக்கப்பட்டு இராணுவத் தளபதிக்கே மாணதண்டனை விதித்து சுட்டுக் கொன்றனர். ஆகவே கிழக்கு ஐரோப்பாவைப் போலவே கியூபாவின் போலி சோசலிசமும் நீண்டநாள் நீடிக்கமுடியாது.

அங்கோலாவுக்கு மட்டுமல்ல, நமீபியா, கினியா - பிசாவு, அல்ஜீரியா, சிரியா, ஜெயர் போன்ற பிற நாடுகளுக்கும் கியூபாவின் சர்வதேசப் போராளிகளை அனுப்பியதாகப் பீற்றிக் கொள்கிறார் ஃபிடல் காஸ்ட்ரோ. உண்மையில் கிழக்கிலே ஒரு வியத்நாமைப் போல, மேற்கிலே ருசிய சமூக ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான ஒரு கூலிப்படையாகத்தான் கியூபா ராணு



படிப்பகம்

www.padippakam.com


வம் அனுப்பப்பட்டது. ஏனெனில் 'சர்வதேசப் புரட்சிக் கடமை' பற்றிப் பீற்றும் இதே காஸ்ட்ரோதான் 1960-63 சர்வதேச கம்யூனிசப் பிளவின்போது கொஞ்சமும் வெட்கமின்றி குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பலை ஆதரித்தார். பெரு, சிலி போன்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நடக்கும் மார்க்சிய - லெனினியப் புரட்சி இயக்கங்களை ஆதரிக்காது அங்குள்ள போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் நாடாளுமன்ற சரணடைவுப் பாதையை ஆதரிக்கிறார். நிகாரகுவா, எல்சால்வடார் போன்ற மத்திய அமெரிக்க நாடுகளின் அமெரிக்க எதிர்ப்பு இயக்கங்களும் ஏதாவது ஒரு வகையில் ருசிய சார்பு நிலையில் உள்ளதாலேயே அவற்றை ஆதரிக்கிறார். ஆகவே அரசியல், இராணுவம், பொருளாதாரம், அரசு தந்திரம், சித்தாந்தம் ஆகிய சகல துறைகளிலும் கியூபாவின் ருசிய சார்பு காரணமாக அதைத் தொங்குசதை நாடாகக் கருதுகிறோம்..

● *நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அமைத்த இராணுவம் புரட்சிகரமானதா. இல்லை எனில் விளக்கம் தேவை?*

***—அன்பன் அறிவழகன், சென்னை.***

○ நாட்டின் உண்மையான தேசபக்தர்கள் பலரது உணர்வையும் பாதிக்கும் பிரச்சினை பற்றிய கேள்வி இது! உண்மை கசப்பான பாதையாக இருப்பினும் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஒருவரது இலட்சியமும் நோக்கமும் எவ்வளவுதான் நியாயமானதாக உன்னதமானதாக இருப்பினும், அதை அடைவதற்கான பாதையும் நேர்மையானதாகவும் சரியானதாகவும் இருக்க வேண்டும். இல்லையானால் என்ன நேரும் என்பதற்கு 'நேதாஜி' சுபாஷ் சந்திரபோசின் நடவடிக்கைகள் நல்ல சான்றாக அமைந்தன. தேச விடுதலைக்கு ஆயுதப் போராட்டம்தான் ஒரே வழி என ஒரு தேசிய முதலாளி வர்க்கத்துக்குரிய புரட்சிகரமான நிலைப்பாட்டிற்கு அவர் வருவதற்கு காங்கிரசு - காந்தியின் சர்வாதிகாரம் ஒரு முக்கிய காரணமாக இருந்தது. ஆனால் உலகம் முழுவதையும் கபளீகரம் செய்வதற்காகவே மாபெரும் அழிவுப் போரை நடத்திக் கொண்டிருந்த பாசிச - நாஜி ஏகாதிபத்திய வெறியர்கள் மூலமாக இந்திய விடுதலையைச் சாதித்து விட முடியும் என்று நம்பி கூட்டு வைத்துக் கொண்டார். ''உண்மையில் ருசியாவுக்குப் போய் ஸ்டாலினிடம் உதவி கோர விரும்பினார்; சூழ்நிலை காரணமாக அது சாத்தியமில்லாமல் போனது; இட்லரைச் சந்தித்துவிட்டு, ஜப்பானிய உதவி பெற்றார்; அப்போதும் ஜப்பானிடம் ஆயுத - நிதி உதவி பெற மறுத்து, வெளிநாடுகளில் வாழும் இந்தியரைச் சார்ந்து நின்று மட்டுமே இராணுவம் அமைத்து, காலனிய அரசுக்கு எதிராகப் போரிட்டார்'' என்று 'நேதாஜி'யின் ஆதரவாளர்கள் இப்போதும் நியாயப்படுத்த முயல்கிறார்கள். இதற்கெல்லாம் ஆதாரமே கிடையாது

**நூற்றுக்கணக்கான இந்தியர்கள் தம்மையும், தம்முடைய பொன்னையும் பொருளையும் 'நேதாஜி' அமைத்த இராணுவத்துக்காகக் கொடுத்தனர். ஆனால் ஒரு ஏகாதிபத்தியத்திடமிருந்து இன்னொரு ஏகாதிபத்தியத்தின் காலனியாவதற்கான போருக்காகத்தான் இப்படிச் செய்கிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது. இப்போது சொல்லுங்கள். பழைய விலங்கை ஒடிப்பது புதுவிலங்கு பூட்டுவதற்குத்தான் என்கிறபோது அதிலே விடுதலை இலட்சியம் எங்கே இருக்கிறது? புரட்சி எங்கே இருக்கிறது?.**




● *புதிய ஜனநாயகம் 1989 அக்.16-31 இதழில் கரீம் எழுதிய ''வசந்தசேனையும் சோழர் குலக் கொழுந்தும்'' என்ற கட்டுரையில் வந்த ஒரு வரி என்னைத் திடுக்கிடச் செய்தது. ''அவசரநிலைக் காலத்தில் தனது குடும்பத்தினர் போலீசிடம் உதைபட்ட 'தியாகத்தை' அடிக்கடி எடுத்து விடுகிறார். அதற்கு அரசியல் காரணம் மட்டுமல்ல; கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் செய்த அக்கிரமங்கள், அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவும் லஞ்ச ஊழல் ரகசியங்களைக் கறப்பதற்காகவும் சேர்த்துத்தான் நடந்தது. லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளால் சுகத்தை அனுபவித்த குடும்பம் இதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்....'' இது ஒரு பாசிசக் கொடுமையின் தாக்குதலை வரவேற்கும் பாணியாக உள்ளது.*

*ஆளும்கும்பல்களுக்குள் இருக்கும் முரண்பாடுகளைக் கூட, பயங்கரவாத அரசு ஒடுக்குமுறையின் மூலம் (பெரிய திருடன் சிறிய திருடன் என்று பார்க்கவில்லை என்றாலும்) தீர்த்துக் கொள்வது 'எமர்ஜென்சி'யை ஏற்று ஆதரித்து நடத்தாமல் இரட்டை வேடமிட்ட சாகசத்தையும் முறியடித்த அந்த செயலுக்காகவும் நடந்த தாக்குதலும் அதில் அடங்கவில்லையா? தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் உரிமை மக்களுக்கானது தானே! பெண்களை மானபங்கப் படுத்தினதையும் இன்னும் பல்வேறு கொடுமைகளையும் அந்தக் குடும்பமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது வக்கிர எண்ணமாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதுகிறேன்.*

***—நா.குருமூர்த்தி, பந்துவக்கோட்டை.***

○ இந்திரா காந்தியும், டெல்லி சீக்கிய படுகொலைக்குக் காரணமாயிருந்த காங்கிரசு எம்.பி. லலித் மக்கானோடு அவரது மனைவியும் சீக்கியத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அப்போது, ''என்னதான் இருந்தாலும், நிராயுதபாணியான, அதுவும் பெண்ணை இப்படிக் கோரமாகக் கொல்லலாமா?'' என்று பலரும் கேட்டார்கள். ''இந்திராவின் குற்றங்களுக்காக அவரைத் தண்டிக்கும் உரிமை மக்களுக்குத்தான் உண்டு. அதற்கு மாறாக சீக்கியத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றதை ஏற்கமுடியாது'' என்று சில போலிப் புரட்சிகளின் ஏடு எழுதியது! நாம் என்ன எழுதினோம்? ''ஆளும் வர்க்கப் பிரிவினருக்கிடையே ஏற்படும் பிளவும் பகையும் எவ்வளவு குரூரமானதாகிறது என்று கூறி எள்ளி நகையாடும் உரிமை பாட்டாளி வர்க்கத்துக்கு உண்டு'' என்றோம். நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏதோ ஒருபக்கம் சாய்ந்து நின்று நியாய, அநியாயங்களை அலசவில்லை. இப்படித்தான் கருணாநிதி குடும்பத்துக்கு இழைக்கப்பட்ட 'அவசரகால ஆட்சிக் கொடுமைகளையும்' பார்க்கிறோம். இதிலே வக்கிர எண்ணம் ஏதுமில்லை.

கருணாநிதி குடும்பத்தினர் தாக்கப்பட்டதற்கு தோழர் குறிப்பிடுவதைப் போல அரசியல் காரணங்களும் உண்டு. எனவேதான் அது 'மட்டுமல்ல' என்று குறிப்பிட்டுவிட்டு, கருணாநிதி மூடி மறைக்கும் வேறு காரணங்களை எடுத்துச் சொன்னோம். ஆளும் கும்பல்கள் ஆதாயம் கருதி எவ்வளவு தூரம் ஆபாசமாகவும் நெருக்கமாகவும் கூடிக் குலாவுகிறார்களோ அவ்வளவுதூரம் பிளவும் பகையும் முற்றும்போது குரூரமாகவும் வக்கிரமாகவும் பழி தீர்த்துக் கொள்ளுகிறார்கள். கருணாநிதியின் அரசியல் சாகசங்களே இதற்குச் சான்றாகும். ''என்னைத் தாக்கட்டும்; என் குடும்பத்தையும் அல்லவா தாக்கினார்கள்'' என்று ஒப்பாரி வைத்து அனுதாபம் தேடும் கருணாநிதி வாரிசுரிமை, லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் ஆகிய ஆட்சியின் பலன்கள் என்கிற போது மட்டும் தான் வேறு, தன் குடும்பம் வேறு என்றா பிரித்துப் பார்க்கிறார். சட்டமன்றத்தில் ஜெயலலிதாவின் ஆடை அவிழ்ப்பை ஒட்டிப் பேசும்போது ''அரிசன உறுப்பினர் யசோதாவின் கையை ஒடித்த போது யார் அனுதாபப்பட்டார்கள்? சிங்கப்பூரில் இருந்து திரும்பிய எனது குடும்பத்துப் பெண்களின் ஆடைகளை அவிழ்த்து சோதனை போட்டு அவமானப்படுத்திய போது யார் கண்டித்தார்கள்?'' என்று கேட்கிறார், கருணாநிதி! ஆளும் கும்பல்களுக்கிடையே மோதல் ஏற்படும்போது அவர்கள் மனிதாபிமானம், நாகரிகம் பார்ப்பதில்லை; குரூரமாகவும் வக்கரமாகவுமே நடந்து கொள்கிறார்கள்; கருணாநிதியே இதற்கு விதிவிலக்கல்ல. இந்தப் பொருளில்தான் தோழர் குறிப்பிடும் வாசகத்தை எழுதினோம். ஒரு வேளை மிகவும் சுருக்கமாக எழுதியிருந்ததால் இந்தக் கருத்தைத் தெளிவாகப் புலப்படுத்தத் தவறியிருக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# நேபாளம்: முடியாட்சிக்கு எதிராக மக்களது பேரெழுச்சி!

ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா இருந்தானாம் என்று நமது தாத்தாக்கள் அந்தக் காலத்தில் கதை சொல்வதுண்டு. இன்றைய குழந்தைகள் கூட இத்தகைய பழங்காலக் கதைகளை விரும்பிக் கேட்பதில்லை. ஆனால் இன்னமும் ஒரு நாட்டில் ஒரு ராஜாவின் கொடுங்கோலாட்சி நடக்கிறது. குடிமக்கள் உரிமைகளின்றி அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள் என்றால் அது வியப்புக்குரியது மட்டுமல்ல; நாகரீக மனித குலத்துக்கே எதிரானது; அவமானகரமானது.

இமயமலை உச்சியில் உள்ள இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் மன்னராட்சிக் கொடுங்கோன்மை இன்னமும் நீடிக்கிறது. நிலப்பிரபுத்துவ முடியாட்சி சர்வாதிகாரத்துக்கு எதிராக இன்று நேபாளம் போர்க் கோலம் பூண்டு நிற்கிறது. "மன்னராட்சி முறை ஒழிக! ஜனநாயகம் ஓங்குக!" என்று மாணவர்களும் இளைஞர்களும் உழைக்கும் மக்களுடன் இணைந்து புரட்சிப் போரில் குதித்துள்ளனர். எல்லா சர்வாதிகாரிகளையும் போலவே மன்னர் பிரேந்திராவின் அரசும் போராடும் மக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தும், முன்னணியாளர்களைக் கைது செய்தும் போராட்டத்தை துப்பாக்கிமுனையில் ஒடுக்கிவிடத் துடிக்கிறது. ஆனால் பொது வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள், போலீசு நிலையங்களின் மீது தாக்குதல், சட்டமறுப்பு இயக்கம் என்று போராட்டத்தில் அலைஅலையாக முன்னேறி மன்னராட்சிக்கு சவக்குழி தோண்டி வருகிறார்கள், நேபாள மக்கள்.

இந்தியாவின் மேலாதிக்கம் மற்றும் முடியாட்சிக் கொடுங்கோன்மை என்னும் இரட்டை நுகத்தடியின் கீழ் சிக்கித் தவிக்கும் சின்னஞ்சிறு நாடுதான் நேபாளம். நீண்ட காலமாக ராணாக்கள் எனப்படும் மன்னர்களது பரம்பரை முடியாட்சி, சர்வாதிகாரமே அங்கு நீடித்து வந்தது. மன்னராட்சி கொடுங்கோன்மைக்கு எதிராக நேபாள மக்கள் நடத்திய சிறியதும் பெரியதுமான போராட்டங்களுக்கு காந்தியவாதக் கட்சியான நேபாள காங்கிரசு கட்சி தலைமையேற்றது. தொடர்ச்சியான இப்போராட்டங்களுக்குப் பிறகு, இன்றைய மன்னர் பிரேந்திராவின் பாட்டனாரான திருபுவன் முடியாட்சியைத் துறந்து, பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியை நிறுவ இசைந்தார். அதன்பிறகு 1959ல் பல கட்சி ஜனநாயகத் தேர்தல் நடந்து நேபாள காங்கிரசின் அப்போதைய தலைவராக இருந்த கொய்ரலா பிரதமரானார்.

ஆனால் கொய்ரலாவின் அரசு 18 மாதங்களே நீடித்தது. திருபுவனின் மகனாகிய மன்னர் மகேந்திரா டிசம்பர் 1960ல் ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி பாராளுமன்ற ஆட்சி முறையைத் தூக்கியெறிந்து மீண்டும் மன்னராட்சியை நிறுவினார். கொய்ரலாவும் அவரது அமைச்சர்களும் மற்றும் கட்சி ஊழியர்களும் 8 ஆண்டு காலம் விசாரணையின்றி சிறையிடப்பட்டனர். அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், இதர அமைப்புகள் அனைத்தும் தடை செய்யப்பட்டன.

ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் அரியணை ஏறிய மன்னர் மகேந்திரா உள்ளூர் அளவில் கட்சி சாராத பஞ்சாயத்துக்களை நிறுவி தனது கொடுங்கோலாட்சியை நிலைநிறுத்தினார். இப்பஞ்சாயத்துக்களில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மன்னருக்கு ஆலோசனை மட்டுமே கூறமுடியும். மற்றபடி அதிகாரம் அனைத்தும் மன்னருக்குத் தான்! மகேந்திராவுக்குப் பின்னர் அவரது வாரிசான மன்னர் பிரேந்திரா 1972ல் அரியணை ஏறி முடியாட்சி கொடுங்கோன்மையைக் கட்டிக் காத்தநோடு, ஜனநாயகத்துக்கான, மனித உரிமைக்கான போராட்டங்களை துப்பாக்கி முனையில் அடக்கி ஒடுக்கினார்.

அதுவரை காந்திய போராட்டங்களில் ஈடுபட்டு வந்த நேபாள காங்கிரசுக் கட்சி 1976க்குப் பிறகு மன்னருடன் சமரசப் பேச்சு வார்த்தைகளில் இறங்கி துரோகப் பாதையில் சென்றது. நேபாள காங்கிரசின் துரோகத் தலைமையை மறுதளித்து, இடதுசாரிகள் தலைமையிலான மாணவர்களது போராட்டங்கள் தீவிரமாயின. பல்கலைக் கழகங்கள் அரசியல் பாசறையாக மாறி, மாணவர்களது போராட்டங்கள் புயலென முன்னேறத் தொடங்கியதும் கிலிபிடித்த மன்னர் பிரேந்திரா, பஞ்சாயத்து ஆட்சி முறையா? பாராளுமன்ற ஆட்சி முறையா? எது தேவை என்பதை மக்களிடம் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தி தீர்மானிக்க 1979ல் ஒப்புக் கொண்டார். ஆனால் அந்த கருத்துக் கணிப்புத் தேர்தல் ஒரு மோசடி - தில்லுமுல்லு தேர்தலாகவே இருந்தது. மன்னரது அடியாட்கள் வாக்குச் சாவடிகளைச் சூறையாடி கள்ள ஓட்டுப் போட்டனர். 54% மக்கள் மன்னராட்சியை ஆதரிப்பதாக தேர்தல் முடிவுகள் காட்டுவதாகக் கூறி தனது கொடுங்கோலாட்சியைத் தொடர்ந்தார் மன்னர் பிரேந்திரா.

ஏற்கனவே பின்தங்கிய நிலையிலிருந்த நேபாளம், மன்னர் பிரேந்திராவின் ஆட்சியின் கீழ் திவால் நிலையை அடைந்தது. வறுமையும், வேலையின்மையும் பூதாகரமாகப் பெருகி நேபாள உழைக்கும் மக்கள் இந்தியாவுக்கு வந்து அற்பக் கூலிக்கு உழைத்து அல்லற்படுகின்றனர். மன்னரும் அவரது பரிவாரங்களும் நேபாளத்தை களிவெறியாட்ட - சூதாட்ட - சுற்றுலாத்தலமாக மாற்றி உல்லாச சுகபோகத்தில் ஊறித் திளைக்கின்றனர். இந்திய ஊழல் பெருச்சாளிகளே அதிசயக்கும் அளவுக்கு ஒவ்வொரு ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்திலும் மன்னர் குடும்பமும் அமைச்சர்களும் கமிஷன் கொள்ளையடித்துக் கொழுக்கின்றனர். 30 ஆண்டுகளுக்கு முன் வறுமைக் கோட்டுக்குக் கீழே 15% ஆக மக்கள் தொகை இன்று 60% ஆக உயர்ந்துவிட்டது. அதே சமயம், சுற்றுச் சூழலை நாசப்படுத்தி, காடுகளை அழித்து காபி பயிரிட்டு நாட்டையே சூறையாடுகிறது மன்னர் குடும்பம். சுருக்கமாகச் சொன்னால் பட்டினியால் பசி தவிக்கும் நாடுகளைப் பற்றிய உலக வங்கியின் பட்டியலில் எத்தியோப்பியாவுக்கு அடுத்த நாடாக இருப்பது நேபாளம் தான்!

தேசத்தின் இந்த இழிநிலைக்கு அடிப்படையாக உள்ள நிலப்பிரபுத்துவ மன்னராட்சி ஆதிக்கத்தை எதிர்த்து கடந்த இரு மாதங்களாக வீறுகொண்டெழுந்து போராடி வருகிறார்கள் நேபாள மக்கள். அதிலும் குறிப்பாக கடந்த ஜனவரியில் நடந்த நேபாள காங்கிரசுக் கட்சியின் மாநாட்டுக்குப் பின்னர் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. இந்திய ஓட்டுப் பொறுக்கிகள் பலரும் இந்த மாநாட்டில் கலந்து



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு மன்னராட்சியை எதிர்த்தும், ஜனநாயகத்துக்கான போராட்டங்களை ஆதரித்தும் போட்டி போட்டுக் கொண்டு கூச்சலிட்டுவிட்டுத் திரும்பியுள்ளனர். ஆனால் நேபாளத்தின் மீது இந்தியா விதித்துள்ள பொருளாதாரத் தடைகளைப் பற்றியோ, இந்திய மேலாதிக்கத்தைப் பற்றியோ இவர்கள் வாயே திறக்கவில்லை. தாங்கள் நேபாள மக்களின் போராட்டத்தை ஆதரிப்பது நியாயமானது; ஆனால் பாகிஸ்தான் காஷ்மீர் மக்களின் போராட்டத்தை ஆதரித்தால் அது இந்தியாவின் உள் விவகாரத்தில் தலையிடும் சதிச் செயல் என்று ஒரே குரலில் எதிர்க்கின்றனர். ஜனநாயக அவதாரமெடுத்துள்ள இந்திய ஓட்டுப் பொறுக்கிகளின் லட்சணம் இதுதான்.

தங்களது அச்சான வாரிசாக இருப்பதால்தான் நேபாள காங்கிரஸ் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளின் கூட்டணியை இந்திய ஓட்டுப் பொறுக்கிகளும், பத்திரிக்கைகளும் தூக்கிப் பிடிக்கின்றன. இதிலே வேடிக்கை என்னவென்றால், நாட்டின் கௌரவத் தலைவராக மன்னர் இருப்பது; ஆட்சி நிர்வாகத்தை பாராளுமன்றம் ஏற்பது என்கிற பிரிட்டிஷ் ஆட்சிமுறை திட்டத்துடன் மன்னரை பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திக்கவே போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளது நேபாள காங்கிரசுக் கட்சி. ஆனால் போலிக் கம்யூனிஸ்டுகளோ இந்தியாவைப் போன்ற பாராளுமன்ற ஆட்சிமுறையைக் கோருகின்றனர். இவ்விரண்டு போலி ஜனநாயக ஆட்சிமுறைக்கு அப்பாற்பட்டு "மஷால்" கட்சியினர் என்றழைக்கப்படும் மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள், மக்களின் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் புதிய ஜனநாயகப் புரட்சித் திட்டத்தை முன்வைத்து ஆயுதப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுக்கின்றனர். குறிப்பாக, பல்கலைக் கழக மாணவர்கள் - இளைஞர்கள் மத்தியில் செல்வாக்கும் பலமும் பெற்றுள்ள புரட்சியாளர்கள் உழைக்கும் மக்கள் மத்தியிலும் வேரூன்றி வருகின்றனர். மன்னராட்சிக்கு எதிரான நேபாள காங்கிரஸ் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளின் கூட்டணி தலைமையிலான சரியான போராட்டங்களில் பங்கேற்று ஆதரிக்கின்றனர்.

புரட்சியாளர்களின் செல்வாக்கையும் அரசியல் முன் முயற்சியையும் கண்டு, "எனது ஜனநாயகத்துக்கான போராட்டம் தோற்றால், பயங்கரவாதிகளின் பிடியில் நாடு சிக்கிவிடும்" என்று பீதியில் கூச்சலிடுகின்றனர், காந்தியவாதிகளான நேபாள காங்கிரசுக் கட்சியினர். உண்மைதான்! மன்னராட்சியை விட புரட்சியே அவர்களுக்குப் பிரதான எதிரியாக உள்ளது.

ஆனால், மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு பாராளுமன்ற ஆட்சி ஒருக்காலும் மாற்றுத் தீர்வாகிவிட முடியாது. அது மீண்டும் மக்களின் கழுத்தில் பொன் விலங்கைப் பூட்டுவதாகும். மன்னராட்சியை மட்டுமல்ல; போலி ஜனநாயகப் பாராளுமன்ற ஆட்சியையும் புரட்சியாளர்கள் தலைமையில் நேபாள மக்கள் விரைவில் தூக்கி யெறிவார்கள். புரட்சியில் மலரும் புதிய ஜனநாயகத்தை நிச்சயம் சாதிப்பார்கள்.

— குமார்

# பார்வையற்றவர்கள் மீது மிருகத்தனமான தாக்குதல்!

ஊனமுற்றவர்களுக்கு பரிவு காட்டுவதாக பசப்பும் கருணாநிதி அரசு, பார்வையற்ற பட்டதாரிகள் வேலை கேட்டு போராடிய போது நடுத்தெருவில் வைத்து அடித்ததுள்ளது.

எவ்வளவோ இடர்பாடுகளுக்கு இடையில் தங்கள் உடல்ஊன குறைகளுக்கு மத்தியில், மற்றவர்களுக்கு இணையாக தங் கள் தகுதியை உயர்த்திக் கொள்கிறார்கள். உடல்ஊனத்தை அல்ல, தங்கள் தகுதியைகாட்டி வேலை கேட்டு மத்திய மாநில அரசு வேலைவாய்ப்பு களில் 2 சதவிகிதம், பார்வையற்றவர்களுக்கு ஒதுக்க வேண்டும் '88 ஆம் ஆண்டு அரசு விதிப்படி பார்வையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை கண்காணிக்க தனிக்குழு அமைக்க வேண்டும், மற்றும் உதவி தொகைகளை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகளுக்காக, தொடர்ச்சியாக போராடி வருகிறார்கள், பார்வையற்ற பட்டதாரிகள். பாசிச எம்.ஜி. ஆர். மாநில அளவில் இந்த கோரிக்கைகளை ஏற்பதாக கூறி, பிறகு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களுக்கான ஒதுக்கீட்டில் 2 சதவிகிதம் என்று ஏமாற்றினார்.

சென்னை அண்ணாசாலையில் உள்ள சமூகநலத் துறை இயக்குநர் அலுவலகம் முன்பு காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தனர். 12.2.90 அன்று பார்வையற்ற பட்டதாரி பெண்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட பார்வையற்ற பட்டதாரி மாணவர்கள், அவ்வலுவலகம் முன்பு ஊர்வலத்திற்கு குழுமினர்.

'காவ'லுக்கு வந்திருந்த போலீசு அவர்களை கலைந்து போகும்படி மிரட்டியது. மறுத்த சங்க பிரதிநிதிகள், ஊர்வலத்திற்கு ஆயத்தமானார்கள். பார்வையற்ற மாணவர்கள், தங்களுக்குள் தட்டுதடுமாறி ஊர்வலத்திற்கான ஒழுங்கை கடைபிடிக்க முயற்சித்தார்கள். குழந்தைகள் போல் ஒருவர் சட்டையை ஒருவர் பிடித்துக் கொண்டு அணிவகுத்து கோரிக்கைகளை முழங்கினார்கள்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அவர்களை காட்டுமிராண்டித்தனமாக தாக்கியது. அவர்களின் எதிர்ப்பையும் மீறி 50க்கும் மேற்பட்ட பார்வையற்ற மாணவர்களை வாரிச் சென்றது போலீசு.

இந்த உண்மைச் சம்பவமும், போலீசின் காட்டுமிராண்டி செயலும் வெளியில் பரவும்முன்பே, போலீசின் பொய் அறிக்கையையும் கருணாநிதியின் திடீர் 'உதவி'யையும் பத்திரிக்கைகள், முன் பக்கத்தில் செய்திகள் வெளியிட்டன.

ஒரு 'சப்-இன்ஸ்பெக்டர்' உட்பட 2 போலீசுக்காரர்கள், பார்வையற்ற மாணவர்களால் தாக்கப்பட்டதாகவும், போலீசு வேன் கண்ணாடியை கல்லெறிந்து உடைத்ததாகவும், கூச்சம் இல்லாமல் புளுகியது, போலீசு. கருணாநிதி, போலீசு அக்கிரமத்தை திசைதிருப்ப, 2 மணி நேரத்தில் கோட்டையில் பத்திரிக்கையாளர்களை கூட்டினார். பார்வையற்றவர்களுக்கு அனைவருக்கும் வேலை, 'உதவிதொகை இருமடங்கு' என்று விளம்பர ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

# காவிரி நீரில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவோம்!

காவிரி நீரில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டக் கோரியும், திருச்சி நேரு சிலை - தஞ்சை நினைவுத் தூண் தகர்ப்பைக் காரணம் காட்டி தோழர்களைக் கைது செய்ததைக் கண்டித்தும் சீர்காழியில் புதிய கலாச்சாரம் வாசகர் வட்டத்தின் சார்பாக பொதுக் கூட்டமும் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றன.

15.2.90 அன்று மாலை 7 மணிக்குத் துவங்கிய இப்பொதுக் கூட்டத்திற்கு தோழர் அம்பிகாபதி தலைமையேற்க, காவிரி நீரில் தமிழகத்தின் உரிமைகளை ஓட்டுப் பொறுக்கிகள் எவ்வாறு அடகு வைத்து நாடகமாடுகின்றனர் என்பதை விளக்கி தோழர் குமாரும், திருச்சி - தஞ்சையில் புரட்சிகர அமைப்புகளின் தோழர்களைப் போலீசார் கைது செய்து சித்திரவதை செய்ததைக் கண்டித்து மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மாநிலப் பொருளாளர் தோழர் காளியப்பனும் சிறப்புரை ஆற்றினர். அதன் பின்னர் விவசாயிகள் விடுதலை முன்னணி கலைக் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

ஏறத்தாழ 300 பேருக்கும் மேல் இக்கூட்டத்திற்கு திரண்டு வந்த உழைக்கும் மக்கள், நாம் முன் வைத்த கருத்துக்கள் சரியானதென்றும், தாமும் இத்தகைய புரட்சிகர அமைப்புகளில் இணைய விரும்புவதாகவும் கூறி ஆதரவளித்தனர்.

தகவல்: புதிய கலாச்சாரம் வாசகர் வட்டம், சீர்காழி.

படிப்பகம்

www.padippakam.com

# தொடரும் தேவதாசி முறை

# கடவுளின் பெயரால் விபச்சாரம்

நிலப்பிரபுத்துவக் கலாச்சார ஆதிக்க கொடுமையை எப்படி விளக்குவது? பிற்போக்கானது, மிருகத்தனமானது என்றா..? அதன் வக்கிற வெறித்தனத்தை முழுமையாகச் சொல்ல வார்த்தைகளால் முடியாது. அருவறுப்பான அதன் ஆதிக்க கலாச்சாரத்தின் ஒரு பகுதி தேவதாசிகள் முறை. ஊரில் இருக்கும் ஆண்டைகளின் சதைத் திமிருக்கு தீனியாக இவர்கள் கடை விரிக்கப்பட்டவர்கள்.

கடந்த பிப்ரவரி மாதம், கர்நாடகம் பெல்ஹாம் சௌடட்டி மலை எல்லம்மாள் கோவில் திருவிழாவின் போது ஆண்களுக்கு உடல் வெறியை தீர்க்க பக்கத்து கிராமங்களிலிருந்து ஓட்டிவரப்பட்ட உழைப்பாளி பெண்கள் இவர்கள். தாரை தம்பட்டை முழங்க எல்லம்மாளின் சன்னிதானத்தில் ஆண்களுக்கு இவர்கள் அர்ப்பணிக்கப்பட்டார்கள். தேவையானவர்கள் தங்களை அனுபவித்துக் கொள்ளலாம் என்பதற்கு அடையாளமாக பொட்டு கட்டும் சடங்கும் எல்லம்மாள் கோவிலின் சந்நிதானத்தில் நடந்தது. பூசாரிகள் சூடம்காட்டி பொட்டு கட்டி எல்லோருக்கும் பொது என்று விளம்பரப்படுத்துகிறார்கள். தேவையானவர்கள், ஆளுக்கு ஆள் இழுத்துக் கொண்டு போய் அவர்களை அனுபவிக்கிறார்கள்.


மன்னர்கள் காலத்தில் ஆண்டைகளின் அனுபோக உரிமையாக இருந்தது தேவதாசி முறை. கொழுப்பேறிய மன்னர்கள் தங்களுக்கு அந்தப்புரங்களை அமைத்துக் கொண்டு அதில் லீலைகள் புரிந்தனர். அவர்களுக்கு கீழ் தொண்டுழியம் புரிந்த நிலப்பிரபுக்கள், சேனைத் தளபதிகள், பெரும் வர்த்தகர்கள் ஆபாச வக்கிர வாழ்க்கையில் ஊறித் திளைத்தனர்.

இவையில்லாமல், தங்களது சமூக அந்தஸ்த்தை நிலைநாட்ட கோயில் சடங்குகளில் அவர்கள் தங்களின் கீழ் சேவகம் செய்த உழைப்பாளிகளின் இளம் மனைவிகளையும், அழகிய பெண்களையும் அனுபவிக்கும் முதல் உரிமையை அதிகாரத்தின் மூலம் நிலைநாட்டினார்கள்.

சாதிய ரீதியில் வேலைப்பிரிவினை மூலம் குடிமக்களை சுரண்டியது போலவே, தங்கள் கொழுப்புக்கு வடிகாலாக தேவதாசி முறையை உருவாக்கினார்கள். அதற்காக பெண்களின் உடலில் முத்திரை குத்தி அவர்களைக் கோயில்களில் நடனமாடவும், தங்களின் அந்தப்புரங்களுக்கும் அழைத்துக் கொண்டார்கள். இவை அனைத்தும் கடவுளின் கட்டளையென்றும் கடவுளை மகிழ்விக்கும் புனிதச் செயல் என்றும் கதை கட்டினார்கள்.

இன்று முடிசூடிய மன்னர்கள் இல்லை. ஆனால், மக்களின் வரிப் பணத்தில் உண்டு கொழுத்து கொழுப்பேறிய மந்திரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊழியம் செய்யவும் அவர்களை ஆட்டுவிக்கவும் அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு அடியாட்களாக போலீசும், ஆள்காட்டும் பொறுக்கிகளும் இருக்கிறார்கள். மக்களுக்கு மேலானவர்களாக அதிகாரம் செய்யும் இக்கும்பல் அதிகாரத்தை ஏந்தி கொழுப்பேறி திரிகிறது. ஒருபுறம் ஐந்து நட்சத்திர வக்கிர கலாச்சாரத்தோடு நிலப்பிரபுத்துவ காட்டுமிராண்டித்தனமான ஆபாசத்திலும் திளைக்கிறது.

ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் இறுதியிலிருந்து பிப்ரவரி மாதம் வரை தேவதாசி விபச்சாரம் திருவிழா போல் நடக்கிறது. சமூக சேவை அமைப்புகள், பெண்ணுரிமை இயக்கங்கள், சுகாதார நிறுவனங்கள், அரசியல் கட்சிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் என்று ஒன்றுசேர்ந்த போராட்டங்கள் அனைத்தையும், ஒவ்வொரு ஆண்டும்





படிப்பகம்

www.padippakam.com



ஆளும் கட்சிகள் அலட்சியம் செய்கின்றன.

''பல நூற்றாண்டு காலமாக தொடரும் மக்களின் தெய்வ நம்பிக்கைக்கு தடை விதிக்க முடியாது. மரபு வழியாகத் தொடரும் வழிபாட்டு முறையை விபச்சாரம் என்று கொச்சைபடுத்துவதை ஏற்க முடியாது'' என்று தங்களது வக்கிர வெறிக்குத் தீனி போடும் தேவதாசி விபச்சாரத்தை பாதுகாப்போடு நடத்துகின்றனர். ஆளுங்கட்சி மற்றும் அரசு எந்திரத்தின் முழு ஒத்துழைப்போடு, இத்திருவிழாவையே மொத்தமாக 'கான்ட்ராக்ட்' எடுக்கும் கும்பல்கள் இப்போது பெருத்துவிட்டது. பெண்களை கிராமங்களிலிருந்து குறைந்த விலைக்கு வாங்கி வந்து பொட்டு கட்டி கடவுளுக்கு அர்ப்பணம் செய்து விபச்சாரத்தில் ஈடுபடுத்துகின்றனர். உழைப்பாளி வீட்டுச் சிறுமிகளும் இதில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

பல ஆண்டுகளாக இவை எதையும் காதில் போட்டு கொள்ளாத அரசை இந்த முறை கையும்களவுமாக தோலுரித்தனர், ஜனநாயக உணர்வுகொண்ட மருத்துவ அறிஞர்களைக் கொண்ட இந்திய சுகாதார அமைப்பு (IHO) உறுப்பினர்களில் சிலர். தாங்களே ''விபச்சாரி''களாகவும், விபச்சார தரகர்களாகவும் மாறி எல்லம்மாள் கோயிலுக்குச் சென்றனர். 'விபச்சாரி'யாக நடித்தவர் தான் தேவதாசியாக விரும்புவதாக, அக்கோயில் பூசாரியிடம் கூறினார். 'விபச்சார தரகராக' நடித்தவர், வெளியில் நிறைய போலீசு இருப்பதால் பயமாக இருப்பதாக பூசாரியிடம் கூறினார்.

பூசாரி, 'எதறகும் பயப்பட வேண்டாம்; போலீசு நம்ம ஆள் தான்' என்று தைரியமூட்டி குரு காணிக்கையாக 25 ரூபாய் வாங்கிக் கொண்டு பொட்டுகட்டி தேவதாசியாக்கினார். அவர்கள் உடனே வெளியே வந்து ஒலிபெருக்கி மூலம் விபச்சாரத்துக்குண்டான 'லைசென்ஸ்'ஐ பொட்டுகட்டி கோவிலுக்குள்ளேயே வழங்குவதை பிரச்சாரம் செய்தனர்.

இதுநாள் வரையில் கோயிலுக்குள் தேவதாசி சடங்கு நடக்கவில்லை. கோயிலுக்கு வெளியில் தான் மக்களே அந்நிகழ்ச்சியை நடத்துகின்றனர் என்று புளுகிய போலீசும் ஆளும் கும்பலும் முகம் வெளுத்துபோனது. பூசாரியை உடனே கைது செய்யக் கோரினார்கள். ஆனால் உடனே போலீசு தலைமறைவாகிவிட்டது. அருகில் இருந்த போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தனர். முதலில் இவர்கள் மீதே குற்றம் சாட்டியது போலீசு. பின்னர் அவர்களின் உறுதியையும், புகைப்பட ஆதாரங்களையும் கண்டு பின்வாங்கியது. விபச்சார கான்ட்ராக்ட் எடுத்து பூசாரியாக ஏமாற்றிய இருவரைக் கைது செய்தது.

கண் துடைப்புக்காக போலீசு நடத்திய கைது நாடகத்தையே சகித்துக் கொள்ள முடியாமல், பெல்காம் மாவட்ட கலெக்டர், அன்று நடு இரவே இதில் தலையிட்டார். 'கழுத்தில் சடங்கு சின்னங்கள் (பொட்டு) அணிவித்ததாலேயே தேவதாசியாக மாற்றிவிட்டதாக கூற முடியாது'' என்று கூறினார். ''பைத்தியம் தெளிவதற்காக இச்சடங்கை நடத்த சொன்னார்கள்'' என்று பூசாரிகள் கதையை திருப்பினார்கள்.

இவ்வாறு இந்த ஆண்டு மட்டும் 2000 பேரை விபச்சாரிகளாக்கி 'தொழில்' நடத்தியிருக்கிறது, 'கான்ட்ராக்ட்' — போலீசு கும்பல். இன்னும் ஓரின உறவுக்கும் சிறுவர்களை இக்கும்பல் பயன்படுத்திவருவதும் வெளியில் வந்தது. 'ஜோஜப்பாஸ்' என்று தேவதாசிகள் போன்று சிறுவர்களுக்கு பெயர் வைத்து சடங்கு நடத்தி கொழுப்பேறிய ஆண்டைகளுக்கு அனுப்புகின்றனர். இந்த உண்மைகளை திடலடியாக மறுக்கும் பெல்காம் மாவட்ட துணைக்கமிஷனர் குருசரண் ''தங்களுடைய வேண்டுதலை மக்கள் இப்படி தமது மத நம்பிக்கையாக வெளிப்படுத்துகின்றனர்.. பல நூற்றாண்டு காலமாக மக்கள் கொண்டிருக்கும் இந்த மத நம்பிக்கைக்கு எதிராக நாங்கள் செயல்பட மாட்டோம்.. அதை தடை செய்யவும் மாட்டோம்'' என்று விபச்சாரத்துக்கு வக்காலத்து வாங்குகிறார்.

அறியாமையில் உழலும் பாமர மக்களில் சிலர் கடவுளின் முன் தங்கள் உடலை கொடுப்பதன் மூலம் அருளைப் பெறமுடியும் என்று மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர் என்பதுதான் உண்மை. ஆனால் இதையே அவர்களின் மத நம்பிக்கையாகவும் மரபுவழி வழிபாடாகவும் கூறி தங்களுடைய கீழ்த்தரமான இச்சைகளை நிறைவேற்றி கொள்கின்றன மனித மிருகங்கள்.

உலகத்திற்கே மிக உயர்ந்த நாகரீகத்தைக் கற்றுக்கொடுத்த உழைக்கும் மக்களின் உன்னதமான பண்பாட்டு வாழ்நெறிகள் மீது ஆளுங்கும்பலின் திட்டமிட்ட கலாச்சார தாக்குதல் இது. கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் நாம் மிருகங்களாக மாற போகிறோமா? இல்லை - இந்த அவமானத்திற்கு எதிராகப் போராடி மனிதர்களாக வாழப் போகிறோமா?

— பச்சையப்பன்

படிப்பகம்

www.padippakam.com



ராஜன் சித்திரவதை - கொலையை மையமாக வைத்து. போலீசு சித்திரவதையில் கொல்லப்பட்ட பேரனைத் தேடும் பாட்டனின் கதையாக 'பிறவி' என்ற மலையாளப் படம் வெளி வந்துள்ளது. தேசிய அளவில் சிறந்த படத்துக்கான விருதும், பாட்டனாக நடித்த 70 வயதான பிரேம்ஜிக்கு சிறந்த நடிகருக்கான விருதும் வழங்கியுள்ளனர். இது தவிர இந்தச் சினிமா பல சர்வதேசத் திரைப்பட விழாக்களிலும் விருதுகள் பெற்றுள்ளன. யதார்த்த வாழ்க்கையில் குற்றவாளிகளைப் பாதுகாத்துப் பதவி உயர்வு தரும் அரசு கதையில் - கலையில் பரிசுகள் கொடுத்து மூற்போக்கு நாடகமாடுகிறது.

# "என் மகன் வருவான்"

"என் மகன் திரும்பி வருவான்" - ஏக்கத்தோடும், நம்பிக்கையோடும், பாசத்தோடும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள் வயதான அந்தத் தாயார். ஆனால் அவளது மகன் போலீசு வெறி நாய்களால் கடித்துக் குதறி மாண்டுபோய் பதினான்கு ஆண்டுகளாகி விட்டன. இந்தச் செய்தியை அந்தத் தாய் நம்பவில்லை.

"நீங்கள் ஏன் அவனுக்குத் திருமண ஏற்பாடு செய்ய மறுக்கிறீர்கள்?" என்று கேட்டு அவளது கணவனிடம் அடிக்கடி சண்டை பிடிக்கிறாள். சாகடிக்கப்பட்ட மகனுக்கு அவர் எப்படித் திருமண ஏற்பாடு செய்ய முடியும்! ஆம்! தன் மகனுக்கு நேர்ந்த சித்திரவதை - சாவு செய்தி கேட்டதில் இருந்து அந்தத் தாய்க்கு சித்த பிரமை ஏற்பட்டுவிட்டது. மகன் வருவான் என்ற நம்பிக்கையில் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள்.

ஆனால் 70 வயதான அவளது கணவரோ தனது மகனுடைய சாவுக்குக் காரணமான கொலையாளிகளை எதிர்த்து நீதிக்காக கடந்த 14 ஆண்டுகளாக மிகுந்த தெளிவோடும் உறுதியோடும் போராடி வருகிறார். அவசர கால பாசிச ஆட்சிக் கொடுமையின் ரத்த சாட்சியமாக உள்ள கேரள ராஜன் கொலை வழக்கு அநேகமாகப் பலருக்கும் நினைவிருக்கும்.

பேராசிரியர் ஈச்சர வாரியார் - ராதா வராசியார் தம்பதியின் ஒரே மகன், கள்ளிக் கோட்டை பொறியியற் கல்லூரி மாணவர் முன்னிலையில் 1976 மார்ச்சு முதல் தேதியன்று ராஜனை போலீசு வெறி நாய்கள் இழுத்துக் கொண்டு போயின. மலைப் பகுதியில் இருந்த காகாயம் சித்திரவதை முகாமில் ராஜனையும் மற்றும் சில தோழர்களையும் மிருகத்தனமாக அடித்து - வதை செய்து கொன்றனர். ராஜனைப் போலீசு வெறிநாய்கள் கவ்விக் கொண்டு போன செய்தி அறிந்து பதறிப்போன ஈச்சர வாரியார் முதல்வராய் இருந்த போலிக் கம்யூனிஸ்டு அச்சுதமேனன், போலீசு மந்திரியாய் இருந்த பாசிச காங்கிரசு கருணாகரன், போலீசுத் துறைச் செயலாளர் ஆகியோரை மாறி மாறிப் பார்த்து மகனை விடுவிக்கும்படி மன்றாடினார். போலீசு காவலில் உள்ள ராஜனை விடுவிப்பதாக எழுத்து பூர்வமாகவே அவர்கள் வாக்குறுதியளிததனர். கொலை செய்த பிறகு வெளியே எப்படி விட முடியும்?

நம்பிக்கையிழந்த ஈச்சர வாரியார், மகனை முன்னிலைப் படுத்தும்படி கேரள உயர்நீதி மன்றத்தில் 1977 மார்ச்சு 25-ந் தேதி வழக்குத் தொடுத்தார். அடுத்த நாள் முதல்வராகப் பதவியேற்ற கருணாகரன சட்டமன்றத்திலேயே "ராஜனைக் கைது செய்யவில்லை" என்று அப்பட்டமாகப் ராஜன், நக்சல்பாரிப் புரட்சியாளர்களின் அனுதாபி என்பதால் காயன்னா போலீசு நிலையத்தின் மீது தாக்குதல் நடத்திய 19 பேர்களில் ஒருவரென கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகிய பலர்

## ராஜன் கொலை வழக்கு புதிய தகவல்கள்

புளுகினார். எழுத்து - நேரடிச் சாட்சிகள் அவர்களுக்கு எதிராக இருக்கவே ராஜனை முன்னிலைப்படுத்தும்படி வழக்கு மன்றம் உத்திரவு போட்டது. சில போலீசு அதிகாரிகளைத் தற்காலிக நீக்கம் செய்து சமாளிக்க முயன்றார், கருணாகரன். பொய்சாட்சி சொல்லியும் கொலையை மறைக்கவும் முயன்ற கருணாகரனுக்கு எதிராக கேரளாவெங்கும் போராட்டங்கள் வெடித்தன. கருணாகரனை விலக்கிவிட்டு யோக்கிய சிகாமணி வேடம் போடும் அந்தோணியை முதல்வராக்கினர். ராஜன் கொலைக்குக் காரணமான, பாசிச மிருகங்களான டி.ஐ.ஜி.க்கள் ஜெ்யராம் படிக்கல், மதுசூதனன், சூப்பிரண்டெண்டுகள் லக்சுமணா, முரளிகிருஷ்ணதாஸ், இன்ஸ்பெக்டர் டி.ஓ.கே.நம்பியார், புலிகோடன் நாராயணன் ஆகியோரைக் கைது செய்தது. பீச்சி அணைக்கட்டிலே பல நாட்கள் ராஜனின் பிணத்தைத் தேடினர்.

இந்த நாடகங்கள் எதையும் நம்பாத ஈச்சர வாரியார் மேற்படி அதிகாரிகள்; ஐ.ஜி.வி.என். ராஜன் உட்பட 45 போலீசார் மீது சட்ட விரோத சிறை, சித்திரவதை, கொலை, சாட்சி தடய அழிப்பு போன்ற பல கிரிமினல் குற்றங்கள் செய்ததாக வழக்குத் தொடுத்தார். கேரள மாநில வழக்கு மன்றங்கள் மீது நம்பிக்கை இல்லையென வாதாடி, கோவைக்கு வழக்கை மாற்றும்படி செய்தனர் போலீசு அதிகாரிகள். அவர்கள் எதிர்பார்த்தபடியே கொலை உட்பட பல கிரிமினல் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துவிட்டு சிறை வைத்ததற்காக ஜெயராம் படிக்கல், நம்பியார், முரளிகிருஷ்ணதாஸ் ஆகிய மூவருக்கு மட்டும் முறையே ஓராண்டு, 6 மாதங்கள், 4 மாதங்கள் என்று கண்துடைப்பு செய்யும் வகையில் சிறைத் தண்டனை விதித்தது, கோவை வழக்கு மன்றம். மற்றவர்களை விடுதலை செய்துவிட்டது.

போலீசு அதிகாரிகள் மேல் முறையீடு செய்யவே மேற்படி தண்டனையையும் 1982-ஆம் ஆண்டு சென்னை உயர் நீதி மன்றம் ரத்து செய்து தீர்ப்பளித்தது.

வழக்கு மன்றங்களே வெட்கித் தலை குனிய வேண்டிய வகையில் தீர்ப்புக்கான காரணங்களை கோவை, சென்னை கோர்ட்டுகள் கூறின: ராஜன் கைது பற்றி ஐந்து வேறுபட்ட சாட்சியங்கள் வந்தன; ராஜன் எங்கு எப்படி சித்திரவதை செய்யப்பட்டார் என்ற சாட்சியங்களில் முரண்பாடுகள் உள்ளன; ராஜனோடு சேர்த்து சித்திரவதைக்குள்ளான ஜோசப் சாலியும், குங்கோடு ராஜனும் வெவ்வேறு தேதிகளைக் கூறுகின்றனர்; ஜோசப் சாலி தனது காயங்கள் பற்றி சிறை மருத்துவரிடம் புகார் கூறாததாலும், சித்திரவதையின் போது அறையில் ஒரு பெஞ்சுதான் இருந்தது என்ற மற்ற சாட்சியங்கள் சொல்லும்போது இரண்டு பெஞ்சுகள் இருந்ததாக குங்கோடு ராஜன் கூறுவதாலும், பிரதியெடுக்கும் இயந்திரம் ஒன்றை நக்சலைட்டு ஆதரவாளர்களுக்கு நன்கொடை அளித்ததை ஒப்புக் கொள்ளும் ஜான் கே.பால் ஒரு குறிப்பிட்ட சித்தாந்தத்தைப் பின்பற்றுபவர் என்பதாலும் அவர்களுடைய சாட்சியங்களை ஏற்க முடியாது; ராஜன் கொல்லப்பட்டதற்கு ஆதார

படிப்பகம்

www.padippakam.com

மாக அவரது உடலைக் கைப்பற்ற முடியா மற்போனது — போலீசு கிரிமினல்களை விடுவிப்பதற்காக இந்தக் காரணங்களைத் தான் நீதி மன்றங்கள் கூறின.

அதோடு, ''உண்மையைக் கண்டு பிடிப்பதற்கான நல்ல நேக்கத்திற்காகத்தான் சித்திரவதை செய்தனர்'' என்று நியாயப்படுத்திய வழக்கு மன்றங்கள், போலீசு கிரிமினல்களின் 'கடமை உணர்வை'ப் பாராட்டின. ''போலீசு நிலையத்தை நக்சலைட்டுகள் தாக்கியது கண்டிக்கத் தக்கது'' என்று வழக்குக்கு சம்பந்தமின்றி தீர்ப்பு எழுதித் தமது நீதி வேடத்தை கிழித்துக் கொண்டன. ராஜன் கொலை விவகாரத்தைத் தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்த போலி மார்க்சிஸ்டுகள் ஒப்புக்கு வழக்காடினரே தவிர போலீசு குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக மேல் முறையீட்டிற்குப் போகவில்லை. அதே சமயம் அந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு அளித்தனர்.

இருந்தபோதும் நீதியை நிலைநாட்டுவதில் உறுதியும் நம்பிக்கையும் இழக்காத ஈச்சார வாரியார் தனது போராட்டத்தைத் தொடர்கிறார். 1982-ம் ஆண்டே புதுடில்லி - உச்சநீதி மன்றத்திடம் மேல் முறையீடு செய்தார். எட்டாண்டுகளுக்குப் பிறகு இம் மாதம் தான் ராஜன் கொலை வழக்கை விசாரனைக்கு எடுத்துக் கொண்டனர். இதே உச்சநீதி மன்றம் தான் பாசிச ராஜீவின் கூட்டாளியும், மூன்றாவது பெரிய தரகு அதிகார முதலாளியுமான அம்பாணி ஆலைகளை விழுங்கும் வழக்கை விடுமுறை நாளில், 'நீதி'பதியின் வீட்டிலேயே அரைமணி நேரத்தில் விசாரித்து சாதகமான தீர்ப்பு வழங்கியது.

திட்டமிட்டு, சட்டவிரோதமாகக் கைது செய்து, சித்திரவதை - கொலை செய்தனர் என்று நிரூபித்த பிறகு, பிணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்பது கொலையாளிகள் தப்பித்துக் கொள்ள தகுந்த காரணமாகுமா? ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் ஆதரவாளர்கள், அதன் சித்தாந்தத்தை நம்புகிறவர்கள் என்பதற்காக சாட்சியங்களை நிராகரிக்க முடியுமா? சித்திரவதை நடந்த அறையில் எத்தனை பெஞ்சுகள் இருந்தன போன்ற சில்லறை முரண்பாடுகளைக் காட்டி சாட்சியங்களை நிராகரிப்பது சரியா? ஒரு கைதி கடைசியாக யாருடைய காவலில் இருந்தாரோ அவர்களால் கொல்லப்பட்டதாக ஏன் கருதக் கூடாது? - இப்படி அடிப்படையான பல கேள்விகளை ஈச்சர வாரியார் எழுப்புகிறார்.

இதற்கிடையே ராஜன் கொலைக்கு 7 லட்சம் ரூபாய் நட்ட ஈடு கோரி அரசுக்கும், போலீசு கொலையாளிகளுக்கும் எதிராக ஈச்சர வாரியார் தொடுத்த தனி வழக்கில் கள்ளிக்கோட்டை வழக்கு மன்றம் தீர்ப்பளித்துள்ளது. 3.72 லட்சம் ரூபாய் நட்ட ஈடும் 6 சதவிகித வட்டியும் சேர்த்து ஏறக்குறைய 7 லட்சம் ரூபாய் அரசும், 5 அதிகாரிகளும் தர வேண்டும்; அரசு அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று தீர்ப்பாகியது. ''ராஜன் சாவுக்குக் காரணமான போலீசு நடவடிக்கை அதன் சுய அதிகாரத்துக்கு உட்பட்டது; வழக்கு - தண்டனைக்கு அப்பாற்பட்ட சுய அதிகாரம் அரசுக்குள்ளது; எனவே நட்ட ஈடு தரவேண்டியதில்லை'' என்று தான் போலிக் கம்யூனிஸ்டுகளின் கூட்டணி அரசு வாதாடி வருகிறது. ஆனால் மேலும் அம்பலப்பட்டுப் போய் விடுவோம் என்றஞ்சி மேல் முறையீடு செய்யவில்லை. நட்ட ஈடு தரவேண்டிய 5 அதிகாரிகளும் தமது குற்றங்கள் அனைத்தையும் மறுத்து திருவனந்தபுரம் உயர்நீதி மன்றத்துக்குப் போயுள்ளனர்.

தனது ஒரே மகனைப் பறிகொடுத்து விட்ட துயரம்; அதனால் சித்தப் பிரமை பிடித்துப்போன மனைவி; தள்ளாத 70 வயது முதுமை - இத்தனையையும் சுமந்து கொண்டு நாட்டின் பல வழக்கு மன்றப் படிகட்டுகளில் ஏறி இறங்கி அலைகிறார் ஈச்சர வாரியார். 14 ஆண்டுகள் மிகவும் உறுதியான பலரின் நம்பிக்கையையும் எளிதில் முறித்துவிடக் கூடும். ஆனால் ஈச்சர வாரியார் தளர்ந்து விடவில்லை. தன்னால் முடிந்த அளவு, சட்ட பூர்வமான வழியில் தான் போராடுகிறார்.

என்றாலும் ஈச்சர வாரியார் தொடரும் இப்போராட்டம் அவருக்கு, அவருடைய மகனுக்கு எதிராக கொடுமை செய்துவிட்டார்கள் என்கிற நியாயமான ஆத்திரத்தினால் மட்டுமா? இல்லை சில அதிகாரிகளுக்கு சிறைத்தண்டனை கிடைத்தால் ஏற்படும் பழிவாங்கி விட்ட மனநிறைவு; சில லட்சங்கள் கிடைத்தால் அமையும் வசதிகள் இவற்றுக்காகவா போராடுகிறார்? இல்லை. ''அடக்குமுறை அநீதிகளுக்கு அடிபணிந்து விடாதீர்கள்! அற்பப் புழுக்களாக மாறிவிடாதீர்கள்!! நீதிக்குப் போராட தயங்காதீர்கள்!!!'' என்று அறிவுறுத்துகிறார் அந்தப் பேராசிரியர். பாசிசக் கொடுங்கோன்மைக்கு எதிராக அழிக்க முடியாத ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்புகிறார். ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் அமைக்கும் ஆட்சி, கொலை வெறி பிடித்த போலீசு, சட்டவாத சகதிக்குள் மூழ்கிக் கிடக்கும் வழக்கு மன்றங்கள் ஆகியன அடங்கிய இந்த அரசு எந்திரம் முழுவதையுமே அம்பலப்படுத்திக் காட்டுகிறார்.

● மணி

## கொலையாளிகளிடம் கருப்புப் பணம்

ராஜன் சித்திரவதை - கொலையின் பிரதான குற்றவாளிகளான அதிகாரிகள் பலரும் தப்பித்துக் கொண்டதோடு பதவி உயர்வும் பெற்று மேலும் பல கிரிமினல் குற்றங்களைத் தொடர்கின்றனர். ஜெயராம் படிக்கலும் மதுசூதனனும் ஐ.ஜி.க்களாகி விட்டனர். லக்சுமணா டி.ஐ.ஜி.யாகவும், புலிகோடன் நாராயணன் சர்க்கிள் இன்ஸ்பெக்டராகவும் உள்ளனர். மதுசூதனன் வீட்டில் சமீபத்தில் நடந்த சோதனையின் போது முறைகேடாகச் சேர்த்த லஞ்ச-கருப்புப் பணம் பல லட்சம் ரூபாய் பிடிபட்டது.

ஜெயராம் படிக்கல் வீட்டில் மட்டும் 26 லட்சம் ரூபாய் பிடிபட்டது. மதுசூதனன் மட்டும் விடுப்பில் போய்விட்டார்.

## போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் இரட்டை நாக்கு!

ராஜன் சித்திரவதை - கொலை வழக்கு பாசிச இந்திரா அரசின் கொடுமையை மட்டுமட்டுமல்ல, இரு போலிக் கம்யூனிஸ்டு கட்சி அரசுகளின் முற்போக்கு வேஷத்தையும் கலைக்கிறது. பிற்போக்கு சக்திகளை ஒடுக்குவதற்காக இந்திரா மேற்கொண்ட முற்போக்கு நடவடிக்கைதான் என்று சித்தரித்தது வலது போலிக் கம்யூனிஸ்டுக் கட்சி. அதன் அச்சுதமேனன் தலைமையிலான கூட்டணி அரசு கேரளாவில் பயங்கரமான சித்திரவதை முகாம்களை அமைத்து புரட்சியாளர்களை நரவேட்டையாடியது.

பொதுவாக அவசரகால ஆட்சிக் கொடுமையையும், குறிப்பாக ராஜன் சித்திரவதை - கொலையையும் நாடகங்கள், கருத்துப் படங்கள் என்று பலவாறு தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன் பயன்படுத்திக் கொண்ட 'இடது' போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தால் குற்றவாளிகளைத் தண்டிப்போம் என்று வாக்குறுதி அளித்தனர். ஆட்சிக்கு வந்த பிறகு ராஜன் வழக்கை ஒப்புக்கு நடத்தியது. 'இடது' சாரி கூட்டணி அரசு. விடுவிக்கப்பட்ட போலீசு குற்றவாளிகளுக்கு எதிரான வழக்கில் மேல் முறையீடும் இல்லை; அந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வும் கொடுத்துக் கௌரவித்தது. இதே போலத்தான் கேரள - தங்கமணி கிராமத்தில் போலீசு நடத்திய கற்பழிப்புகளை தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்ட போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தனர். தங்கமணி கிராம கற்பழிப்புகளை விசாரித்த ஸ்ரீதேவி கமிஷன் தீர்ப்பு வந்து இரண்டு ஆண்டுகளாகியும் போலீசு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

ஜனநாயக, குடியுரிமைகள், மனித உரிமைகள் பேசும் போலிகள், ராஜன் சித்திரவதை - கொலைக்கு நட்ட ஈடுகோரும் வழக்கில் என்ன சொன்னார்கள் தெரியுமா?

''கொலைக்குக் காரணமான சித்திரவதை நடவடிக்கை போலீசு மற்றும் அரசின் சுயாதிகாரத்துக்கு உட்பட்டது; வழக்காடவோ - தண்டிக்கவோ யாருக்கும் உரிமை கிடையாது'' என்று எதிர்த்தனர்.

காகாயம் கிராமத்தில் ராஜனுக்கு நினைவுச் சின்னம் நிறுவினார்கள், புரட்சியாளர்கள். அதை போலிக் கம்யூனிஸ்டுகள் தகர்த்தனர். மீண்டும் நிறுவ முயன்றபோது அவர்களை அடித்து விரட்டியதோடு ராஜன் சிலையைக் கைப்பற்றிக் கொண்டனர். காகாயம் கிராமத்துக்குள் பரட்சியாளர்கள் நுழையவே தடை விதித்தனர். ராஜன் கதையை அடிப்படையாகக் கொண்ட 'பிறவி' சினிமாவுக்கு பல தேசிய - சர்வதேசிய விருதுகள் கிடைத்த போதும், கேரள அரசு உதாசீனப்படுத்தியது.

படிப்பகம்

www.padippakam.com



உல்லாச நகர நில ஆக்கிரமிப்புக்கெதிராக விவசாயிகளின் ஆர்ப்பாட்டம்.

# எய்ட்ஸ் கலாச்சாரத்துக்கு முன்னோட்டம்

விவசாயிகளைக் காப்பதற்காகவே அவதாரம் எடுத்ததாகக் கூறிக்கொள்ளும் துணைப் பிரதமரும், மத்திய விவசாய அமைச்சருமான தேவிலால் தனது அரியானா மாநில முதல் அமைச்சர் பதவியை தம் மகனுக்குச் குட்டிவிட்டு மத்திய மந்திரியானார்.

அரியாணையேறிய ஓம்பிரகாஷ் சௌதாலா நிலபேர ஊழலில் பிள்ளையார் சுழி போட்டு தமது ஆட்சி அதிகாரத்தைத் துவக்கினார். அரியானா - பரிதாபாத், குர்கான் மாவட்டங்களில் பினாமிகள் மூலம் நிலங்களை வளைத்தார். ஊழல் அம்பலமான பிறகும் அவர் அசரவில்லை. மாறாக, அடுத்தகட்டமாக, இப்போது 28, 341 ஏக்கர் நிலப்பரப்பில், 'சுற்றுலா மையம்' என்ற பெயரில் நகல் திட்டம் ஒன்று நீட்டியிருக்கிறார்.


இந்தியாவின் 'டிஸ்னி லேண்ட்' என்று வர்ணிக்கப்படும் இந்த பிரமாண்டமான சுற்றுலா மையம் அமைக்க 2000 கோடி ரூபாய் செலவில் ஆரம்ப கட்டுமான திட்டமும் தயாராகிவிட்டது. காங்கிரசு மந்திரிகளே செய்யத் துணியாத மிகப்பெரும் முகமூடிக் கொள்ளை திட்டம் இது.

இந்திராவின் அரசியல் பூசாரியும் டில்லி தர்பாரின் அப்போதைய ராஜரிஷியுமான திரேந்திர பிரம்மச்சாரி, இளவல் சஞ்சய்காந்தி மூலமாக இப்படியொரு திட்டத்தை முன் வைத்தார். அப்போது கூட அவர்கள் இவ்வளவு பெரிய திட்டத்தை துவக்கத் துணியவில்லை. ''பொழுது போக்கு பூங்கா'' என்று 1000 ஏக்கர் பரப்பளவுக்குத்தான் அடிபோட்டார்கள். அரியானா மாநில காங்கிரசு பெருச்சாளி பன்சிலால் கடைசி நேரத்தில் அரசியல் எதிர்ப்புக்கு அஞ்சி '86ல் அத்திட்டத்தையும் கிடப்பில் போட்டார்.

அதன்பிறகு ஆட்சியைப் பிடித்த தேவிலால், காங்கிரசின் ஊழல் ஐந்து நட்சத்திர கலாச்சாரத்திற்கெதிராக சவடால் அடித்துக் கொண்டே தம் பையை நிரப்புவதிலும், அரண்மனை சுகத்திலும் குறியாய் இருந்தார்.

மின்சாரம், குடிநீர், நில அமைப்பு, சாதகமற்ற கற்பாறைகள் நிரம்பிய சுராஜ் குந்த் பேத்கஷால் ஏரிக்கு இடையில் இருந்த பன்சிலால் பூங்கா நகல் திட்டத்தை குர்கான் மாவட்டத்திற்கு மாற்றினார். டில்லியிலிருந்து 64 கி.மீ. தூரத்திலுள்ள டேம் டேமா ஏரியை ஒட்டி பசுமையான பகுதியைத் தேர்ந்தெடுத்தார். 1500 ஏக்கர் பரப்பளவுக்கு திட்டத்தை விரிவாக்கினார். 'பொழுது போக்கு பூங்கா' என்ற திட்டத்துடன் 'ஆய்வுப் பூங்கா' என்றும் பெயரிட்டார். எதிர்ப்பாளர்கள் குழம்பிப் போனார்கள். தேவிலால் டில்லி தர்பாரைப் பிடித்தவுடன் அவரது மகன் திட்டத்தை விரைவுபடுத்தினார். ஊழல் திட்டத்தையும் இருமடங்காக்கினார்.

ஏறக்குறைய ஒவ்வொரு பக்கமும் 10.5 கி.மீ. தூரத்தை தனது எல்லைகளாகக் கொண்ட இந்நிலப்பரப்பை குட்டி ஹாங்காங்காக, ரகசிய உலக கிரிமினல்களின் உல்லாசபுரியாக மாற்றுவதுதான் இக்கும்பலின் மைய நோக்கம். இன்னும் இதில் ஏராளமான நீண்ட கால திட்டங்களும், அரசியல் திட்டங்களும் உள்ளடங்கியிருக்கின்றன. அதற்குமேல், நில பேரத்தின் மூலம் கணிசமான தொகையும், அந்நிய வங்கிகளில் டாலர்களாக குவிப்பதற்கும், இதில் வழியிருக்கிறது.




ஆரம்ப கட்டுமானம் 2000 கோடி ரூபாய் செலவில் 5 சதவிகிதம் கமிஷன் என்றாலும் 100 கோடி ரூபாய் துண்டாக கிடைத்துவிடும் என்று எழுதுகின்றன முதலாளித்துவ பத்திரிக்கைகள். அடுத்து, அதில் முதலீடு செய்ய அந்நிய நாடுகளில் இருக்கும் இந்திய பண முதலைகள் (NRI) மற்றும் அவர்கள் மூலமாக ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதின் மூலம் அதில் கிடைக்கும் கமிஷன், நேரடியாக தேவிலால் குடும்பத்தின் வெளிநாட்டு வங்கியிருப்புகளாக மாறும்.

ஏற்கனவே சௌதாலாவால் குர்கான் மாவட்டத்தில் நில பேரத்தில் நிலங்கள் வளைத்துப் போடப்பட்டவை அனைத்தும், இந்த சுற்றுலா திட்டத்தை சுற்றியிருக்கின்றன. ஏக்கர் 20,000 ரூபாய் என்று பத்திரம் பதிவு செய்யப்பட்ட அந்நிலங்கள் இப்போது, இத்திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு ஒரு ஏக்கர் ரூ.6 லட்சம் ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது.

மறுபுறம் டில்லியை விரிவுபடுத்துவது எந்த பக்கம் என்பதில், ஏற்கனவே பல ஓட்டுசீட்டு கட்சி தலைவர்களுக்குள் போட்டியிருக்கிறது. இதில் உ.பி. மாநில அரசியல் கும்பல் செல்வாக்கு செலுத்துகிறது. அதன் எல்லையை நோக்கி டில்லியை விரிவுபடுத்துவதன் மூலம், தம் மாநிலத்திற்கு 'அந்தஸ்த்து' கிடைக்கும் என்று அவர்கள் முண்டியடிக்கிறார்கள். தேவிலால், முந்திக் கொண்டு இந்த சுற்றுலா மையத்தை நிறுவுவதன் மூலம் அரியானா நோக்கி டில்லியை விரிவுபடுத்துவதில் வெற்றி பெற்றிருக்கிறார்.

கடைசியாக கொசுறாக ஒரு லாபமும் உண்டு. 'பூங்கா' அமையப் போகும் இடத்தில், 14,381 ஏக்கர் பண்ணை நிலம் இருக்கிறது. இதில் 7,000 ஏக்கர் தனியாருக்குச் சொந்தமானவை. அதாவது காங்கிரசு பெருச்சாளிகள் ஏற்கனவே வளைத்துப் போட்டுள்ள இடம் இது. குறிப்பாக, தேவிலாலின் ஜாட் சாதியினருக்கு எதிரான முந்தைய காங்கிரசு மந்திரியான, குஜ்ஜார் சாதி ராஜேஷ் பைலட் கும்பலுக்கு சொந்தமானது. காங்கிரசுக்கு ஓட்டுப் போட்ட அக்கும்பலுக்கு பாடம் புகட்ட, அந்நிலங்களை ஆக்கிரமிப்பது என்பது தான் இவர்களின் திட்டம்.

இவை அனைத்தும் தெரிந்திருந்தும், தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் 'தோழமை'க் கட்சிகள் கண்களை இறுக மூடிக் கொண்டன. பிப்ரவரி மாதம் இறுதியில் நடக்கும் பல மாநிலங்களின் சட்டசபை தேர்தல் வெற்றிகளை இது பாதித்துவிடும் என்று அஞ்சி தாவு (பெரியப்பா) தேவிலாலின் ஊழலை விமர்சிக்கவும் அஞ்சுகின்றனர்.

இங்கு, 28,341 ஏக்கர் பசுமை நிலமும், 2000 கோடி ரூபாய் ஆரம்பச் செலவும் ஊழல் - கொள்ளையை மட்டும் உருவாக்கப் போவதில்லை. மேற்கத்திய நாடுகளின் கழுத்தை நெறிக்கும், ஆபாசம், வக்கிரம், எய்ட்ஸ் கலாச்சாரமும் இந்திய மக்களைத் தீண்டி சீரழிக்க சட்டப்பூர்வமாக கதவைத் திறந்து விட போகிறார்கள், தேசிய முன்னணி ஆட்சியாளர்கள்.

— குணசேகரன்

படிப்பகம்

www.padippakam.com

# சாதி மாநாடுகளின் முழக்கங்கள்: 'பு.ஜ' மீதான அவதூறுகளுக்குப் பதில்

"இட ஒதுக்கீடு ஆதரவும் எதிர்ப்பும்: மேல் சாதியினரிடையே பதவிக்கான போட்டி" என்றொரு கட்டுரையை கடந்த ஜனவரி புதிய ஜனநாயகம் இதழில் எழுதியிருந்தோம். அதிலேயே, "தி.க.வின் சாதிவெறி! 'பார்ப்பானை விரட்டுவோம்' 'பாப்பாத்தியைத் தேசிய மயமாக்குவோம்' என்ற கோஷங்களுடன் தி.க.வினர் ராமனின் பூணூலை அறுத்தனர்" என்கிற பெட்டிச் செய்தியும் எழுதினோம்.

சென்னை புதிய ஜனநாயகம் வாசகர் வட்டத்திற்கு வந்த ஓரிரு தோழர்கள் இது குறித்துக் கடுமையாகச் சாடி சில கருத்துக்களைக் கூறியதோடு அவதூறாகவும் பேசியுள்ளனர். "தி.க. மாநாட்டுக்கு முதல் நாள் நடந்த திருச்சி பார்ப்பன மாநாட்டிலும் ஊர்வலத்திலும் 'வீரமணியை அடிப்போம்' என்றும் 'வீரமணி மனைவியைக் கற்பழிப்போம்' என்றும் பார்ப்பனர்கள் கோஷங்கள் போட்டுள்ளனர். அந்தச் செய்தியையும் வெளியிடாமல் வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்துவிட்டீர்கள். புதிய ஜனநாயகம் ஆசிரியர் குழுவிலேயே பார்ப்பன ஆதிக்கம் இருக்கிறது. அதனால்தான் இப்படி எழுதியுள்ளீர்கள்" அவர்கள் கூறியுள்ளனர். இதற்கெல்லாம் பொறுமையோடும், பொறுப்போடும் நமது தோழர்கள் பதிலளித்துள்ளனர். அதே சமயம் மேலும் விளக்கமளிக்கும்படி புதிய ஜனநாயகத்திடம் கோரியுள்ளனர்.

தி.க. மாநாட்டிலும் ஊர்வலத்திலும் மேற்படி முழக்கங்கள் போட்டதையும், பூணூலை அறுத்ததையும் பார்ப்பனரல்லாத பத்திரிக்கைகளும், நபர்களுமே சொன்னார்கள். நமது தோழர்களும் உறுதிப்படுத்தினார்கள். வீரமணியே பார்ப்பன வெளியேற்றம், பூணூல் அறுப்பு, பாப்பாத்தி சோரம் போவது ஆகியன பற்றி மாநாட்டிலேயே பேசியதாக விடுதலையிலேயே வந்தது. எனவேதான் மேற்படி பெட்டிச் செய்தி வெளியிட்டோம். அதேசமயம் பார்ப்பன மாநாட்டிலும் ஊர்வலத்திலும் ஆபாச, வன்முறை முழக்கமிட்டதாக விடுதலையில் மட்டுமே பார்த்தோம். பார்ப்பனரல்லாத - ஆதித்தன் குடும்ப ஏடுகளில் கூட தேடினோம். கிடைக்கவில்லை. தி.க.வினர் இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றனர் என்பதாக பார்ப்பன ஏடுகளில் பார்த்தோம். போலீசு - உளவுத் துறையை வைத்துள்ள 'திராவிட அரசின்' முதல்வர் கருணாநிதியே, 'வீரமணி விடுதலையில் அப்படி எழுதியுள்ளார்' என்றுதான் பேட்டி கொடுத்தார். வீரமணி மனைவி பற்றி பார்ப்பனர்கள் முழக்கமிட்டதாக 'விடுதலை' நிருபர்தான் கருணாநிதியிடம் கேட்டவர். இதற்கும் 'விடுதலை' யிலேயே ஆதாரம் உள்ளது. ஆகவே உறுதிப்படுத்த இயலாத நிலையில்தான் பார்ப்பனர்கள் போட்டதாகக் கூறப்படும் முழக்கங்களை நாம் எழுதவில்லை. மற்றபடி வேண்டுமென்றே ஒரு சார்பாக எழுதும் எண்ணம் எதுவும் கிடையாது.

பிறகு, சண்டே மெயில், டெக்கான் ஹெரால்ட் ஆகிய பத்திரிக்கைகளில் வீரமணி, பார்ப்பன சங்க தலைவர் ஆகிய இருவரையும் பேட்டி கண்டு எழுதியதைப் பார்த்தோம். (இந்த நிருபர்களை மட்டும் 'பார்ப்பன நண்பர்கள்' என்று வீரமணி ஏற்றுக் கொள்கிறார்) அவற்றின்படி பார்ப்பன "ஊர்வலத்தின் இறுதியில் சிலர் வன்முறை முழக்கமிட்டனர்; நாங்கள் போய் அடக்கிவிட்டோம்" என்று அதன் தலைவரே ஒப்புக் கொண்டுள்ளார் என்பதை அறிந்தோம். பார்ப்பனர்கள் ஆபாச, வன்முறை முழக்கமிடமாட்டார்கள் என்பதல்ல நமது கருத்து. முழக்கமிடுவது மட்டுமல்ல; நேரடியாகவே பிற சாதியினர் மீது வன்முறைத் தாக்குதல்கள் நடத்துபவர்கள்தான். வேறெதற்கு ஆர்.எஸ்.எஸ். ஆயுதப் பயிற்சி எல்லாம்! பார்ப்பன சடங்கு சாத்திரங்களிலும் புராண இதிகாசங்களிலும் தகாத உறவுகொள்ளும் ஆபாசங்களும், பெண்களையும் பிற சாதியினரையும் ஆபாசமாக ஏசுவதும் தானே உள்ளன! ஆனால் இந்த மாநாட்டிலும் ஊர்வலத்திலும் என்ன முழக்கமிட்டார்கள் என்பதை உறுதிசெய்ய இயலாமல் போனது என்பதுதான் உண்மை.

"விடுதலையில் வந்ததை ஏன் ஆதாரபூர்வமாக எடுத்துக் கொள்ளக்கூடாது" என்று அந்தத் தோழர்கள் கேட்கிறார்கள். வீரமணியும் விடுதலையும் புளுகக்கூடியவர்கள் என்பதால் தான் அவ்வாறு செய்யவில்லை. ஜனவரி 27ந் தேதி சென்னை பெரியார் திடலில் செய்தியாளர்களிடையே பேசிய வீரமணி, "என்னைக் கொல்வதாக தொலைபேசி மூலம் மிரட்டினார்கள். நாளைக்கே அதிலே அவர்கள் வெற்றி பெறக்கூடும். இதுவே என்னுடைய மரண சாசனமாக இருந்தால்கூட நீங்கள் ஆச்சரியப்படாதீர்கள். ஆனால் மரண வாக்கு மூலம் சொல்லுகிறவன் எவனும் பொய் சொல்ல மாட்டான். நான் பேசுவது உண்மை" என்று சத்தியம் செய்தார். உடனேயே, "உண்மையில் திருச்சி மாநாட்டின் போது பூணூல் அறுப்பு நிகழ்ச்சிகள் எதுவும் நடக்கவில்லை. நடந்ததாக உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டார்கள்" என்று அப்பட்டமாகப் புளுகியுள்ளார். அதேபோல ஆபாசமாக தி.க.வினர் கோஷங்கள் போடவே இல்லை என்றும் சாதித்தார்.

"பார்ப்பனர்களின் வன்முறை - ஆபாச கோஷங்கள், பேச்சுக்களைக் கேட்டு ஆத்திரமுற்ற சில தி.க. தொண்டர்கள் நடவடிக்கைகளில் இறங்கிவிட்டனர்" என்று சிலர் நியாயப்படுத்துகின்றனர். மாநாடுகளுக்கு முன்பே தி.க.வினரது ஆத்திரத்தைத் தூண்டும் வகையில் விடுதலையில் எழுதி வந்தனர். "பார்ப்பன மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் தமிழர்களாக இருக்க முடியாது! அவர்கள் உடம்பில் ஓடுவது தமிழ் ரத்தமாகவும் இருக்க முடியாது!" என்று விடுதலை எழுதியது. "பார்ப்பனனே வெளியேறு என்ற முழக்கம் எங்கெங்கும் ஒலிக்கட்டும்! பூணூல் அறுக்கக்கூடிய இயக்கங்கள் தமிழ்நாட்டில் வந்தால், பார்ப்பனர்களே! அதற்கு இப்பொழுதே தயாராகிக் கொள்ளுங்கள். தரக்குறைவாக கோஷம் போட வேண்டாம்; நம்முடைய இளைஞர்கள் பூணூலை அறுப்போம், சாதிச் சின்னத்தை அழிப்போம் என்று சொல்லுங்கள். 'பால்கனிப் பாவையர் அல்ல எங்கள் சமுதாயப் பெண்கள். சாளரத்தில் நின்று ஜாடை காட்டக்கூடிய சமுதாயம் எங்களுடைய சமுதாயம் அல்ல. இது இனமானமுல்ல சமுதாயம்" என்று மாநாட்டிலேயே பேசி வீரமணி வழிகாட்டியுள்ளார் (ஆதாரம் விடுதலைதான்)

ஒன்று மட்டும் சொல்வோம்! எதிராளி உங்கள் பெண்களைக் கற்பழிப்போம் என்று சொன்னால் அவன் பூணூலை அறுக்காதே! நாவை அறுத்தெறி! உங்கள் பெண்களைக் கற்பழிக்க முயன்றாலோ, முடிந்தாலோ வெளியேற்றுவோம் என்று சொல்லாதே! அவனை வெட்டிப் போடு! அதை விட்டுவிட்டு எதிராளியின் பெண்களைக் கற்பழிப்போம் என்று முழக்கமிடுவதும், கற்பழிப்பதும் பகுத்தறிவுக்கும், பண்பாட்டிற்கும் ஏற்புடையதல்ல. ஒரு நாகரிகம், ஒரு குற்றம், மற்றதற்குத் தீர்வாகிவிடாது!

"புதிய ஜனநாயகம்" ஆசிரியர் குழுவிலேயே பார்ப்பன ஆதிக்கம் நிலவுகிறது என்கிற அவதூறு பற்றி: புரட்சிகர அமைப்புகளில் யார்யார் உள்ளனர், என்ன பங்கு வகிக்கின்றனர் என்பதை அறியாமலேயே, "அதிலும் பார்ப்பன ஆதிக்கம் தான்! எச்சரிக்கையாய் இருங்கள்! சாருமஜூம்தாரே ஒரு பார்ப்பான்தான்!" என்று ஆரம்பம் முதலே அவதூறு செய்து வருகிறார்கள், தி.க.வின் பகுத்தறிவுக் கொழுந்துகள். 'புதிய ஜனநாயகம்' கடந்த நான்காண்டுகளில் எவ்வளவு தூரம் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து அம்பலப்படுத்தி வந்திருக்கிறது என்று நீண்டதொரு பட்டியலே தர முடியும். குறிப்பாக, தி.க.வே பயந்து ஒதுங்கிவிடும் டி.வி.எஸ். நிறுவனத்தை அம்பலப்படுத்தினோம். போலிக் கம்யூனிஸ்டு தலைவர் எழுதிய 'ஆரிய மாயையா? திராவிட மாயையா?' என்ற பார்ப்பன சார்பு நூலை விமர்சித்து நீண்ட தொடர் எழுதினோம். விவகாரத்தில் உள்ள தி.க. மாநாட்டுச் செய்திக்கு முந்திய இதழில்கூட "வானொலி, தொலைக்காட்சி சுயாட்சி: மூளைச் சலவை" என்ற அட்டைப்படக் கட்டுரையில், பார்ப்பன ஆதிக்கத்தைக் குறிப்பாகச் சாடியுள்ளோம். கடைசியாக வந்த 'புதிய ஜனநாயகம்' இதழில்கூட ராஜீவ் ஆட்சியிலும், வி.பி.சிங் ஆட்சியிலும் முக்கிய அரசு உயர் அதிகாரிகளாகப் பார்ப்பனர்கள் நியமனம் பெற்று ஆதிக்கம் வகிப்பது பற்றி விரிவாக எழுதினோம். இதையெல்லாம் வரவேற்றவர்கள், இப்போது தி.க.வினரை விமர்சித்து ஒரு செய்தி வந்ததும் பார்ப்பன ஆதிக்கம் என்று குதிக்கிறார்கள். இவர்களிடமும் தி.க.வின் சாதிவெறி நீடிப்பதுதான் இதற்குக் காரணம்.

— ஆசிரியர் குழு

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியமகன். 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்பார்களே தெரியுமா? அது இதுதான்! வாய்யெல்லாம் பல்லாக 'ஏரோபிளான் கேக்' வெட்டுபவர்கள், பாசிச ராஜீவ் அரசின் மந்திரிகள், அதிகாரிகள். கடந்த மாதம் பெங்களூரில் விழுந்து நொறுங்கிய ஏ-320 என்ற விமானத்தை 'டஜன்'கணக்கில் பிரான்சு - பன்னாட்டு நிறுவனத்திடமிருந்து கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வாங்கிய போது இப்படி கொண்டாடி மகிழ்ந்தது ராஜீவ் பட்டாளம்.

ஒரு விமானம் ஏறக்குறைய 56 கோடி ரூபாய். இவ்வாறு 36 விமானங்களுக்கு ஒப்பந்தம் போட்டு 14 விமானங்களை அவசர அவசரமாக வாங்கியது, ராஜீவ் கும்பல். தேர்தல் செலவுக்கு பலநூறு கோடி ரூபாய்களை கொட்ட வேண்டியிருக்கும் என்பதை முன்கூட்டியே கணக்கிட்டு பூனையை யானை விலைகொடுத்து ஓட்டி வந்தது ராஜீவ் கும்பல்.

இதோ, பரிதாபகரமாக அப்பளம் போல் விழுந்து நொறுங்கிக் கிடக்கும் விமானத்தைப் பாருங்கள்! 'ஏர்பஸ் ஏ-320'ஆ.. கொக்கா..? அதன் மொத்த இயக்கமும் கம்ப்யூட்டரால் கட்டுப்படுத்தப் படுகிறது என்று வாயைப் பிளந்தார்கள். இப்போது, அதே அதிகார வர்க்க வெள்ளை யானை வேறு மாதிரி புளுகுகிறது. 'தூசுகள் நிறைந்த, ஈரப்பதமற்ற இந்திய சுற்றுச் சூழலுக்கு இந்த கம்ப்யூட்டர் விமானம் சரிப்பட்டு வராது. தவிர அதற்குண்டான பயிற்சியை 'பைலட்டு'களுக்குத் தரவேயில்லை. 'விமான ஓடு பாதை, விமான கட்டுப்பாடு அறை, சாதனங்களை அதற்கேற்ப நவீனப் படுத்தவில்லை' என்கிறார்கள்.

இதில் கொடுமை என்னவென்றால், அவ்விமானத்தை தயாரிக்கும் பிரான்சு நாட்டிலேயே இவ்விமானங்களை உபயோகப் படுத்தியதில் 56 விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற விபரம் இப்போது அம்பலத்திற்கு வந்திருக்கிறது. பெங்களூர் விபத்திற்கு பிறகு அதே வகை விமானத்தில் பறந்து கொண்டிருந்த பயணிகள், திடீரென மூச்சுவிட முடியாமல் அலற, உடனடியாக தரையிறக்கி விபத்தை தவிர்த்தார்கள். குறிப்பிட்ட உயரத்தில் பறந்துக் கொண்டிருக்கும் போது, விமானத்தின் உள்ளே 'ஆக்ஸிஜன்' அளவு 'தற்செயலாக' குறைந்து விட்டதாம். இப்போது, அனைத்து ஏர்பஸ் ஏ-320 விமானங்களையும் தரையிறக்கி முடக்கிவிட்டார்கள். பல நூறு கோடி ரூபாய் பயனேதும் இல்லாமல் கரியாகிவிட்டது! அவ்வளவும் மக்களின் வரிப்பணம்!

அரியணையேறும் ஆட்சியாளர்களுக்கு எல்லாம் பெருமாள் மாடு மாதிரி தலையாட்டி 'ஆலோசனை' வழங்கி கூட்டு கொள்ளையடிக்கும் அதிகார வர்க்கம் தப்பித்துக் கொண்டது. பயணிகள் உயிரும், மக்களின் வரிப்பணமும், 'விபத்தில்' சிக்கி 'எமலோகம்' போனது. நாட்டு முன்னேற்றத்திற்காக, மண்ணெண்ணெய்க்குக் கூட வரிகட்டும் மக்களின் கும்பி காய்ந்து கிடக்கிறது. ஆண்டுதோறும் மக்களின் மீது ஏற்றப்படும் இந்தச் சுமைகளுக்கு கணக்கு தீர்ப்பது எப்போது?

